# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 19 சனிக்கிழமை (01-04-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:44


பிந்திய செய்தி

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இன்று அவசரமாகக் கொழும்பு விஜயம்!



கொழும்பு,ஏப்1

இலங்கை இனப்பிரச்சினையில் தற்போதுற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் யுத்தப் பேரழிவு நிலைமை ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக -

... தரப்புக்கும் விடுதலைப் புலிகள் தரப்புக்கும் இடையில் இடைக்கால இணக்கம் ... மோதல் தவிர்ப்பு நிலைமையை ஏற்படுத்தும் நோக்குடன் -

...தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்... அவசர விஜயமாக இன்று கொழும்பு வருகிறார்.

கொழு... நம்பிக்கையான வட்டாரங்கள் இன்று அதிகாலை இத்தகவலை வெளியிட்டன.

யாழ்.குடாநாட்டில் தீவிரமடைந்துவரும் யுத்தத்தால் பெரும் மனிதப் பேரழிவு ஆபத்து உள்ளது என்று சில சர்வதேச அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் -

அத்தகைய அமைப்புக்களின் முன்முயற்சி மற்றும் தலையீடு காரணமாகவே இது விடயத்தில் ஜோர்ஜ் பெர்னாண்டசின் பங்களிப்புக்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்து அவருக்கு அழைப்பு விடுத்ததாகவும் - அவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

இன்று கொழும்பு வரும் அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இன்றே புதுடில்லி திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர் கொழும்பில் யாரைச் சந்திப்பார், என்னென்ன விடயங்கள் குறித்து பேச்சு நடத்துவார் என்ற விவரங்கள் தெரியவரவில்லை. (உ)

## புலிகள் தரப்பில் 31 பேர் உயிரிழப்பு

தொடரும் ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின்போது தமது தரப்பில் மேலும் 31 பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 12 பேர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் "புலிகளின் குரல்" வானொலி மேலும் தெரிவித்தது.

## ஜீ.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் புதனன்று

நேற்று வெளியாகும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்ட ஜீ.சீ.ஈ (சாதாரண) தரப்பரீட்சை முடிவுகள் எதிர்வரும் புதன்கிழமையே வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

# வடக்கில் இருந்து ராணுவத்தை அரச வாபஸ் பெறமாட்டாது!

## ஜ...ாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்1

**சமாதானப் பேச்சுக்களை நடத்துவதாயின் யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்று மூன்றாவதுதரப்பு ...ாக விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்...னர். ஆனால் வடக்கிலிருந்து இராணு...த்தை வாபஸ் பெறு நாட்டை அவர்களுக்குத் ...ரைவார்த்துக் கொடுக்க நாம் தயாரில்லை.**

**...னாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இவ்...று தெரிவித்தார்.**

வவுனியா விமானப்படைத் த...த்தில் கூடியிருந்த பாதுகாப்புப் ப...யினருடன் செய்மதி ...ம் நேற்று பிற்பகல் நடத்திய கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இப்...ச் சொன்னார்.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் முப்படை மற்றும் பொலீஸாரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடாகியிருந்தது. அங்கு ஜனாதிபதி கூறியதாவது:-

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் - ஐந்து வருடங்களுக்கு முன்னர் - தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை முன்வைத்தோம். அது ஒரு நீண்ட காலத் தீர்வு முயற்சியாகும்.

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த எந்த அரசும் இத்தகைய தீர்வை முன்வைக்கவில்லை. இந்

(10ஆம் பக்கம் பார்க்க)



## பளையில் சிக்கிய 32 பேர் நேற்று வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.1

கடந்த ஐந்து தினங்களாக பளையில் சிக்கியிருந்த 32பேர் புலோப்பளை - அல்லிப்பளை ஊடாக கால் நடையாக மிருசுவில் வந்து அங்கிருந்து வாகனத்தில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வடபிராந்திய போக்குவரத்து சபையைச் சேர்ந்த ஐந்து ஊழியர்கள், இலங்கை மின்சாரசபையைச் சேர்ந்த இரு ஊழியர்கள் மற்றும 25 பொதுமக்கள் நேற்றுக் காலை 10மணிக்கு யாழ். நோக்கிப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## உணவு, மருத்துவ வசதிகளின்றி பளையில் மக்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம்,ஏப்.1

பளையில் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில்- உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி - பெரும் கஷ்ட நிலையில் மக்கள் முடங்கிப் போயுள்ளனர்.

பளையில் கடந்த ஐந்து தினங்கள் சிக்கியிருந்து நேற்று மாலை ஒருவாறு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவர்கள் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டனர். அவர்கள் மேலும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 36 படையினர் 4 விமானிகளுடன் வீழ்ந்து நொறுங்கிய விமானத்தின் இறக்கைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுத் துவாரங்கள்!

கொழும்பு,ஏப்1

36 படையினர் மற்றும் நான்கு விமானிகளுடன் அநுராதபுரத்துக்கு சமீபமாக நேற்று முன்தினம் வீழ்ந்து நொறுங்கிய 'அன்ரனோ 26' ரக விமானத்தின் மீட்கப்பட்ட சிதைந்த - இறக்கைப்பாகத்தில் துப்பாக்கிச் சன்னங்களினால் ஏற்பட்டவை எனக் கருதப்படும் ஆறு துவாரங்கள் (காயங்கள்) காணப்படுவதாக ரஷ்ய நிறுவன பொறியியலாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

விமானம் வீழ்ந்து நொறுங்கிய பகுதிக்குச் சென்று நேரடி விசாரணைகளை மேற்கொண்ட பின்பே அவர்கள் இப்படி கொழும்பு செய்தி ஏஜென்சி ஒன்றுக்குத தெரிவித்துள்ளனர்.

இந்தக் காயங்கள் விமானம் விழ முன்னரே ஏற்பட்டவையா? இதன் காரணமாகவே விமானம் வீழ்ந்ததா? என்பன குறித்து ஆராய வேண்டியுள்ளது என்றும் அந்தப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் கல்வி வலயம் முன் திங்கள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

ஆரம்பக் கல்வி பாடநெறி ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள், ஏனைய துறையினருக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும் - எதிர்வரும் திங்களன்று - யாழ்.வலய அலுவலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமை தொடர்பாக மாகாண கல்வி அமைச்சுச் செயலாளருக்கு மகஜர் ஒன்றை தாம் அனுப்பியதாகவும் -

அதற்குச் சாதகமான பதில் கிடைக்காததால் இந்தப் போராட்டத்தைத் தாங்கள் நடத்தவிருப்பதாகவும் -

ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தமது போராட்டத்துக்கு ஈ.பி.டி.பி. அமைப்பு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (உ-3-73)

## குடாநாட்டில் நேற்று யுத்த நிலைமை தணிவு!

தென்மராட்சி,ஏப்.1

கடந்த நான்கு தினங்களாக படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிரச் சண்டை இடம்பெற்று வந்த யாழ். குடாநாட்டில் நேற்று யுத்தம் தணிந்து ஓரளவு அமைதி நிலை காணப்பட்டது.

எனினும் பரவலாக பல இடங்களிலும் மாறிமாறி ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன.

மக்கள் மத்தியில் பதற்ற நிலை நீடிக்கின்றது.

தென்மராட்சிப் போர் முனைகளிலும் நேற்று ஓரளவு அமைதி நிலை காணப்பட்டது. கொடிகாமம், மிருசுவில் பகுதிகளில் மக்கள் நடமாட்டமும் ஓரளவு அதிகரித்துக் காணப்பட்டது.

கொடிகாமம் பஸ்நிலையப் பகுதியில் உள்ள கடைகள் நேற்றுத் திறக்கப்பட்டு இருந்தன.

தென்மராட்சிப் பகுதிக்கான

(10ஆம் பக்கம் பார்க்க)

யுத்த நிலைமையைக் கருதி

## வடக்குக்கு கடற்படை, இராணுவ இணைப்பதிகாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

குடாநாட்டில் தீவிரமாகியுள்ள யுத்தத்தில் அரசபடைகளை நெறிப்படுத்துவதற்காக கூட்டுப்படைத் தலைமையகத்தின் யாழ். பிராந்திய இராணுவ இணைப்பதிகாரிகளாக இருவர் நேற்றுப் பதவி ஏற்றுள்ளனர்.

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் நடவடிக்கை பணிப்பாளராகப் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் -

கடற்படைத் தலைமையகத்தில் நடவடிக்கைப் பணிப்பாளராகப் பணி

(10ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்




யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அண்மையில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண ஆட்டத்தின் பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் அ.சிறீக்குமரன் உரையாற்றுவதையும் ஆடுகளத்தை அமைக்க உதவிய 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், அங்குரார்ப்பண ஆட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் அரசாங்க அதிபரும் யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவருமான க.சண்முகநாதன், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை, கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோரை முதலாவது படத்திலும் அங்குரார்ப்பண ஆட்டத்தில் வெற்றியீட்டிய ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.1

'மணிவதனன்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் - 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட - மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன.

இன்று காலை 8-30 மணிக்கு சீ-ஹொக்ஸ் வி.க. அணியுடன் விக்டரி வி.க. புளூஸ் அணியும், அல்டன் வி.க. 'ஏ' அணியுடன் மானிப்பாய் பரிஷ் வி.க. அணியும் -

காலை 10-30மணிக்கு நொதேண் வி.க. அணியுடன் நான்கு நட்சத்திர வி.க. அணியும், ஜிபிஎஸ் வி.க. அணியுடன் பியோ வி.க.அணியும் மோதவுள்ளன.

வெற்றிபெறும் அணிகளுக்கு மற்றைய அணிகளுடன் தொடர்ந்து போட்டிகள் இன்று நடைபெறும் என ஒழுங்காளர் காண்டீபன் தெரிவித்துள்ளார். ([illegible]-8)

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் விஜயம்

நெல்லியடி, ஏப்.1

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதி செல்வி சோபி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், ஆகியோர் நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளாக வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்து, இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளை ஆராய்ந்தனர். இவர்களுடன் பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி, சமூக சேவை உத்தியோகத்தர் என்.தர்மலிங்கம் ஆகியோரும் உடன் சென்றனர்.

இதேவேளை -

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயவளவில் தங்கியுள்ள 27 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு பாய்கள், வாளிகள், ஹரிக்கேன் லாம்பு போன்ற அத்தியாவசிய உபகரணங்களை, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் அன்பளிப்புச் செய்தார்.

அன்று நண்பகல் அகதிகளுக்கான ஐ.நா தூதரக பிரதிநிதிகளும் வடமராட்சிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டனர். (ஐ-109)

## 'மகத்துவம்' நூல் வெளியீடு

சுவாமி ஸ்ரீசச்சிதானந்த அருளொளி செல்லம்மா அம்மையார் அவர்களின் 'மகத்துவம்' நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப.2மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். ஆசியுரையை சிவத்திரு கந்தையா சுவாமிகளும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியற்றுறைப் பேராசிரியர் நா.ஞானகுமாரனும், சிறப்புரைகளை வ.சின்னப்பு, நா.திருச்செந்திநாதன் ஆகியோரும், மதிப்புரையை கே.ரி.எஸ்.சபாநாதனும் வழங்குவார்கள்.

அருட்திரு. வித்தகம் பரமசுவாமிகள் நூலை வெளியிட்டு வைப்பார். முதற் பிரதியை த.குகனேசன் பெற்றுக் கொள்வார். (ஐ-5-8)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் ஆரம்பம் – கல்வியாண்டு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட, முகாமைத்துவ வர்த்தக பீடத்துக்கான கற்கை நெறிகளுக்கான முதலாம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக்குரிய விரிவுரைகள் 03-04-2000 அன்று ஆரம்பமாகின்றன.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
29-03-2000
(C/11598)

கணக்கீடு
திரு. பாலவாசன்
A/L 2000
கம்பனி (Rev.)
பிரிவு 01 6.00-7.00
11 11.00-12.00
ஆரம்பம்
02-04-2000 Sun
விக்னா
கல்வி நிறுவனம்
(74987)

ராஜா
யாழ்ப்பாணம்
4ஆவது வெற்றி வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த
படையப்பா
காட்சிகள்
(C/11604) 10.30, 2.00, 5.00

லிபேட்டி
அச்சுவேலி
நாளை மட்டும்
கார்த்திக் நடிப்பில்
உன்னை நெனைச்சேன் பாட்டுப்படிச்சேன்
காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
Fax No.0094 - 70212223
(74706)

நாகம்ஸ்
சுன்னாகம்
ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா நடித்த
அம்மன்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00 - 2.30
(புதிய நேரம்)
மனிதர்களை பேய்களுக்காக கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த காட்சி
(74813)

லைடனின் குதூகல மலிவு விற்பனை
பூத்திடும் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
01-04-2000 முதல் 12-04-2000 வரையுமே!
சகலவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும் விஷேட கழிவு உண்டு.
என்றென்றும் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்பவர்கள்
லைடன் புடைவை நிலையம்,
இல.410 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/11602)

கண்ணீர்ப்பூக்கள்
எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
செல்வி வே. விமலாதேவி
அவர்களின் சகோதரர்
வேலன் ஏகாம்பரம்
(நீதிமன்ற வீதி, மல்லாகம்) -
அவர்கள் 30-03-2000 ஆம் அன்று அகாலமரணம் அடைந்ததையிட்டு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வலிவடக்கு
பிரதேச செயலரும்,
சகல உத்தியோகத்தர்களும்.
(74991)

கண்ணீர்ப்பூக்கள்
எமது காரியாலயத்தில் கடமையாற்றும் பொறியியலாளர்
திரு. செ. இரவீந்திரா
அவர்களின் தந்தையார்
கந்தையா செல்லத்துரை
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை,
வடபிராந்திய நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(74990)

## படவரைஞர் பரீட்சைக்கு பலர் தோற்ற முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஏப்.1

நிலஅளவைத் திணைக்களத்துக்கு படவரைஞர்களை ஆள்சேர்ப்பதற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்த பிற மாவட்ட விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் தியத்தலாவையிலுள்ள நிலஅளவைத் திணைக்களப் பரீட்சைப் பகுதியினரின் அனுமதி பெறவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பிறமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் [illegible] தங்கியுள்ளபோதிலும் பரீட்சைக்குரிய நேரம் நெருங்கிவிட்டதன் காரணமாக தத்தமது பகுதிகளுக்குச் செல்ல முடியாதுள்ளனர்.

இவ்விண்ணப்பதாரிகள் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதாயின் தியத்தலாவை நிலஅளவைத் திணைக்கள பரீட்சைப் பகுதியினரின் அனுமதியைப் பெறவேண்டும் என யாழ்மாவட்டக் காரியாலய நிலஅளவை அத்தியட்சகர் பி.சிவதாஸ் அறிவித்துள்ளார். (க-10)




யாழ். செங்குந்த இந்துக்கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

சட்டநாதர் சிவன் ஆலய பிரதம குரு கு.குமாரக் குருக்கள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கிறார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி த. விக்னராஜா, கல்லூரி அதிபர் திருமதி எஸ்.விஸ்வலிங்கம், உபஅதிபர் க.நாகராஜா ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.

உயர்தர மாணவர்களால் விழாவில் மேடையேற்றப்பட்ட 'காத்தவராயன்' கூத்தின் ஒரு காட்சியைக் கீழே உள்ள படத்தில் காணலாம்.

*படங்கள்: வலி.கிழக்கு செய்தியாளர் பொ.இராஜேஸ்வரன்*

## சனி, ஞாயிறு கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப்.1

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று சனிக்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி வரை சகல வியாபார ஸ்தாபனங்களையும் சனி, ஞாயிறு தினங்களிலும் மற்றும் அரசாங்க வங்கி, வர்த்தக விடுமுறை நாள்களிலும் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறு யாழ் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - தொழில்புரிகின்ற ஊழியர்களின் நலன்களும் பேணப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ் மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டிலான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் அண்மையில் கோண்டாவில் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன. (ஐ-5)

# போர்ச் சூழ்நிலைக்குள்

**தற்போது சண்டை மூண்டுள்ள பிரதேசங்களை அண்டிய பகுதிகளுக்கு நேரில் சென்று மக்களின் நிலைமைகளைப் பார்வையிட்ட அலுவலகச் செய்தியாளர் வரைந்த செய்திக் கட்டுரை**

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி பகுதிகளில் கடந்த ஞாயிறு இரவு ஆரம்பமான விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கையினால் குடாநாடு முழுவதும் போர்ச்சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெறும் ஷெல், பீரங்கி, விமானத் தாக்குதல்களினால் அங்கு வாழ்வதற்கான சூழ்நிலையே அற்றுப் போய்விட்டது.

இதனால் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மருதங்கேணி, செம்பியன் பற்று, மாமுனை, நாகர்கோயில் பகுதிகளில் இருந்தும், பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த இத்தாவில், முகமாலை, இந்திராபுரம், கிளாலி போன்ற இடங்களில் இருந்தும், தென்மராட்சியில் எழுதுமட்டுவாள் பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை பச்சிலைப்பள்ளி பிரதேசத்துடனான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் பளைநகரம், கச்சார்வெளி, சோரன் பற்று, வண்ணான்கேணி, அரசர்கேணி, புலோப்பளை, வேம்பொடுகேணி, தர்மக்கேணி, இந்திராபுரம், போன்ற இடங்களிலிருந்து வெளியேற முடியாத நிலையில் 5 ஆயிரம் பேர்வரை சிக்கியுள்ளனர்.

இவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியாமையினால் அங்குள்ள நிலைவரங்கள் எதுவும் தெரியவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் கொடிகாமத்திலும் மருதங்கேணி பிரதேச செயலகம் அம்பன் கமநல சேவை நிலையத்திலும் இயங்கி வருகின்றன.

தென்மராட்சி பகுதியில் மிருசுவில், கொடிகாமம் பகுதிகளில் பாடசாலைகள், தேவாலயங்களில் நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த போதும் கடந்த வியாழக்கிழமை அப்பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்களைத் தொடர்ந்து அங்கும் வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் கொடிகாமத்தில் இயங்கிவரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் மீண்டும் இடமாற்றம் செய்யப்பட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மருதங்கேணி, மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, பகுதிகள் விடுதலைப்புலிகள் வசமிருப்பதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்தனர். இந்தப்பகுதிகளில் இருந்தும் நாகர்கோயிலில் இருந்தும் வெளியேறிய மக்கள் கடந்த வியாழன் வரை அம்பன் பகுதியை வந்தடைந்தனர்.

இவர்கள் கால்நடையாகவும், சைக்கிள் மற்றும் மாட்டுவண்டில்களிலும் கையில் கிடைத்த பொருள்களுடனும் அம்பனை நோக்கி வந்து கொண்டிருந்ததை வியாழனன்று நேரில் காணமுடிந்தது.

வெயிலின் மத்தியில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர், நோயாளர்கள் என நடந்து வந்துகொண்டிருந்தவர்கள் மரநிழல்களிலும், வீதியோரங்களிலும் இளைப்பாற்றிக் கொண்டிருந்தனர்.

தொடர்ந்து இடம்பெற்றுவந்த தாக்குதல்களால் இரவு பகலாக நித்திரையின்றி அலைந்துகொண்டிருந்த அவர்களின் முகங்களில் பயப்பீதி காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது.

அம்பன் பகுதிக்கு வந்த மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை அப்பகுதியிலுள்ள கிராம சேவையாளர்கள் மேற்கொண்டிருந்தனர். இவர்களை அம்பனிலிருந்து 9 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வல்லிபுரம் கோயிலடிக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் பருத்தித்துறை டிப்போவின் இரு பஸ்கள் ஈடுபட்டிருந்தன.

## கேசரி

ரிக்கெட் வழங்கப்பட்டு அதற்கான பணமும் அறவிடப்பட்டே இடம்பெயர்ந்தவர்கள் இந்த பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

ஏற்கனவே அம்பனில் வைத்து பதிவு செய்த இவர்களை வல்லிபுரக்கோயிலின் பாதுகாப்பு அரணில் வைத்தும் படையினர் பதிவு செய்து வெளியே அனுப்பிக்கொண்டிருந்தனர். இந்தப்பதிவுகளுக்காக நிழல் எதுவுமற்ற அங்குள்ள வயல் வெளிகளில் நூற்றுக்கணக்கானோர் வெயிலில் நின்றதைக் காணமுடிந்தது.

கீழே கொதிக்கும் மணலின் சூடு மேலே வெய்யில் கொடூரம் என குழந்தைகளும், பெண்களும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தனர். சிலர் தமது சேலைத்தலைப்பினால் தலைகளை மூடியிருந்தனர்.

வடமராட்சிகிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கென அம்பன் அ.த.க. பாடசாலையில் நலன்புரி முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு மூன்று நாளுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அங்குள்ள கிராமசேவை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்தப்பகுதியிலும் பீதிநிலை ஏற்பட்டுள்ளதால் இங்கு தங்கிநிற்க விரும்பாத மக்கள் பருத்தித்துறை மற்றும் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துகொண்டிருந்ததை வியாழக்கிழமை காணமுடிந்தது.

அம்பன் வைத்தியசாலை ஒரு சில ஊழியர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. பதற்றமான சூழ்நிலையை அடுத்து இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் அவர்களின் பாதுகாப்பு கருதி மந்திகை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்த ஊழியர்கள் கூட இடம்பெயர்வதற்கு தயாராக பெட்டி, படுக்கைகளுடன் இருந்தனர்.

யுத்தம் நடைபெறும் பகுதிகளான பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களுக்கு எவருமே செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெறும் பகுதிகளில் இயங்கிவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பிரதிநிதிகளே இந்த இடங்களுக்குச் செல்லமுடியாத நிலையில் இருந்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வடமராட்சி கிழக்கில் அம்பன் வரைக்கும், தென்மராட்சியில் கொடிகாமம் வரைக்குமே சென்று வந்தனர்.

யுத்தம் நடைபெறும் இடங்களில் பலியானவர்களின் சடலங்களை உரியமுறையில் அடக்கம் செய்ய முடியாதுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தாவில் பகுதியில் திங்கட்கிழமை கொல்லப்பட்ட ஓட்டோ சாரதி மற்றும் இளம் தம்பதிகளின் சடலங்கள் வியாழக்கிழமை வரையும் அங்கிருந்து மீட்கப்படவில்லை. அப்பகுதியில் காயமடைந்தவர்களின் விவரங்களையும் அறிய முடியாதிருந்தது.

தாளையடிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களினால் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவர்களின் சடலங்கள் செம்பியன் பற்றில் புதைக்கப்பட்டதாக அங்கிருந்து தப்பி வந்தவர்கள் மூலம் அறிய முடிந்தது.

# குடாநாட்டு மக்கள்

மருதங்கேணிப்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கடந்த புதன்கிழமை கொண்டுவரப்பட்டதையடுத்து அன்றிரவு நாகர் கோயில் பகுதியில் படையினர் குவிக்கப்பட்டனர்.

அங்குள்ள மக்களை பாடசாலை ஒன்றுக்குள் இருக்குமாறு கூறிய படையினர் அவர்களை அவ்விடத்தை விட்டு வெளியேற அனுமதிக்கவில்லை என அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

அன்றிரவு அப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களைத் தொடர்ந்து சிலர் அந்தப் பாடசாலையிலிருந்து தப்பியோடி அம்பனை வந்தடைந்தனர். வியாழக்கிழமை காலை அப்பகுதிக்குச் சென்ற கிராமசேவையாளர்கள் இராணுவத்தினருடன் பேசி பொதுமக்களை விடுவித்தனர்.

நாகர்கோயில் பகுதியில் மோதல்கள்எதுவும் நிகழாதபோதும் மோதல்களுக்கான சூழ்நிலைகள் ஏற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குடாரப்பு பகுதியில் விடுதலைப் புலிகள் வந்து குவிவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சூழ்நிலையில் எப்பகுதியிலும் எப்பொழுதும் எதுவும் நடக்கலாம் என்ற ஏக்கத்துடனும் மனப் பதற்றத்துடனும் மக்கள் உள்ளனர்.

# ஐ.நா. தலையீட்டை கோரி கோபி அனானுக்கு கடிதம்

## பிரதேச சபைத் தலைவர் அனுப்பினார்

கடந்த பல வருடங்களாகத் தொடரும் யுத்தத்தினால் கஷ்டங்களை அனுபவித்துவரும் மக்கள் சமாதானத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த ஐ.நா. தலையிடவேண்டும்.

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் மேற்கண்டவாறு ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் யுத்தத்தால் அப்பாவிப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கஷ்ட நிலையில் உள்ள இந்த மக்களின் விடிவுக்காக தங்களின் தலையீடு அவசியம் எனப் பல நிறுவனங்கள் கோரிவந்துள்ளன.

சிவில் யுத்தம் நடைபெறும் பல நாடுகளின் விவகாரத்தில் ஐ.நா. தலையிட்டு வெற்றியும் பெற்றுள்ளது என்பதை நாம் அறிவோம்.

ஆனால் இலங்கையில் பொது மக்களும், மக்களின் பிரதிநிதிகளும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள நேரத்தில்கூட ஐ.நா. போன்ற அமைப்புக்கள் தலையிடாமை கவலை அளிக்கின்றது.

கடந்த நான்கு, ஐந்து நாளாக தென்மராட்சிப் பகுதியில் இடம்பெறும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பாதுகாப்புத் தேடிச் செல்லக்கூட இடமின்றி இன்னல்படுகின்றனர்.

பாதுகாப்பான இடமில்லாத காரணத்தால் மக்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மக்களின் விடிவுக்காக தாங்கள் இந்த விவகாரத்தில் தலையிட வேண்டும் - என்றுள்ளது.

(ஐ-3)

# நியமனக்கடிதம் பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 1

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி தென்மராட்சிக் கல்வி வலயத்தில் பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றுள்ள பின்வருவோரை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி வலயக் கல்வி அலுவலகத்தில் தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

* செல்வி நடராசா வசந்தி - ஒட்டுவெளி, மிருசுவில்.
* செல்வி சாந்தினி ஜீவரத்தினம் - மீசாலை கிழக்கு.
* செல்வி ஜெகதீஸ்வரி தம்பிராஜ் - கரம்பைக்குறிச்சி, வரணி
* செல்வி செ.மேரி மார்கிரேட் - கிளாலி, எழுதுமட்டுவாள்.
* செல்வி செல்வராசா சாரதா - மீசாலை கிழக்கு, மீசாலை.
* செல்வி கந்தையா பற்குணசோதி - பாலாவி வீதி, கொடிகாமம்.
* திருமதி பத்மலோஜினி பத்தராஜா - கைதடி தெற்கு.

(ஐ-133)



**அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதரகத்தின் பிரதித்தூதர் திரிபாதி பருத்தித்துறை இராமகிருஷ்ண சேவாச்சிரமத்துக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்.**

**சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா, யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி ஆகியோர் அவருடன் காணப்படுகின்றனர். (ஐ)**



**வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின அலுவலகத்தின் மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட நூலகக் கட்டடத்தின் பாவனை தொடர்பாக ஐ. நா. அதிகாரி ரீ.மாருக் நூலகப் பாவனையாளருடன் உரையாடுகிறார். அருகில் வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோண்சன், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.**

*(படம்:வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*




**சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாநகராட்சிமன்ற சுகாதாரப் பகுதியின் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டப் பிரிவினால் நடத்தப்பட்ட மகளிர்தின விழாவில் யாழ். மாநகர சபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தலைமையுரையாற்றும் போது எடுத்த படம். படத்தில் ஐ.நா. ஸ்தாபனத்தின் தொண்டர் சேவை பிரதிநிதி செல்வி கிறிஸ்ரீனா, ஐ.நா. சிறுவர் நிதியத் திட்டப் பகுதிப் பிரதிநிதி பகீர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.**

*(படம்:- நல்லூர் செய்தியாளர்)*



**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தீவுப்பகுதியில் உள்ள இளைஞர் கழகங்களின் நிர்வாகிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது.**

**பயிற்சி நெறியில் பங்குபற்றிய நிர்வாகிகளுக்கான சான்றிதழ்களை இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி வழங்குவதை படத்தில் காணலாம்.**

*(படம்: காரைநகர் செய்தியாளர் ந.பாரதி)*

# நீர்வேலிப் பகுதிக்கான மின்சேவை விஸ்தரிக்கப்படும்

நீர்வேலி தெற்கு பூதர்மடம் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீதிகளில் மின்சார கேபிள் வயர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. இம்மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது நீர்வேலி கந்தசுவாமி கோவில் வரையான பகுதிக்கே மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ-17)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி(Broiler) கல் பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (74897)

இறைச்சிக்கோழி (Broiler) மற்றும் கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 68, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம். (74892)

இறைச்சிக்கோழிகள் (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (74948)

## ஆங்கிலம்

G.A.Q, B.A. மற்றும் பல்கலைக் கழக பட்டதாரி மாணவர்களுக்கும் ஓய்வுபெற்ற நிர்வாக சேவை உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்துக்கமைய ஆங்கிலம் குழுக்களாகக் கற்பிக்கப்படும். கடிதங்கள் தயாரித்து டைப் செய்தல், மொழி பெயர்ப்பு, படிவங்கள் பூரணப்படுத்துதல் மேற்கொள்ளப்படும். தொடர்பு:- ராஜேந்திரா, பிஸ்கால் ஒழுங்கை, 17/4 ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை. (74893)

## பொய்யாமொழி ஜோதிடம்

தொழில் பிரச்சினை கல்வித் தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும், சனி, செவ்வாய், கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறைவீதி, நல்லூரிலும் சந்திக்கலாம். (74915)

## இறைச்சிக்கோழிகள்

குறைந்த விலையில் சகல நிறைகளிலும் தினமும் புறோயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. 54/2, சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை கொழும்புத்துறைவீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். அல்லது 217, A, ஆஸ்பத்திரிவீதி, (முலலைச் சந்தி) யாழ்ப்பாணம். (74888)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broilers, Cullbirds, இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை நுட்பமான நிறுவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74887)

## வாடகைக்கு

யாழ். நகரை அண்டிய மையப் பகுதியிலும் மக்கள் குடியிருப்பு நிறைந்த பிரபல பாடசாலை, அலுவலகங்களுக்கு அருகிலும் இருபது வருடங்களுக்கு மேல் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரபல பலசரக்கு வர்த்தக வியாபார ஸ்தாபனம் வாடகைக்கு உண்டு. தொடர்பு:விளம்பர இல. 1033மே/பா உதயன். (C/11524)

யாழ். நகரில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் பேக்கறியும் அதனுடன் கூடிய கடையும் உடன் வாடகைக்கு விடப்படும். தொலைபேசி வசதியும் உண்டு. தொடர்பு: 65,மருதடி வீதி, யாழ்ப்பாணம். (74924)

## முயல் விற்பனைக்கு

1சோடி வெள்ளை முயலும் (சடை) (வயது - 2 மாதம்) அத்துடன் 1பெண் முயலும் 2 குட்டிகளும் (குட்டிகளின் வயது 2கிழமை) தொடர்பு: சின்னையா - சாம் (Sam) A.M.I.M பாடசாலை (அருகில்), 541, நவாலி தெற்கு மானிப்பாய். (74900)

## விற்பனைக்கு

புதிய 4-Head Multi Digital Converter V.C.R சிறந்த றெக்கோடிங் திறன் உடையது. வீட்டுத் தளபாடங்கள், B.S.A மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ஆனந்தன் (கனடா) ஆனந்தபவன். 5, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு. (74926)

கந்தரோடை கந்தையா உபாத்தியாயர் வீதியில் நாகதம்பிரான் மில்லுக்கு அருகில் பயன்தரு மரங்களுடன் கூடிய நான்கு பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு தொடர்பு: 166/1,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (77941)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து 500யார் தொலைவுக்குள் கடற்கரை வீதி ஆடியபாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சி.சிவபாதசுந்தரம் வி.எம். றோட் பருத்தித்துறை. (C/11557)

## திருத்திக் கொடுக்கப்படும

எல்லா மிருதங்க வேலைகளும் நல்ல முறையில் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு திரு. ந. சிவானந்தன், இல. 52, சந்தனமாதா கோயிலடி, சுண்டுக்குளி. (74805)

## புறொயிலர்

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (74664)

## திருக்கை முள் குத்திக் காயம்

கடந்த புதனன்று பருத்தித்துறை முனைக் கடலில மீன்பிடிக்கச் சென்ற தோமஸ அன்ரன்மேரி ராஜன் (வயது 22) என்பவர் திருக்கை முள் குத்தி படுகாயமடைந்தார். . அவருக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (உ-109)

KOBE

*நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?*

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்' (C/10933)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1932 - 03 - 22

மறைவு 2000 - 03 - 02

அமரர்

### கந்தையா சிவபாதசிங்கம்

(Retd Asst. Valuer)

எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளையில் அன்னாரின் இறுதி சடங்கில் கலந்து கொண்டு எமக்கு நல்லாறுதல் மொழிபகர்ந்து தேற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சகல நிகழ்வுகளிலும் துணைபுரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (01-04-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் சபிண்டீகரணக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

**மனைவி, மகன், சகோதரர்கள்.**

முதலியார் வளவு,
இடைக்காடு, அச்சுவேலி.

(74891)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 05 - 1917

மறைவு 13 - 04 - 1999

அமரர்

### சின்னத்தம்பி வீரகத்தி

(இளைப்பாறிய ஆசிரியர்)

*திதி:- 01-04-2000*

அன்புக்கும், பாசத்துக்கும் உறைவிடமாக விளங்கும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"ஜெயாபதி"
கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(74758)

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவு



தாய்மடி 21 - 03 - 1936

தெய்வஅடி 12 - 04 - 1999

அமரர்

### பொன்னையா சுந்தரலிங்கம்

*திதி: 01-04-2000*

**பண்பாலும் அன்பாலும் நெஞ்சங்களை வென்றாய்**
**புரிகின்ற கடமையை உயிரென்று கொண்டாய்**
**புண்ணாகி வாடவே வழிசெய்து விட்டாய்**
**பெருமானின் பொன்னடியிற் பேரமைதி காண்க.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்
**மனைவி, பிள்ளைகள்.**

கூட்டுறவுச்சங்க ஒழுங்கை,
நாவற்குழி,
கைதடி.

(74881)

# INVITATION FOR BIDS

## MINISTRY OF EDUCATION AND HIGHER EDUCATION
## TEACHER EDUCATION & TEACHER DEPLOYMENT PROJECT

CREDIT NO - 2881 CE

## CONSTRUCTION OF NATIONAL COLLEGE OF EDUCATION AT KOPAY - JAFFNA

1. This Invitation to Bid follows the General Procurement Notice (GPN) for this project that appeared in Development Business, published by United Nations Organization issue number 490 of 11th July 1998 and subsequent notice in Development Business No. 515 of 31st July 1999.

2. The Ministry of Education & Higher Education of the Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the International Development Association (IDA) towards the cost of the Teacher Education & Teacher Deployment Project (TETD) and intends to apply part of the funds to cover eligible payments under the following Contracts.

- ❑ **Package 1 - Construction of Assembly Hall , Academic Block, External Works etc. of the N.C.O.E in Jaffna .**
  Contract No: TETD / ICB / NCOE / 01-99 / PK1
- ❑ **Package 2 - Construction of Staff Quarters, Boys Hostel, Pavilion etc. of the N.C.O.E in Jaffna.**
  Contract No: TETD / ICB / NCOE / 01- 99 / PK2
- ❑ **Package 3 - Construction of Administration Block, Library, Toilet Blocks etc. of the N.C.O.E in Jaffna.**
  Contract No: TETD / ICB / NCOE / 01- 99 /PK3

Bidding is open to all bidders from eligible source countries as defined in the Guidelines Procurement under IBRD Loans and IDA Credits, published by the World Bank.

Each contract packages will be evaluated separately. However Multi - Package rebate(s) [Discounts] offered if any, shall also be considered in evaluation. Based on such evaluation, award of contract(s), would be made to one or more bidder(s) for one or more or all the packages on the basis of least evaluated cost to the Employer.

3. The Secretary, The Ministry of Education & Higher Education of the Democratic Socialist Republic of Sri Lanka invites separate sealed bids from eligible bidders for the following contracts.

- ❑ **PACKAGE 1 - Construction of Assembly Hall, Academic Block, External Works etc. of the N.C.O.E in Jaffna.**
  The Contract consists of a complex of buildings having a total floor area of approximately 5,000m² and provision of Electricity, Telecommunication, Water supply, Fire Protection system, Road works, Drainage and Landscaping.
- ❑ **PACKAGE 2 - Construction of Staff Quarters, Boys Hostel, Pavilion etc. of the N.C.O.E in Jaffna.**
  The Contract Consists of a complex of building having a total floor area of approximately 5,000m² and associated site works.
- ❑ **PACKAGE 3 - Construction of Administration Block, Library,Toilet Blocks etc. of the N.C.O.E in Jaffna.**
  The Contract Consists of a complex of buildings having a total floor area of approximately 5,000 m² and associated site works.

4. Bidding documents may be purchased at the office of The Director, TETD Project, 3rd Floor, Isurupaya, Battaramulla, Sri Lanka until 15.00 hours 12th of May 2000 as below
   Bidding documents of Package 1 for a non refundable fee of US $ 150 or equivalent
   Bidding documents of Package 2 for a non refundable fee of US $ 100 or equivalent
   Bidding documents of Package 3 for a non refundable fee of US $ 100 or equivalent
   A complete set of Bidding documents may be purchased by you at the above office of upon payment of a non refundable fee as mentioned above.

   ☛ A Pre-Bid meeting will be held on 3rd May 2000 at 10.00 Hrs in the Board room at the above office.

Tel: +941865297
Fax: +941864851
E-Mail:- tetdmehe@slt.lk

5. Bids shall be valid for a period of 119 days with effect from the date of Bid opening and each Bid must be accompanied by a Bid Security, as mentioned below.
   SL Rs.3.5 million or equivalent amount for Package 1
   SL Rs.2.1 million or equivalent amount for Package 2
   SL Rs.2.1 million or equivalent amount for Package 3
   Bid Security shall be valid for 147 days from the date of Bid opening and Bids shall be delivered to the office of The Director, TETD Project, 3rd Floor, Ministry of Education & Higher Education, "Isurupaya", Battaramulla, Sri Lanka on or before 15.00 hours 30th of May 2000, at which time they will be opened in the presence of the bidders who wish to attend. The bid security should be strictly in accordance with the format given and issued in favour of the Secretary MEHE (For Multi Packages refer Table under 7)

6. Qualified Domestic Contractors may be eligible to receive a margin of preference at 7 1/2 percent in Bid Evaluation.

7. To qualify for the award of the Contract(s) the bidder shall have successful experience in the execution of at least one project of a similar nature and complexity to the proposed contract(s) within the last 5 years.

| | The Minimum Annual Turnover for last 5 years (in million US $) | The Minimum Annual rate of Floor Production within the last 5 years (in square meters) | Bid Security (in million SL. Rs) |
|---|---|---|---|
| PACKAGE 1 | 5.0 | 3,000.0 | 3.5 |
| PACKAGE 2 | 3.0 | 3,000.0 | 2.1 |
| PACKAGE 3 | 3.0 | 3,000.0 | 2.1 |
| PACKAGES 1&2 | 7.0 | 5,000.0 | 5.6 |
| PACKAGES 1&3 | 7.5 | 5,000.0 | 5.6 |
| PACKAGES 2&3 | 5.0 | 3,000.0 | 4.2 |
| PACKAGES 1,2&3 | 9.0 | 7,000.0 | 7.7 |

8. Documentary proofs in respect of post qualification criteria mentioned above should be accompanied with the bid.

The Chairman,
Cabinet Appointed Tender Board,
Ministry of Education & Higher Education,
Isurupaya, Battaramulla,
Sri Lanka.

(C/11576)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

*நிகழும் சுபமங்களகரமான பிரமாதி வருஷம் பங்குனித்திங்கள் 20ஆம் நாள் (02-04-2000) ஞாயிற்றுக்கிழமை பூரட்டாதி நட்சத்திரமும் திரயோதசி திதியும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 10.55 மணி முதல் நண்பகல் 12.15 மணிவரையுள்ள சுபயோக சுபலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்*

திரு. திருமதி. கமலநாதன்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெயானந்தன்**
**(ஜெயா)**
அவர்கட்கும்

திரு. திருமதி தம்பிராசா
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**கௌசலி**
**(சுதா)**
அவர்கட்கும்

*இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

திரு. திருமதி கமலநாதன் குடும்பத்தினர்
**(உரிமையாளர் Rams திருநெல்வேலி)**
**அம்மன்வீதி, திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**
**இலங்கை.**

திருமதி. தம்பிராசா
குடும்பத்தினர்
**மயிலிட்டி தெற்கு,**
**தெல்லிப்பழை.**
**இலங்கை.**

*** இருவீட்டார் அழைப்பு ***

திருமணம் நடைபெறும் இடம்:
***Jugend Zentrum Byfangweg-6 4051 Basel Switzerland***

(74876)

**மானிப்பாய் வட்டம்**
**லயன்ஸ் கழக**
ஏற்பாட்டில் நடத்தப்படும்

We Serve

**இணுவில் லயன்ஸ் கழக**
## அங்குரார்ப்பண வைபவம்

இடம் :- இணுவில் மத்திய கல்லூரி
**(ஆரம்ப பிரிவு)**

காலம:- **நாளை (02-04-2000) ஞாயிறு**
**காலை 10.00**(புதியநேரம்)

பிரதம விருந்தினா:- **லயன் A.தங்கேஸ்வரன்**
பிராந்திய தலைவா், பிராந்தியம் 9/10
**லயன் சீமாட்டி றஞ்சி தங்கேஸ்வரன்**

கௌரவ விருந்தினா:- **லயன் S.S.தங்கராஜா**
மாவட்ட தலைவா் (கழக விஸ்தரிப்பு/வளர்ச்சி)
**லயன் சீமாட்டி ஜெயசோதி தங்கராஜா**

கௌரவ பேச்சாளா:- **லயன் பேராசிரியர் S.சத்தியசீலன்**
(யாழ். பல்கலைக்கழகம்)

பிராந்தியம் 9/10 லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்களையும் சீமாட்டிகளையும் பங்கு பற்றி புதிய கழகத்தை வாழ்த்துவதில் இணையும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

**குறிப்பு: நிகழ்ச்சி குறித்த நேரத்திற்கு ஆரம்பிக்கப்படும்.**

லயன். Dr. உரோ மகேஸ்வரன
(தலைவா)
**மானிப்பாய் வட்டம்,**
**லயன்ஸ் கழகம்.**

C/11571

## தவறிவிட்டது

**இராசலிங்கம் நாகேஸ்வரியின் தேசிய அடையாள அட்டையும் (708193402V), நிமலன் நாகேஸ்வரியின் விசேட அடையாள அட்டையும் (0903031781) 13-03-2000 அன்று யாழ். மின்சார நிலைய வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விஜய் சில்க்ஸ், 123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். விரும்பிய சன்மானம் வழங்கப்படும்.**

74960

# நீங்காத நினைவில்
# முதலாம் ஆண்டு



| மண்ணில் வாழ்வில் | இறை மகிமைக்குள் |
|---|---|
| 22 - 03 - 1931 | 02 - 04 - 1999 |

அமரர்
## சாமுவேல் தேவராஜா பொன்னையா

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், அச்சுவேலி ஸ்ரீ விபசி வித்தியாலயம்)

அப்பாவே!

ஆறுதல் சொல்ல
யாரிருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்பிற்கு
ஈடாகுமோ தேறுதல்
சொல்ல தெய்வம்
வந்தென்ன அப்பா - உங்கள்
திருமுகம் பார்த்தால் போதாதோ
எம் உள்ளங்கள் துடித்திட நீங்கள்
எங்கு சென்றீர்கள் அப்பா!
ஆண்டு ஒன்று சென்றினும் எந்நாளும் - உங்கள்
நினைவுகள் என்றும் எமை
விட்டு நீங்காது - அளவில்லாத
துன்பமது அகமதிலே கொண்டாலும்
மகவுகளை உங்கள் மனம் போல்
வாழவைக்க வாழுகிறேன்.
அப்பாவே உங்களது
அபிலாசைகளையெல்லாம்
தப்பாது நிறைவேற்றும்
சக்தியினைத் தந்திடுங்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனன், சகோதரர்கள்.**

அரசடி வீதி,
இருபாலை, கோப்பாய்.

(74963)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
## கார்த்திகேசு ஐயாத்துரை (ராசு)
அவர்கள்
(உரிமையாளர் - அபிராமி அரிசி ஆலை, குருமன்காடு, வவுனியா)

**மலர்வு - 17-06-1935**
**உதிர்வு -17-02-2000**

யாழ்.வேலணையைப் பிறப்பிடமாகவும், குருமன்காடு வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டவரும், எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், வழிகாட்டியாகவும், எம்மோடும் எம் உற்றார், உறவினர் மட்டுமல்லாது மற்றும் அனைவரிடத்திலும் அன்போடும் பண்போடும் உயர்நெறிகளோடும் வாழ்ந்து எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திச் சென்ற எமது அன்பு தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, தந்தி, தபால் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் மற்றும் எமது துயரில் பங்குகொண்டு பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (01-04-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய மற்றும் விருந்துபசார நிகழ்வுகளிலும், அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால்
துயருறும்
***மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

குருமன்காடு,
வவுனியா.

74936

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம'

## ஓயாத துயரில் ஓராண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 - 12 - 1931 | 13 - 04 - 1999 |

அமரர்
## ஏகாம்பரம் பேரின்பராசா

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், இலங்கை மத்திய வங்கி தலைமைக் காரியாலயம் கணக்காய்வுப் பிரிவு)

*திதி:-01-04-2000*

**உருண்டதோ ஒரு வருடம்**
**அப்பா என்றழைத்து ஆண்டொன்று ஆனதோ**
**மறையவில்லை எம் கவலை**
**அப்பாவின் நிழல் எப்போதும் நிலைத்திருக்கும் என்றிருந்தோம்**
**தப்பாகிப் போனதே நினைவு கனவாகிப் போனதே.**
**நோயிலே துடியாமல் பாயிலே மடியாமல்**
**உங்கள் அன்புமனையாளை கண்ணீரில் வாழவிட்டு**
**கணப்பொழுதில் நீங்கள் மறைந்தமாயம்தான் என்ன?**
**பாசமுடன் ஒரு வார்த்தை கூறாது**
**மின்னலென விண்ணோடு மறைந்தனையோ?**
**உம்மை எங்கோ தவறவிட்ட உணர்வில் தேடுகின்றோம்**
**ஏனிப்படியான தென்று இன்னமும் துடிக்கின்றோம்**
**இன்பமாய் நாம் வாழ்ந்தது இறைவனுக்கும் பிடிக்கலையோ**
**என் சொல்லிப் புலம்பிடினும் எழுந்து வரப்போவதில்லை**
**உங்களை இழந்ததால் எம் நிம்மதியை இழந்திட்டோம்**
**எம்மனை வெற்றிடம் தான் நிரப்பிட முடியாதப்பா**
**விழிகள் சொரியச் சொரிய நாம் விடியும் காலை மலரெடுத்து**
**தினமும் தொழுகின்றோம் உம்மை**
**கண்ணிறைந்த தெய்வமாகி வாருங்கள் வேண்டுகின்றோம்.**

உங்கள் நினைவுகளுடன்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

அம்மன் வீதி,
தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C/11595)

UNOPS
இதழ் 14
April 2000

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடனான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகப்போட்டிகள்

பாடசாலைகளுக்கிடையிலான கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகப் போட்டிகள் முதலில் வலய ரீதியாகவும், பின்னர் மாவட்ட ரீதியாகவும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அதிக பாடசாலைகள் பங்கு பற்றிய காரணத்தால் போட்டிகள் முதலில் கோட்ட ரீதியாகவும் பின்பு வலய ரீதியாகவும் நடாத்தப்பட்டது. தென்மராட்சி கல்வி வலயத்தில் ஒரேயொரு பாடசாலை மட்டும் போட்டிக்கு விண்ணப்பித்த காரணத்தால் அப்பாடசாலை போட்டியின்றி மாவட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. தற்பொழுது வலய மட்டத்திலான போட்டிகள் முடிவடைந்துள்ளது.
அப்போட்டிகளின் முடிவின்படி மாவட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ள பாடசாலைகளாவன:

* யாழ்ப்பாண வலயம் – புனித பத்திரிசியார் கல்லூரி
* தீவகம் – நாரந்தனை றோ.க.த.க வித்தியாலயம்
* வலிகாமம் – யாழ். அருணோதயாக் கல்லூரி
* வடமராட்சி – உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்
* தென்மராட்சி – கிளி. சோரன்பற்று கணேஷா வித்தியாலயம்

வலய மட்டத்திலான போட்டிகளில் முதலிடம் பெற்ற மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் மாவட்ட மட்டத்திலான போட்டி இவ்வருடம் மே மாதத்தில் நடைபெறவுள்ளது.



யாழ் கல்வி வலயத்தில் முதலிடம் பெற்ற புனித பத்திரிசியார் கல்லூரியின் நாடகத்தின் ஒரு கட்டத்தினை காணலாம்

## சிறுவர் கழகங்களுக்கான கண்ணிவெடி விழிப்புணர்வுப் பட்டறை

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் SCF நிறுவனத்தின் உதவியுடன் இயங்கிவரும் சிறுவர் கழகங்களைச் சேர்ந்த பிரதி நிதிகளுக்கு UNOPS/JRRP இன் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழுவினரால் மார்ச் மாதம் 17ம் திகதியன்று விழிப்புணர்வுப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது. இப்பட்டறையில் ஜனசக்தி, வளர்மதி, கலைமதி, கலைஒளி, விடிவெள்ளி, கலைமகள் ஆகிய சிறுவர் கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றினர். இவர்களுக்கு மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு விடயங்கள் வழங்கப்பட்டன. இவர்கள் தமது கழக உறுப்பினர்கள் மத்தியிலும், தமது கிராம சிறுவர்கள் மத்தியிலும் கண்ணிவெடிகள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதே இப்பட்டறையின் குறிக்கோள் ஆகும்.

## சமூக சேவை அடிப்படையிலான கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகக்குழு

மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை நாடகங்களின் ஊடாக வழங்கும் நோக்குடன் UNOPS/JRRP இன் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு சமூக நாடகமொன்றை தயாரிப்பதில் ஈடுபட்டு வருகின்றது. இந்நாடகம் இம்மாத நடுப்பகுதி முதல் மிதிவெடிப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் சனசமூக நிலையங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் மேடையேற்றப்படவுள்ளது.
இந்நாடகக் குழு உறுப்பினர்கள் பத்திரிகையில் கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் சேவை மனப்பான்மையுடன் கண்ணிவெடி விழிப்புணர்வு நடவடிக்கைக்கு தங்களாலான பங்களிப்பை வழங்கும் பொருட்டு தாமாகவே முன் வந்து ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றனர்.
இவர்களது இந்த சேவை மனப்பான்மை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதே போன்று ஏனைய பொதுமக்களும் கண்ணிவெடி விழிப்புணர்வு நடவடிக்கைக்கு தம்மாலான பங்களிப்பை ஏதோ ஒரு வகையில் வழங்கி உதவமுடியும்.



சமூக நாடகக் குழுவினர் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போது.......

### கண்ணிவெடிக் கவிதைகள்



கடந்த மாதம் UNOPS/JRRP இன் கண்ணிவெடி விழிப்புணர்வு இதழில் வெளியிடப்பட்ட அருகே உள்ள படத்திற்கு வாசகர்களால் எழுதி அனுப்பப்பட்ட பொருத்தமான பல கவிதைகளில் தெரிவு செய்யப்பட்ட மூன்று சிறந்த கவிதைகளை இங்கே தருகின்றோம். கவிதைகள், சிறுகதைகள் வரைந்து அனுப்பிய அனைத்து வாசகர்களுக்கும் எமது நன்றிகள்.

## காட்டிக் கொடுத்திடு தூர எழுந்தோடு

மிலேனியத்தின் இளந்தளிரே!
உன்கைகளில் புரள்வது
விளையாட்டுப் பொருளல்ல – உன்
வசந்தத்தைச் சிதைக்கத் துடிக்கும்
"கண்ணி வெடி"யம்மா!
அதை அப்படியே வைத்திடு அங்கே!
அயலவரை அழைத்து – அந்த
அரக்கனைக் காட்டிக் கொடுத்திடு!

-சி.தமிழ்மகள், ஆண்டு12,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி-

உ பேதைச் சிறுமியே!
தூர எழுந்தோடு
நீ தொட்டு விளையாட
இதுவொன்றும்
விளையாட்டுப் பொருளல்ல
உன் ஒளிமயமான
எதிர்காலத்தை
கேள்விக்குறியாக்கி
இருள் மயமாக்கிவிடும்
வெடிபொருள்
இதை நீ எல்லைமீறித்
தொட்டால்
உடல்சிதறிப் பலியாவாய்!
உன் பெற்றோர்
உன்னைப் பற்றிய
கண்நிறைந்த கனவுகளோடு
இருப்பர்
அதைப் பாழாக்கிவிடாமல்
தூர எழுந்தோடு!

– தாரணி, கரவெட்டி. –

## வானொலி உரைச்சித்திரம்

நாங்கள் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான வானொலி உரைச்சித்திரம் ஒன்றை யாழ் பலாலி வானொலி சேவையூடாக செய்திக்குப் பின் ஒலிபரப்பி வருகின்றோம். நீங்கள் அதனைக் கேட்டுப் பயனடைவதுடன் இது தொடர்பான உங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களிற்கு எழுதியனுப்புங்கள்.

மிதிவெடி விழிப்புணர்வு சம்பந்தமான ஆக்கங்களை எழுதி அனுப்பவேண்டிய முகவரி:

கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு
யாழ் புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் (JRRP)
யாழ் மாவட்ட செயலகம் (கச்சேரி)
யாழ்ப்பாணம்

## வேண்டாம் இந்த விளையாட்டு

சின்னஞ்சிறு மலரே நீ
சீண்டி விளையாடுவது
சிந்தனையற்ற சில மனிதர்களின்
சீற்றத்தின் சிதறல்கள்
மாண்டுவிட்ட மனிதநேயத்தின்
மரணத்தின் திறப்பிவை
நாளை பிறக்கும் புதுப்பூமிதனிலே
ஒளியேற்ற வேண்டியவள்-நீ
ஒழிந்துபோவது கண்டு
உருகுதம்மா எம் இதயம்

ஊனமுள்ள இந்நாட்டை
ஊன்றியெழுப்பவேண்டியவள்-நீ
ஊனமுற்றுப் போவதுகண்டு
உருகுதம்மா எந்தனுயிர்

கண்ணிருந்தும் ஒளியற்று
காய்ந்துவிட்டோம் இம்மண்ணிலே
காப்பாற்றவேண்டியவள்-நீ
கருகிப் போவதுதான் நியாயமா

விளையாடும் இப் பூமியிலே-போரின்
விதைகள் பல விதைத்துவிட்டு
விளையாடும் இளம் தளிர்களை
வீணாக அழித்தொழித்து
விளையாடும் வீரர்கள் இங்குண்டு

காப்பாற்ற வேண்டியவள் நீ
கல்லறைக்குப் போவதும் முறையோ

சின்னஞ்சிறு மலரே
வேண்டாம் விளையாட்டு
சுத்தமான காற்றை
சுதந்திரமாக சுவாசிக்கும் நாள்வரும்
அதுவரை
அனாதரவாய்க்கிடக்கும்
அரக்கர்களின் அழித்தொழிக்கும்
ஆயுதங்களால்
ஆக்கமான உன் வாழ்வை
இன்றுடன் முடிக்காதே.

அன்பின் சிறுமியே-உன்
அண்ணனுக்கும் சொல்லிவை
அடிதடிக் குறும்பு செய்யும்-உன்
தம்பிக்கும் சொல்லிவை
ஆருயிர் உன் நண்பிக்கும் சொல்லிவை
வேண்டாத பொருட்களை
தீண்டிவிளையாட வேண்டாமென.

-மா.றொஷான்-

### மிதிவெடிகள் வெடிக்கத்தக்க ஆயுதங்களின் அபாயங்களில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கீழேயுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்

- நீங்கள் அறியாத பொருட்களைக் கண்டால் அதனை தடியால் அடிக்கவோ, கல்லால் எறியவோ அல்லது ஆணியால் குத்தவோ வேண்டாம்.
- சிவப்பு முக்கோணத்தால் அடையாளமிடப்பட்ட பகுதிகளுக்குள் செல்லாதீர்கள்.
- நீங்கள் அறியாத பொருட்களைக் கண்டால் ஆராய முற்பட வேண்டாம்.

## பாப்பா பாப்பா கதை கேளு!

ஓடி விளையாடு பாப்பா
வயல் வெளிகளில் செல்லாதே பாப்பா
மிதிவெடிகள் உண்டங்கே பாப்பா
கல்லெறிந்து அதனைச் சீண்டாதே பாப்பா

விஷம் கொண்ட பாம்பாய்ப் பாப்பா
வெட்ட வெளியில் இருப்பான் பாப்பா
கொடூரமாய் உன்னைக் கொல்ல பாப்பா
வழியோரம் விழிவைத்துக் காத்திருப்பான் பாப்பா

பந்தென்று நீ, நினைத்துப் பாப்பா
கல்கொண்டு எறிவாய் பாப்பா
கண்ணோடு காலினையும் இழந்து பாப்பா
இருளாக்கி உன் வாழ்வை சிதைப்பாய் பாப்பா

அழகிலும் ஆபத்துண்டு பாப்பா
அழகாயும் தோன்றும் மிதிவெடிகள் பாப்பா
வழியோரம் காலினை வைக்காதே பாப்பா
அங்கு புதையுண்டு கிடக்கும் மிதிவெடிகள் பாப்பா

செல்லாத இடத்திற்குச் செல்லாதே பாப்பா
சொல்லாமல் எதையும் தொடாதே பாப்பா
நான் சொன்ன அறிவுரையைப் பாப்பா
இன்றே கேட்டு நன்றே வாழ்வாய் பாப்பா

-க.துஷ்யந்தி-

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வியாழமாற்றம்

V. A. சிவராசா அவர்கள் வெளியிட்ட 02-06-2000 இல் நிகழும் விண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் 'யோகபலன்கள்' மற்றும் 2000 புதுவருஷ பலாபலன்கள் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றன. 152 B, அரசடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
(74734)

### ஆங்கிலக்கல்வி

G.C.E (O/L) ஆங்கிலத்தில் சித்தியடையாதவர்களுக்கும், சித்தியடைந்தவர்களுக்கும், அரச, தனியார் துறைகளில் தொழில் செய்பவர்களுக்கும் மேலதிக அறிவைப் பெறுவதற்கும், G.C.E (A/L) ஆங்கிலப் பரீட்சைக்கு பயிற்றுவிக்கவும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோத்தரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விளம்பர இல. 1030 மே/பா உதயன்.
(74630)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின்(மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(127255ஏ), (127225பி), 127225சி), (127225டி), (137920ஏ), (138192ஏ), (138192பி), (138367ஏ), (138480ஏ), (138544ஏ), (138544பி), (139609ஏ), (139623ஏ), (139766ஏ), (139766பி),

**நெடுந்தீவு**

(12985ஏ), (13000ஏ), (13018ஏ), 13018பி,) (13041ஏ), (13041பி),

**கரவெட்டி**

(136135ஏ),

**ஊர்காவற்றுறை**

(12359ஏ), (12811ஏ), (12811பி), (12890ஏ), (12890பி), (12910ஏ), (12910பி), (12910சி), (12910டி), (12910ஈ), (12910எப்), (12935ஏ), (12935பி), (12935சி), (12935டி), (12935ஈ), (12938ஏ), (12938பி), (12938சி), (12939டி), (12977ஏ), (12983ஏ), (12994ஏ), (12994பி), (12994சி), (12994டி), (13002ஏ), (13002பி), (13002சி), (13002டி), (13002ஈ), (13003ஏ), (13003பி), (13007ஏ), (13008ஏ), (13010ஏ), (13010பி), (13010சி), (13012ஏ) (13022ஏ), (13027ஏ), (13031ஏ), (13031பி), (13033ஏ), (13033பி), (13036ஏ), (13039ஏ), (13039பி), (13039சி), (13039ம), (13040ஏ), (13040பி), (13045ஏ), (13045பி), (13051ஏ), (13057ஏ), (13057பி), (13057சி), (13057டி), (13057ஈ), (13057எப்), (13064ஏ), (13064பி), (13065ஏ), (13065பி), (13067ஏ), (13068ஏ), (13068பி), (13068சி), (13069ஏ),

**கோப்பாய்**

(134164ஏ), (136261ஏ), (136261பி), (136291ஏ), (136291பி), (136434ஏ), (136436ஏ), (136436பி), (136442ஏ), (136432பி), (136449ஏ), (136475ஏ), (136475பி), (136495ஏ), (136498ஏ), (136498பி), (136498சி), (136498டி), (136500ஏ), (136500பி), (136506ஏ), (136506பி), (136507ஏ), (136507பி), (136507சி), (136550ஏ), (136552ஏ), (136646ஏ), (139459ஏ), (139459ஏ), (139832ஏ), (139837ஏ), (139837பி), (139846ஏ), (139846பி),

**நல்லூர்**

(136052ஏ), (136136ஏ), (136136பி), (136138ஏ), (136141ஏ), (135934ஏ), (138214ஏ), (138255ஏ), (138255பி), (138349ஏ), (138349பி), (138349ஏ), (138350ஏ), (138350பி), (138433ஏ), (138433பி), (138459ஏ), (138461ஏ), (138557ஏ), (138557பி), (138562ஏ), (139694ஏ),

**சண்டிலிப்பாய்**

(135780ஏ), (135928ஏ), (135933ஏ), (135933பி), (135955ஏ), (135955பி), (135975ஏ), (138121ஏ), (138121பி), (138232ஏ), (138275ஏ), (138275பி), (138502ஏ), (138514ஏ), (138570ஏ), (138570பி), (138570சி), (138577ஏ), (138577பி), (139612ஏ),

**தெல்லிப்பளை**

(139571ஏ), (139675ஏ), (139827ஏ),

உடுவில்

(136322ஏ), (136361ஏ), (136370ஏ), (136370பி), (135568ஏ), (135612ஏ), (135853ஏ), (135969ஏ), (138103ஏ), (138209ஏ), (138354ஏ), (138354பி), (138369ஏ), (138369பி), (138400ஏ), (138406ஏ), (138427ஏ), (138427பி), (138468ஏ), (138468பி), (138468சி), (138476ஏ), (138534ஏ), (138534பி), (138534சி), (138552ஏ), (138552பி), (138571ஏ), (139565ஏ), (139602ஏ), (139638ஏ), (139653ஏ), (139676ஏ), (139676பி), (139680ஏ), (139680பி),

**வேலணை**

(12585ஏ), (12629ஏ), (12629பி), (12629சி), (12629ம), (12838ஏ), (12849ஏ), (12849பி), (12856ஏ), 12856பி), (12856சி), (12856டி), (12856ஈ), (12922ஏ), (12964ஏ), (12964பி), (12964சி), (12964டி), (13001ஏ), (13014ஏ), (13014பி), (13030ஏ), (13032ஏ), (13037ஏ), (13037பி), (13038ஏ), (13038பி), (13044ஏ), (13044பி), (13044சி), (13048ஏ), (13048பி), (13063ஏ), (13071ஏ), (3071பி), (13071சி), (13071டி), (13071ஈ), (13074ஏ), (13075ஏ)



கூட்டுறவுத்துறையின் செயற்பாடு குறித்து விளக்குவதற்காக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பத்திரிகையாளர்களுக்கான ஒன்று கூடல் அண்மையில் சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உரையாற்றுவதையும் சங்கத்தின் பொது முகாமையாளர் மு.சிவப்பிரகாசம், கிராமிய வங்கிகளின் சமாசத்தின் பொது முகாமையாளர் சி.சிவபாலசுப்பிரமணியம், விவசாயக் கூட்டுறவு சமாசத்தின் பொது முகாமையாளர் கி.வே. கிருஷ்ணானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும்படத்தில் காணலாம்.

*(படம்:- அரியாலை செய்தியாளர் பா. நந்தகுமார்)*

கிளிநொச்சியில் மீட்கப்பட்டவற்றில்

# இரு எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டன

வவுனியா, ஏப்.1

கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் மற்றும் உதயநகர்ப் பகுதியில் இருந்து அண்மையில் மீட்கப்பட்ட 41 மனித எலும்புக்கூடுகளில் மேலும் இரண்டு எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

அக்கராயன் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் காவல் நிலையமொன்றில் இந்த எலும்புக் கூடுகள் கடந்த சில வாரங்களாக இனங்காண்பதற்காக வைக்கப்பட்டிருந்தன.

வீரையா செல்வராஜா(வயது36- உருத்திரபுரம் வடக்கு) என்பவரது எலும்புக்கூடு நேற்று முன்தினம் அவரது மனைவியான செல்வராஜா மனோன்மணியால் அடையாளம் காணப்பட்டது.

இராசையா முத்தையா(வயது56- உதயநகர்) என்பவரது எலும்புக்கூடு கடந்த புதனன்று அவரது மனைவியான முத்தையா புஸ்பவதி என்பவரால் அடையாளம் காணப்பட்டது.

இவர்கள் இருவரும் கிளிநொச்சி இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த சமயம் வீடு பார்க்கச் சென்றவேளை காணாமல்போனவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே 8 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டமை தெரிந்ததே.

(ஐ-7)

தனங்களப்பில் இருந்து வெளியேறிய

# 78 குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

தென்மராட்சி,ஏப்.1

கடந்த டிசம்பர் மாதம் இடம் பெற்ற ஷெல் தாக்குதல்களினால் தனங்களப்பிலிருந்து நாவற்குழி வரையிலான பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலக பிரிவில் தங்கியுள்ள 178 குடும்பங்களில் 78 குடும்பங்களுக்கு யாழ்.செயலகத்தினால் அறிவிக்கப்பட்ட ஜனவரி,பெப்ரவரி,மார்ச் ஆகிய மாதங்களுக்குரிய நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை.

அப்பிரதேசத்தில் உள்ள 100 குடும்பங்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த 78 குடும்பங்களுக்கும் வழங்கப்படவில்லை.

இந்தக்குடும்பங்களுக்கு மேற்படி மூன்று மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என நல்லூர் பிரதேச செயலரினால் தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்பிய கடிதங்கள் அந்தந்தக் குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு நிவாரணம் இதுவரை பெற்றுக் கொள்ளாத 78 குடும்பங்களும் அவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிவாரணம் பெறுவதற்காக கடந்த ஒரு மாதமாக நல்லூர் பிரதேச செயலகம், யாழ்.செயலகம் ஆகிய இடங்களுக்குத் தாங்கள் பல தடவைகள் அலைக்கழிந்ததாக மக்கள் தெரிவித்தனர். (ஐ-117)

# காரைநகருக்கு இதுவரை மின் வழங்கப்படவில்லை

காரைநகரில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மக்கள் மீளக் குடியேறிய போதிலும் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இங்கு மின்வழங்குவதற்கு வேண்டிய மின்கம்பங்கள், இணைப்புக்கள் போன்றன பழுதடையாமல் உள்ளன. கடற்படையினரின் உதவியுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒருசில குடும்பங்களுக்கு மின் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒப்பமிட்டு இலங்கை மின்சாரசபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்த போதிலும் இதுவரை மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய இடங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் காரைநகருக்கு மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### முன்கூட்டியே நிவாரண விநியோகம்

வலி. கிழக்கு தென்பகுதி நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புத்தாண்டை முன்னிட்டு இடம்பெயர்ந்தோருக்கான 85 ஆவது 'ஏ', 'பி' நிவாரணப்புள்ளிக்குரிய நிவாரணப் பொருள்களை முன்கூட்டியே வழங்கவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிவாரண விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

**நாளை**
பங்குனி 20
ஞாயிற்றுக்கிழமை
திதி – திரயோதசி
பின் இரவு – 1.07 வரை
நட்சத்திரம்: சதயம்
பிற்பகல் 3.44 வரை
சுபநேரம்: 9.10 - 10.40
ராகுகாலம்:4.40 - 6.10


நாடுங்கள்! நன்மையடையுங்கள்!!

**சோதிட நிலையம்**

சங்கானையூர்
கனக. குமாரசாமி
நிகரை வீதி, சங்கானை. (74982)

**ஏல விற்பனை**

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயத்தில் மலைவேம்பு மரம் ஒன்று (7 அடி சுற்றளவு) நாளை 02-04-2000 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

கூடிய கேள்விக்குரியவர் உடன் பணத்தை செலுத்துவதுடன் 3நாள்களுக்குள் மரத்தை அப்புறப்படுத்தவேண்டும்.

தலைவர்,
தர்ம பரிபாலனசபை.

31-03-2000 பத்திரிகை விளம்பரத்தில் நேரம் குறிப்பிடாமையையிட்டு வருந்துகின்றோம். (74983)

**கண்ணீர் அஞ்சலி**

எமது அலுவலக சக உத்தியோகத்தர்
திரு. எம். எஸ். நவரத்தினம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி கந்தையா செல்வம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள்,
பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம். (74981)

**4 ஆம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம் 12 - 04 - 1943



மறைவு 16 - 03 - 1996

அமரர்
சங்கரப்பிள்ளை இராஜலிங்கம்
திதி:- 01-04-2000

அப்பா!
ஆண்டுகள் நான்காகினும் ஆறாது எம் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (74984)

**அடையாள அட்டைகள் தவறிவிட்டன**

எனது 462131097V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாளஅட்டையும், செஞ்சிலுவைச் சங்க அடையாளஅட்டையும் 29-03-2000 அனர்த்தகால தொண்டர் சேவையில் ஈடுபடும்போது தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் இ.செ.சி. சங்க காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். எனது மனிதாபிமான சேவை மீண்டும் தொடரத் தங்களது உதவியை நாடி நிற்கின்றேன்.

எஸ். கணேசன்
உபசெயலாளர்,
இ.செ.சி.சங்கம்,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(C/11597)

## அதிரடி அரங்கு

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒக்டோபர் 15இல் ஓய்வு பெற்ற மூத்த ஆசிரியரான மு.தியாகராஜா, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு எதிராக இவ்வாரத்தில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆணையீட்டு எழுத்தாணை(Writ of Mandamus) தாக்கல் செய்கின்றார். இதற்கான முன்னறிவித்தல் நோட்டீஸ் அவரது சட்டத்தரணிகளால் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டதாக அறியவருகின்றது.

தமக்கான சம்பளப்படிகளை வெட்டிக் குறைத்ததாகவும் -

அதுகுறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரித்து வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல், ஆணைக்குழுவை உதாசீனப்படுத்தி நடந்து கொண்டதாகவும் -

தமக்கு ஓய்வூதியம் கிடைக்காமற் தடுப்பதற்காக தமது சுயவிவரக் கோவையை சட்டத்துக்கு முரணான வகையில் மாகாணக் கல்விச் செயலாளர் தடுத்து வைத்திருப்பதாகவும் -

தெரிவித்து அதற்கு நிவாரணம் கோரியே அவர் ஆணையீட்டு எழுத்தாணை ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றார்.

வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர், ஓய்வூதிய இயக்குநர் ஆகியோரின் பெயர்களும் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களுக்கு எதிரான உத்தரவு எதனையும் இந்த மனுவில் மனுதாரர் கோரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* * *

"குடாநாட்டில் ஓர் அங்குல நிலத்தைத்தானும் விடுதலைப் புலிகளுக்கு விட்டுக்கொடுக்கமாட்டோம்" - என்று சூளுரைத்த யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க தமது சேவைக் காலம் எஞ்சியிருக்கையிலேயே - ஜனாதிபதியின் விசேட அனுமதியுடன் - நேரகாலத்தோடு ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார்.

இராணுவப் பேச்சாளராக அவர் இருந்த காலத்திலேயே "முழுப் பூசினிக்காயைச் சோற்றில் புதைக்கும்" அவரது லாவகத்தை அறிந்திருந்த மக்கள் யாழ்ப்பாணத்திலும் அவரது சூளுரையை அதே மாதிரித்தான் எடுத்துக் கொண்டார்கள்.

மக்களின் கருத்து சரி என நிரூபிக்குமாப்போல அவரது சூளுரை சஞ்சீவியில் வெளியான அன்றே - ஆனையிறவை அண்டிய வெற்றிலைக் கேணி, கட்டைக்காட்டுப் பிரதேசத்தில் புலிகள் தமது கைவரிசையைக் காட்டினர்; கணிசமான பகுதியைக் கைப்பற்றினர்.

யாழ்.குடாநாட்டின் அதிகாரம் தொடர்பாக அன்று எழும்பிய சந்தேகங்கள், எதிர்பார்ப்புக்கள் இன்றுவரை தொடர்ந்து, இப்போது தீவிரமடைந்துள்ளன. அடுத்துவரும் நாள்களும் வாரங்களும் பல மாற்றங்களுக்குக் கட்டியம் கூறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டில் மீண்டும் யுத்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதிலும் பழைய நிலைமைகளுக்கும் இப்போதைய நிலைமைகளுக்கும் ரொம்ப வித்தியாசம். அதற்குக் காரணங்கள் பல. அவற்றை இங்கே விவரிப்பது உசிதமானது அல்ல.

அத்தகைய வித்தியாசங்களில் மிக முக்கியமானதொன்று வர்த்தகர்களின் நிதானம்.

வழக்கமாகப் போர் சூடுபிடித்தால் பொருள்களைப் பதுக்கி, செயற்கைத் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, விலைகளை உச்சத்துக்கு ஏற்றும் வர்த்தகர்கள் இம்முறை பொறுமையையும் பொறுப்பையும் கடைப்பிடிக்கின்றார்கள். பல இடங்களில் விலைகளைக் குறைத்து நியாய விலைக்கே பொருள்களைத் தாராளமாக விற்றுத்தள்ளுவதாகவும் கேள்வி.

"சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்கிறார்கள்- விடயம் அறிந்தவர்கள்.

வழக்கமாக நெருக்கடிகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் ஏன் இப்போது மட்டும் நிதானம் பேணுகிறார்கள் என்று விசாரித்துப் பார்த்தபோது உண்மைக்காரணம் தெரியவந்தது.

தற்போதைய நெருக்கடியில் குடாநாட்டில் எங்கும், எப்போதும் பெரும் இடம்பெயர்வு நெருக்கடி ஏற்படலாம் என்று அஞ்சப்படுவதே வர்த்தகர்கள் நிதானம் பேணுவதற்குக் காரணம் என்று தெரியவருகிறது.

இடப்பெயர்வு ஏற்பட்டால் தம்வசம் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் பொருள்களைத் தொடர்ந்து பதுக்கி வைப்பதோ, பாதுகாத்துக் கொள்வதோ கஷ்டம் என்று வர்த்தகர்களுக்குத்தெரியும். அதன் காரணமாகவே பொருள்களைப் பதுக்கி, முதலும் இல்லாமல், பொருளும் இல்லாமல் அந்தரிப்பதை விட, கேட்பவர்களுக்கு கைநயத்தோடு கொடுத்துத் தொலைத்தால் கிட்டியவரை லாபம் - ஓரளவு லாபத்தோடு முதலாவது மிஞ்சும் - என்று வர்த்தகர்கள் கருதுவதாக உள்வீட்டு வட்டாரங்கள் கூறுகின்றன.

* * *

"சீக்காளி மாட்டை சீதனம் கொடுத்தாராம் சீமான்!" என்ற கதையாக இருக்கின்றது யாழ். மீனவர்கள் நிலைமை.

சீக்காளி மாட்டை சீதனம் பெற்றால் அதைப் பராமரித்துச் செலவாவதுதான் மிச்சம். அதுபோன்றுதான் மிகக் கஷ்டப்பட்டு யாழ். குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு மீண்டும் அனுமதி பெற்றுக் கொண்டுள்ள மீனவர்கள் நிலைமையும்.

பாஷையூர் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் இது குறித்து எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

தற்பொழுது தொழிலுக்கு எமக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் பிரதேசம் மீன் வராமுடியாத பிரதேசம். அதிலும் சிறப்பு என்னவென்றால் கடல் வற்றும் நேரங்களில்தான் மீன் பிடிக்க அனுமதி. அந்நேரத்தில் அந்தப் பிரதேசம் வெறும் தரவையாகி விடும். மைதானம் போன்று இருக்கும். ஒவ்வொளையாடத்தான் அந்த மைதானம் ஏற்றதாயிருக்கும்; மீன்பிடிக்க அல்ல. தொழிலாளர் வயிற்றுக் கொடுமையால் நீர் உள்ள இடங்களுக்குச் சென்றால் அடியும் உதையும், அனுமதி அட்டைகள் பறிமுதல் செய்யப்படுதல் போன்ற நடவடிக்கைகள். நாம் என்னதான் செய்வது?

- இப்படி எழுதியுள்ளார் அந்த மீனவர். சம்பந்தப்பட்டோருக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

* * *

நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண்மணி. பிரதமரும் ஒரு பெண்ணே. நமது நாட்டில் தலைமைப் பீடம்தான் பெண்களிடம் என்றால்நமது நாட்டுக்கான வெளிநாட்டுத் தூதுவர்களில் பலரும் கூட பெண்களாகவே இருக்கின்றார்கள். பாருங்களேன்! கொழும்பில் உள்ள நெதர்லாந்து, பிரித்தானியா, கனடா போன்ற பல முக்கிய நாடுகளின் இலங்கைத் தூதுவர்கள் அம்மணிகளே. பல தூதராலயங்களில் உதவித் தூதர்களும் பெண்களே. உலகில் மகளிர் திறமையும் செல்வாக்கும் ஓங்கிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இது ஓர் உரைகல்.

* * *

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் வழமை போல 'ராகிங்' அசுரர்கள் தமது திருவிழாவை நடத்தி முடித்து, 'வெல்கம்' ஒன்று கூடலும் ஒப்பேறிவிட்டது. ஆனால் 'ராகிங்' கொடுமைக்கு அடங்க மறுத்த 'அடங்காத் தமிழனுக்கு' தொல்லை தொடர்வதாகத் தகவல்.

நேற்று அவர் நிறுவனத்துக்கு வந்து விரிவுரைக்குச் சென்றிருந்த சமயம், நேரடியாக அவருடன் மோத அஞ்சிய சில சிரேஷ்ட சிங்கங்கள் 'கவராயம்' மூலம் அவரின் சைக்கிளின் முன் ரயரையும் பின் ரயரையும் பதம் பார்த்து தமது வீரத்தைக் காட்டியிருக்கின்றனர். முன் ரயரில் நான்கு ஓட்டைகள்; பின் ரயரில் எட்டு ஓட்டைகள்! 'ராகிங்' விடயத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அதிகாரிகளிடமிருந்து சமூகம் பறித்தெடுத்தால்தான் சமூகம் திருந்த வாய்ப்பு உண்டு!

– மின்னல் –

# சகல உரிமைகளும் பெற்ற இனமாக தமிழர்கள் வாழப் போராடியவர் தந்தை

## பிறந்த தின நிகழ்வில் முன்னாள் உதவி அரசஅதிபர் உரை

நல்லூர், ஏப்ரல்1

தமிழர்கள் சகல உரிமைகளுடனும், தன்மானத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காக சாத்வீக வழியில் பல போராட்டங்களை நடத்தியவர் தந்தை செல்வா.

இவ்வாறு தந்தை செல்வாவின் 102ஆவது பிறந்தநாள் நிகழ்வில் பேசிய முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வி.வைத்திலிங்கம் கூறினார்.

தந்தை செல்வாவின் 102ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு யாழ்.முற்றவெளியில் உள்ள அன்னாரது உருவச்சிலைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தொண்டர்களும் பிரதிநிதிகளும், பொதுமக்களும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

எஸ்.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் உதவி அரச அதிபர் வைத்திலிங்கம் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

காந்தியடிகளின் வழியில் சாத்வீகப் போராட்டங்களில்ஈடுபட்ட தந்தை எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் பின்னர் புறக்கணிக்கப்பட்டமை இந்த நாட்டின் துரதிர்ஷ்டமே. தந்தை செல்வாவின் கொள்கைகளை மதித்து தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்திருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது. அவர் தமிழ் மக்களால் என்றும் நினைவுகூரப்படவேண்டிய தலைவர் - என்றார்.

தெல்லிப்பளை பலநோ.கூ சங்கத் தலைவர் எஸ்.சிவமகாராசா பேசும்போது கூறியதாவது:-

கடந்தகால அரசியல்வாதிகள் எமது பிரச்சினைகளைத் தவறாகப் புரிந்து கொண்டனர். தந்தை செல்வா அரசின் உயர் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு தமிழ் பேசும் மக்கள் சுதந்திரம் பெற்றவர்களாக - உரிமைமிக்கவர்களாக- வாழவேண்டும் என்பதற்காக ஏழையாக வாழ்ந்தவர். அந்தப் பெரியாரை நினைவு கூருவது மகிழ்ச்சியளிக்கிறது - என்றார்.

கே. முத்துலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

இன்று நாம் எமது உரிமைகள் அனைத்தையுமே இழந்துள்ளோம். எமது மக்கள் சுதந்திரமாக வாழ யார் போராடினாலும் அவர்களுக்கு எமது ஆதரவும் ஒத்துழைப்பும் உண்டு. இந்த நாட்டில் தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்று விரும்பி அதற்காகத் தியாகங்கள் புரிந்தவர் தந்தை செல்வா. சமாதானமாக வாழ முடிந்தவரை முயன்ற அவர் சிங்களத் தலைவர்களின் எண்ணங்களைப்புரிந்து கொண்டதனால் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை முன்வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். 'தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்ற அவரின் வார்த்தை தீர்க்கதரிசனம் மிக்கது - என்றார்.

கூட்டத்தில் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் விஜயரத்தினம், அரவிந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-103)

## தவக்காலச் சிந்தனை

### இருபத்தைந்தாம் நாள்

"ஆண்டவராகிய இயேசுவே பாவி என் மேல் இரக்கமாயிரும்"

இன்றைய உலகில் தாம் மட்டுமே தான் நேர்மையாக நடப்பவர்கள் மற்றவர்கள் பாவிகள் என்று ஒதுக்குகின்ற மனப்பான்மை பலரிடம் வளர்ந்து வருகின்றது. ஆனால் இயேசு கூறுகின்றார், தன்னைத் தாழ்த்துகின்றவன் உயர்த்தப்படுவான்; தன்னை உயர்த்துகின்றவன் தாழ்த்தப்படுவான் என்று. ஆனால் நாம் பரிசேயரைப் போல் பிறரை இகழ்ந்து நம்மை நாமே உயர்த்திக் கொள்கின்றோம். அப்படி நாம் வாழும்போது இறைவன் முன்னிலையில் நாம் மிகத் தாழ்ந்த நிலையில் கடைசியானவர் ஆவோம். இம்மன நிலையைக் களைந்து வரி வசூலிப்பவன் தன்னைத் தாழ்த்தி கடவுளுக்கு உகந்தவனாய் வீடு திரும்பியதுபோல்,

"ஆண்டவரே பாவியாகிய என் மீது இரங்கி அருளும் என்று கூறும் உள்ளத்தை இறைவன் நமக்கு அளிக்கட்டும்."

**ஜெயவதனி பூவிலிங்கம்**
யாழ்ப்பாணம்.

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப். 1

மக்கள் சேவைச் சங்கத்தின் தொண்டர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை மக்கள் சேவைச்சங்க கூட்ட மண்டபத்துக்கு காலை 10 மணிக்கு சமுகம் தருமாறு தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்1

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதில் கண்பரிசோதனை, பொது வைத்தியம், பல்வைத்தியம் ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளதால் பங்குபற்றி பயனடையுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

## செயலமர்வு ஒத்திவைப்பு

நாளையும் மறுநாள் திங்கட் கிழமையும் யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவிருந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சிச் செயலமர்வு குறிப்பிட்ட தினங்களில் நடைபெற மாட்டாது என்று வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

# வெவ்வேறு இடங்களில் நால்வர் கைதாகினர்

யாழ்ப்பாணம்,ஏப்.1

வெவ்வேறு இடங்களில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மந்துவில் மேற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த நமசிவாயம் ரவிராஜசிங்கம் (வயது38) என்பவர் நேற்று முன்தினம் 522 ஆவது படையணியினரால் மாலை 4 மணிக்கு அவரது தோட்டத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலர்மகள் றோட், அரியாலையைச் சேர்ந்த மயில்வாகனம் மதிகரன் (வயது28) என்பவர் நேற்றுக் காலை 8 மணியளவில் அரியாலையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாதரவத்தை, புத்தூரைச் சேர்ந்த இரட்ணம் திலகேஸ்வரன் (வயது 29), நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இரட்ணம் கமலகுமார் (வயது 27) ஆகிய இருவரும் கடந்த 28ஆம் திகதி இரவு 7மணிக்கு அவர்கள் வேலை செய்யும் பேக்கரியில் வைத்து ஊரெழு இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பேக்கரியின் உரிமையாளர் உட்பட இருவர் இதேதினத்தில் பேக்கரியில் வைத்துக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவர்களின் பெயர் விவரங்கள் ஏற்கனவே வெளியாகி இருந்தன.(ஐ-10)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்1

தமிழ்மொழி மூல அரசினர் பாடசாலைகளுக்கு கீழைத்தேய சங்கீத, சித்திர, கலை ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்கான கடிதத்தில் உள்ள இலக்கம் 1-62 வரை உள்ளவர்களுக்கு 3ஆம் திகதியும்,-

63-125 வரை உள்ளவர்களுக்கு 4ஆம் திகதியும் -

126-192 வரை உள்ளவர்களுக்கும் 1-38 வரையுள்ள நடன ஆசிரியர்களுக்குமான நேர்முகப் பரீட்சைகள் 5ஆம் திகதியும் காலை 9மணி தொடக்கம் நடைபெறவுள்ளன. (ஐ-5)

# உறவினரைத் தேடி அலையும் மக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்1

தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பலர் தமது உறவினர்களைத் தேடி அலைகின்றனர்.

பளை வண்ணாங்கேணியைச் சேர்ந்த செல்லையா தங்கராசா என்பவர் தனது மனைவியுடன் வியாபார விடயமாக யாழ்ப்பாணம் வந்து மீண்டும் திங்கட்கிழமை காலை பளைக்குப் புறப்பட்டபோது எழுதுமட்டுவாளுக்கு அப்பால் செல்லமுடியாமையினால் திரும்பி வந்துவிட்டனர்.

இவர்களின் நான்கு பிள்ளைகளையும் பற்றிய சரியான தகவல்களின்றி அவர்கள் கவலையுடன் தவசிக்குளம் நலன்புரி முகாமில் தங்கியுள்ளனர்.

இவர்களின் மூத்த மகள் நிறைமாத கர்ப்பிணியாவார். அவரது பிரசவத்துக்கான பொருள்களுடன் தங்கியிருக்கும் இவர்கள் பிள்ளைகளுடனான தொடர்பை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதேபோன்று திருமதி வே.விஜயலஷ்மி மோதல்கள் தொடங்கிய பின்னர்தான் இங்கே வந்துவிட்டதாகவும் பளையிலுள்ள தேநீர் கடையில் கடமையாற்றும் தனது கணவர் பற்றிய தகவல்களைப் பெறமுடியவில்லை என்றும் கூறினார்.

இந்திராபுரத்திலிருந்து இடம்பெயர்ந்த மாரிமுத்து காமாட்சி என்பவர் தனது ஆறுபிள்ளைகளுடனும் இடம்பெயர்ந்து இங்கே வந்து விட்டதாகவும் ஏற்கனவே கணவரை இழந்துவிட்ட தமது குடும்பத்துக்கு பொறுப்பாக இருந்த மருமகனைக் காணவில்லை என்றும் கூறினார்.

வண்ணாண்கேணியைச் சேர்ந்த சிவமூர்த்தி யோகராணி தனது ஆறு பிள்ளைகளுடன் மிருசுவில் கண்ணகை அம்மன் கோயிலில் தங்கியுள்ளார்.

தமது கணவர் தொடர்பான தகவல்கள் பற்றி அறியமுடியாதுள்ளதாகக் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு பலர் தமது உறவினர்கள் பற்றிய தகவல்களை அறிய முடியாது தவித்துக் கொண்டிருப்பதை அங்கு காணமுடிந்தது. (ஐ-5)

## நியந்த்ரீ கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்1

'நியந்த்ரீ' அமைப்பினால் அந்தணர்களுக்குக்கென நடத்தப்படும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை ஞாயிறு பி.ப 2.30மணிக்கு நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலக அபிவிருத்தி அலுவலர் பா.சர்வேஸ்வர சர்மா 'இன்றைய நிலையில் வைதீக கிரியைகள்' என்னும் பொருளில் உரையாற்றுவார். (ஐ-5)

## ஒரே இரவில் 4வீடுகளில் திருட்டுக்கள்

யாழ்ப்பாணம் ஏப்.1

ஒரே இரவில் அடுத்தடுத்து நான்கு வீடுகளில் தம் கைவரிசையைக் காட்டிய திருடர்கள், அங்கிருந்து பணம் மற்றும் பெறுமதிமிக்க பொருள்கள், உடுபுடைவைகள் ஆகியனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

நீர்வேலி மாசிவன் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இச் சம்பவங்கள் இடம்பெற்றன.

நள்ளிரவுவேளை வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது உள்நுழைந்து பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

காலையில் எழுந்து பார்த்தபோது வீட்டில் பொருள்கள் காணாமற்போயிருப்பது தெரியவந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

# நாகர்கோயில் பகுதி மீது வியாழன் இரவு ஷெல் வீச்சு!

வடமராட்சி,ஏப்.1

நாகர்கோயில் பகுதி மீது நேற்று முன்தினம் இரவு கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை அடுத்து நாகர்கோயில் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்குப் பகுதி மக்கள் நேற்றுக்காலை முதல் இடம் பெயர ஆரம்பித்தனர் எனவும் அறியவந்தது.

இதேவேளை வடமராட்சி, கிழக்கில் நாகர்கோயிலுக்கு அப்பால் உள்ள கிராமங்களில் இருந்து ஏற்கனவே 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளமை தெரிந்ததே.

மக்கள் இடம்பெயர்ந்துள்ள நாகர்கோயில், செம்பியன்பற்று மற்றும் மாமுனை, தளையடி போன்ற பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வந்த சிலர் தெரிவித்தனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயரும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து வடமராட்சியின் பல இடங்களிலும் தற்காலிக அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரும் அவரது அலுவலக ஊழியர்களும் இடம்பெயர்ந்தோரை நேரில் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-173)

## இலங்கை விவகாரத்தைக் கையாள
# விசேட பிரதிநிதியை நியமித்தது நோர்வே

புதிய நோர்வே அரசு இலங்கை விவகாரத்தில் தனது பங்களிப்பை தீவிரப்படுத்துவதற்காக விசேட ஆலோசகர் ஒருவரை நியமித்துள்ளது.

கடந்த அரசில் அங்கம் வகித்த - அந்த அரசில் இலங்கை விவகாரத்தைக் கையாண்ட - சோசலிச இடதுசாரிக் கட்சியின் தலைவரான ஏய்ரிஸ் கொசேன் என்பவரே ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த அரசில் இலங்கை விவகாரத்தைக் கையாண்ட இவர் அப்போது இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடனும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டு பேச்சுக்கள் நடத்தி வந்தார். இன்று முதல் அடுத்த ஆறு மாத காலம் வரை இந்தப் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

(உ-க-3)

## ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## உணவு, மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென அங்கு தாக்குதல்கள் ஆரம்பமாகின. மக்கள் திக்குத்திசை தெரியாது ஓடி தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

பளை, கச்சவெளி ஆகிய இடங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள் மட்டுமன்றி இங்கு வேலை தேடிச் சென்றவர்கள், வேலைக்குச் சென்ற அரச ஊழியர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு சிக்கிக் கொண்டனர்.

மிருசுவில், இத்தாவில் ஆகிய பகுதிகளில் இருந்து சிகிச்சை பெறுவதற்கு பளை சென்ற நோயாளர்கள் பலரும் கூட அங்கு சிக்கினர்.

மாதா கோயில், சென்.தோமஸ் தேவாலயம் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றில் சுமார் ஆயிரத்து 200 பேர் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அவர்களில் பலர் உடுத்த உடுப்புடன் மாற்றுஉடுப்பு இல்லாத நிலையில் முகாம்களில் தங்கியுள்ளனர்.

போதிய உணவு வசதிகள் இன்றி அவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். மதகுரு ஒருவரின் ஏற்பாட்டில் ஓரளவு உணவு அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. முதல் மூன்று நாள்களும் மக்கள் பணிஸை மட்டுமே மூன்று நேரமும் சாப்பிட்டனர்.

அங்கு இடம்பெற்ற ஷெல் வீச்சுக்களில் காயமடைந்த சுமார் 50 பேர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். அங்கு போதிய மருந்துகள் இல்லை; மருத்துவ வசதிகள் இல்லை.

மருத்துவ வசதிகள் கிடைக்காமல் 8 பேர் வரையில் இறந்துள்ளனர்.

அங்கு ஒரு வைத்தியரும் சில தாதியரும் 24 மணிநேரமும் பணி புரிகின்றனர்.

குழந்தைகளுக்கான பால்மாவுக்குக் கூட பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது.

கடந்த நான்கு நாள்களின் பின்னர் நேற்றுக் காலை நகரில் ஓரளவு மக்கள் நடமாட்டம் காணப்பட்டது. ஒருசில கடைகள் திறந்திருந்தன - இப்படித் தெரிவித்தனர்.

(உ-3)

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத் தீர்வை அமுல் செய்தால் தமிழ் மக்களுக்கு யுத்தமும் பயங்கரவாதமும் அவசியமற்றதாகிவிடும் என்றும் கருதினோம்.

விடுதலைப் புலிகள் பற்றி நாம் அறிவோம். அவர்கள் பேச்சுக்கு இதயசுத்தியுடன் வருவதில்லை.

இம்முறையும் நன்றாக ஆயுதங்களைத் தயார் செய்து கொண்டு - தற்போதைய நிலையை விட கூடுதல் பலத்துடன் - யுத்தத்துக்கு அவர்கள் வரலாம் என எதிர்பார்க்கலாம்.

பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் பயங்கரவாத நடவடிக்கைகளையும் யுத்தத்தையும் நிறுத்துவதற்குத் தயார் என விடுதலைப் புலிகள் உடன்படிக்கையில் கைச்சாத்திடவேண்டும்.

- புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்துவதாக உறுதிமொழி தரும்வரை அவர்களுக்கு எதிரான யுத்தத்தையும், யுத்த ஏற்பாடுகளையும் நாம் கைவிடமாட்டோம்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க உடன்படிக்கை ஒன்றுக்கு அமையவே அன்றி வேறு எந்த வகையிலும் யுத்தத்தையும் யுத்த ஏற்பாடுகளையும் கைவிடப் போவதில்லை - இவ்வாறு ஜனாதிபதி மேலும் கூறினார். (உ-3-4-7)

## பளையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டனர்.

கண்டி வீதிக்கு மேற்கேயுள்ள கிறவல் பாதை வழியாகவே இவர்கள் நடந்து வந்துள்ளனர்.

ஆனையிறவுக்கான படையினரின் வாகன அணிகளும் இந்த வழியாகத்தான் போய் வருவதாக அவர்கள் சொன்னார்கள்.

பளையில் இருந்து மேற்கே புலோப்பளைக்குச் சென்று, கச்சாய் வீதி, கிளாலி, கெற்பலி வழியாக நடந்து கண்டி வீதியில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தை தாங்கள் வந்தடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர். (உ-3)

## விமானத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

விமானத்தில் காணப்படும் துப்பாக்கிச் சன்னக் காயங்களை வைத்து உடனடியாக எந்த முடிவையும் எடுக்க முடியாது என்று விமானப்படையைச் சேர்ந்த விங் கொமாண்டர் காமினி விஜயசுந்தர கருத்து வெளியிட்டார்.

இதற்கிடையில் -

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த விமானப் படையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை விமானப்படைத் தளபதி எயர்மார்ஷல் ஜயலத் வீரக்கொடி நியமித்துள்ளார்.

சிரேஷ்ட விமானப் பொறியியலாளர், சிரேஷ்ட விமானி, சிரேஷ்ட விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் ஆகியோர் அக்குழுவில் இடம்பெறுகின்றனர். (உ-க-3)

## ஏப்ரல் முட்டாள் தினம் இன்று

இன்று ஏப்ரல் முதலாம்திகதி. ஏப்ரல் முட்டாள் தினம்!

உங்கள் நண்பர்கள், அன்பர்கள் யாராவது உங்களை ஏப்ரல் முட்டாளாக்க முயல்வார்கள். ஆகவே எச்சரிக்கையாக இருங்கள்.

அந்த வகையில் உங்கள் தோழன் 'சஞ்சீவி' உங்களுக்குத் தந்த செய்திதான் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கொழும்பு வருகை!

## உதவி அரசஅதிபர் அலுவலகம் தும்பளையில்

நெல்லியடி,ஏப்.1

யுத்த சூழலை அடுத்து மருதங்கேணியிலிருந்து அம்பன் கிராமத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்அலுவலகம் இன்று முதல் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்துக்கு அருகில் தற்காலிகமாக இயங்கவுள்ளது. மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை மற்றும் ஏனைய பகுதிகளில் வசிக்கும் மக்கள் இன்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு வந்து தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என உதவி அரசாங்க அதிபர் எஸ்.வேலாயுதபிள்ளை கேட்டுள்ளார்.

நாகர்கோயில் பகுதியைச் சேர்ந்த மக்களின் உள்நாட்டு, வெளிநாட்டு தபால்கள் பருத்தித்துறை தபால்நிலையத்தில் வைத்து இன்று காலை முதல் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7-109-173)

## வடக்குக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்த அட்மிரல் எச்.ஆர்.அமரவீரவும் - இணைப்பதிகாரிகளாக பதவியேற்றுள்ளனர்.

புலிகளின் தாக்குதல்களை முறியடிப்பதற்கான திட்டங்களைவகுத்து அரச படைகளை நெறிப்படுத்துவதற்காகவே ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(உ-க-3)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்தும் மிருசுவில் வரை இடம்பெற்றது.

இதற்கிடையில் முகமாலைப் பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் கதிர்காமு பொன்னையா (வயது 76 - இத்தாவில்) என்ற வயோதிபர் கையில் படுகாயமடைந்தார்.

இத்தாவிலைச் சேர்ந்த இவர் நேற்றுக்காலை தனது வீட்டைப் பார்த்து வரச் சென்றபோதே ஷெல் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

இதேவேளை யுத்த சூழல் நிலவும் இத்தாவில் - சதாபுரத்தில் இருந்து கடந்த புதன்று முகமாலைக்கு அத்தியாவசியப் பொருள்கள் வாங்கச் சென்ற குடும்பஸ்தர்கள் இருவர் சீருடையினரின் மோசமான தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முகமாலை, இந்திராபுரம் பகுதிகளில் நேற்றுக் காலை ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததை அடுத்து அங்கு தங்கியிருந்த பலர் தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்தனர் எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

தாங்கள் தாக்குதலின் மத்தியிலும் தமது வீடுகளில் தங்கியிருந்ததாகவும் -

நேற்றுக்காலை தமது பகுதிகளுக்கு வந்த விடுதலைப் புலிகள் தம்மை வெளியேறுமாறு கூறியதை அடுத்தே அங்கிருந்து தாம் வெளியேறியதாகவும் -

இடம்பெயர்ந்தவர்களில் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பளையில் சிக்குண்டுள்ள மக்கள் வெளியே நடமாடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப்படுகின்றனர் எனவும்-

மாசார், சோரன்பற்று ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பளை நகரத்துக்கு அவசிய தேவைகளுக்கு மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் எனவும்-தெரியவந்தது. (உ-7-5-31-15-117-173)

# ஐ.தே.க. உறுப்பினர் எம்.பி. பதவி இழப்பு!

ஐ.தே.கவின் எம்.பியான டாக்டர் ராஜித சேனரத்ன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சேனரத்ன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்துக் கொண்டு கடற்படை, விமானப்படை ஆகியவற்றுடன் வியாபார ஒப்பந்தங்களைச் செய்து இருந்தார் என்று குற்றஞ்சாட்டி நீதி, அரசமைப்பு விவகார பிரதி அமைச்சர் டினான் பெரேரா மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எச்.எஸ்.யாப்பா, அசோகா சில்வா ஆகியோர் இந்தத் தீர்ப்பை வழங்கினர். (உ-3-4)

# இரு மூத்த பத்திரிகையாளருக்கு லண்டன் தமிழ் விழாவில் விருது

லண்டன்,ஏப்.1

லண்டன் ரூட்டிங் அம்மன் ஆலயத்தில் இன்று நடைபெறும் முத்தமிழ் விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர்கள் இருவரும், சமய, சமூக சேவையாளர் ஒருவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மிகமூத்த தமிழ்ப்பத்திரிகையாளரும், மூத்த வானொலியாளருமான ஈழகேசரி முன்னாள் ஆசிரியர் சோ.சிவபாதசுந்தரம் -

"சற்றடேறிவியூ" வாரப்பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் லண்டனில் இருந்து வெளிவரும் "ஹொட் ஸ்பிறிங்" சஞ்சிகையின் ஆசிரியருமான மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளர் எஸ்.சிவநாயகம் -

லண்டனில் பல்வேறு சமய, சமூகப்பணிகளில் ஈடுபட்டு வரும் கே. இராமநாதன் -

ஆகியோரே விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ரூட்டிங் அம்மன் ஆலயத்தின் "சிவயோகம் மண்டபத்தில்" இன்று காலை 10மணி முதல் இரவு 10 மணிவரை நடைபெறவுள்ள இந்த முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் பிரபல சமயப் பேச்சாளர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் இந்த விருதுகளை வழங்கிக் கௌரவிப்பார்.

முத்தமிழ் விழாவில் பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம் மற்றும் நாட்டியம், இலக்கியச் சொற்பொழிவு என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (உ-7)

## ஆணையாளராக பாயிஸ் முஸ்தபா

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நியமிக்கப்பட்டுள்ளார். ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக சட்டத்தரணி மனோகரி சரத்முத்தேட்டுகம, என்.செல்வகுமார், குணதிலக ஆகியோர் நியமனம் பெற்றுள்ளார்.இவர்களது பதவிக் காலம் ஐந்து வருடங்கள் ஆகும். (உ-க-3)

## கிபிர் விமானம் குண்டு வீச்சு!

தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று காலை எட்டு மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின.

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் இராமநாதன்

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் இராமநாதன் அவர்கள் 27.03.2000 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சற்குணவதி தம்பதிகளின் இன்பு மகனும் பத்மாவதி அவர்களின் அன்புக்கணவரும் குகநேசன், குகப்பிரியை, குகவதனி, குகாயினி, கஜமுகன், வைகுந்தன், சங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகு, ரவி ஆகியோரின் அன்பு மாமனாரும் லாவண்யாவின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற மகேஸ்வரி, பத்ம நாதன், பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2000) சனிக்கிழமை ஜெயபுரத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. குகவதனி
(மகள்)

மே/பா-க.கனகவாசன்,
பொற்பதி றோட்,
கோண்டாவில் கிழக்கு. (74995)

## திருமதி விநாசித்தம்பி மங்கையர்க்கரசி

புலோலி கிழக்கைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி மங்கையர்க்கரசி அவர்கள் 30.03.2000 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் இளைப்பாறிய மருதங்கேணி கிராமத் தலைமைக்காரர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை விநாசித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் வி.சேதுநாயகம் (சமாதான நீதிவான், முன்னாள் கிராம உத்தியோகத்தர்), வல்லிபுரம் (இராஜதுரை - ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர், கொழும்பு), ஜெயராஜா(நிர்வாக முகாமையாளர் சென்.அந்தோனிஸ் லிமிட்டெட், கொழும்பு), சந்திரநாயகம் (பொறியியலாளர் - பொற்சுவானா), ச.நவமணிதேவி, ப.சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சே.புவனேஸ்வரி(இளைப்பாறிய ஆசிரியை), வ.இராஜலட்சுமி (கொழும்பு), ஜெ.தவமணி (கொழும்பு), ச.தவைட்சுமி(கொழும்பு) க.சண்முகநாதன்(கிராமஉத்தியோகத்தர், புலோலி மத்தி), ச.பரமகுரு (டுபாய்) ஆகியோரின் அன்பு மாமியும் சு.தெய்வேந்திரன்(கொழும்பு), இராஜேந்திரன்(அமெரிக்கா), சரோஜினி பார்த்திபன்(பொற்சுவானா), லோகேஸ்வரி, சிவகுமாரன்(லண்டன்), சே.அருந்தவராஜா (லண்டன்), காந்தராஜா(பொற்சுவானா), செல்வராஜா(கொழும்பு), வ.முரளி(தோட்ட உதவி அத்தியட்சகர், நாவலப்பிட்டி), சதீஷ்(கணக்காளர்-கட்டார்),சியாமளா(கொழும்பு), ச.சுபாஜினி(பொற்சுவானா), பிரவீணா (கொழும்பு), பிரதீபா(கொழும்பு), ச.கணேந்திரன்(பல்கலைக்கழகம் - மொரட்டுவா), சசிரேகா, துவாரகா ஆகியோரின் பிரியமான பேர்த்தியாரும் பா.பிரசாந்த், கார்த்திக், பிரணவன்(பொற்சுவானா), சி.நிசாந்த், நிருஷாந்த், வினோத(லண்டன்), அ.துளசி(லண்டன்), கா.சான், சஞ்சீவ்(பொற்சுவானா), தெ.கௌசல்யா,காஞ்சனா,கஜன்(கொழும்பு) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற வ.நவரட்ணராஜா(பொலீஸ் உத்தியோகத்தர்), மு.நவமணிதேவி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.03.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வீட்டில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை முனையிலுள்ள குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.சேதுநாயகம் J.P
(மகன்)

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (C/11609)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி





கண்புரையும் விழிக்குள் பொருத்தப்படும் லென்சும(Introcular Lenses) விழிகளிற்கு ஏற்ற வகையிலான கண்ணாடிகளையும் தரமாகவும் நியாயமான முறையிலும அழகாகவும் பெற்றுத் தருபவர்கள்.

துஷர ஒப்ரிசன்ஸ்

இல- 544, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

74906




## கருத்துக் கலசம் - மேஜூரா

### அஞ்சுக அநீதிக்கு

*அநீதி இழைப்பவன் அநீதிக்கு உட்பட்டவனை விட அதிகமாகத் துயரம் அனுபவிப்பான்*

**- பிளாட்டோ.**

வான் பிழைத்தால் - மழை பொய்த்தால் - பயிர் வளராது. பயிர் வளராவிடில் மக்கள் பட்டினியால் வாட நேரிடும். பட்டினி மக்களை அழிக்கவல்லது. அரசன் - அரசு - நீதிதவறினால் மழைபெய்யாது; செல்வங்களும் நலிந்து போகும்; பசியும் பட்டினியும் மலிந்து விடும்.

நீதி என்பது சட்டங்களால் மட்டும் வரையறுக்கப்படுபவை அல்ல. மனித நீதி - சமூக நீதி - இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு வேறுபடுவதை இன்னும் காணமுடிகிறது. அந்தந்த நாட்டின் அல்லது பிரதேசத்தின் இன, மத, கலாசாரங்களுக்கு இசைவாகவும் சமூகநீதிகள் நடைமுறையில் உள்ளன. எனினும் எல்லா நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் பொதுவான நீதிகளும் உண்டு.

மனிதருக்கு மனிதர் நீதிகள் வேறுபடுவதும் வழமையே. ஒருவருக்கு அநீதியாகத் தெரிவது அடுத்தவருக்கு நீதியாகத் தோன்றுகிறது. உதாரணமாக, திருட்டுத் தொழிலில் ஈடுபடுபவன் அதனை நீதியாகவே எண்ணுகிறான். பசித்திருக்கும் எனது குடும்பத்திற்கு உணவு போடுவதற்கு திருடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லையே என்று நியாயப்படுத்த முயல்வான். ஆனால் பொது நீதியின் பிரகாரம் அடுத்தவன் தேடிய பொருளை அபகரிப்பது அநீதி.

இத்தகைய முரண்பாடுகள் ஒருபுறமிருக்க, அநீதி இழைப்பவனோ அதனால் பாதிக்கப்படுபவனை விட அதிகம் துயரமுறுவான் என்பது உலகியல் உண்மை.

அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும் என்பது முதுமொழி. அநீதி இழைக்கும் ஒருவன் உடனடியாக இல்லாவிடினும் எப்போதோ ஒரு காலத்தில் அதற்கான தண்டனையைப் பெறுவான் என்பதனையே இந்த முதுமொழி சொல்கிறது. ஆகையால் அநீதி இழைக்காதே என்று எச்சரிக்கிறது; உணர்த்துகிறது.

சமூக நீதிகளையும், உலக நீதிகளையும் மதிக்காத, பொருட்படுத்தாத காலமாக இன்றைய காலம் மாறியுள்ளது. நீதிக்கு அஞ்சிச் செயற்படுவோர் எண்ணிக்கை குறைந்து கொண்டு போகின்றது. தாம் நினைத்ததைச் செய்துமுடித்து விட்டால் போதும். அது நீதியா அநீதியா என்று சிந்திக்காதவர்களே பெரும்பான்மையினராக மாறிவருகின்றனர். அநீதி அல்லது தவறு செய்தவர்கள் அதனை நீதி அல்லது சரியானது என்று நிலைநிறுத்தவே முயல்கின்றனர்.

இதன்விளைவாக உண்மையான நீதிகள் இன்னவையே என்பது மறக்கப்பட்டுவிடுமோ என்ற ஆபத்தும் அரும்பி வருகிறது. நீதிகள் மறக்கப்பட்டால் அல்லது மறைக்கப்பட்டால் மக்களின் வாழ்வியல் மாக்களின் - மிருகங்களின் - நிலைக்குத் தள்ளப்பட்டு விடும்!

அநீதி இழைப்பவர்கள் என்றோ ஒருநாள் உரிய முறையில் தெய்வத்தினால் தண்டிக்கப்படுபவர் என்பது ஒரு புறமிருக்க -

அவர்கள் இழைத்த அநீதியால் பாதிக்கப்பட்டவர்களை விட அனுபவத்தில் அதிகமாகத் துயரம் அடைவார்கள். இதனை உணர்ந்தால், மறவாதிருந்தால் நீதிக்குக் கட்டுப்படும், அநீதிக்கு அஞ்சும், மனநிலையை - பக்குவத்தை - எய்துவதற்குப் பேருதவியாக இருக்கும்.

# காப்பியம் தந்த வீரமாமுனிவர்

பிறநாட்டான் ஒருவன் தமிழ் மொழியை ஆர்வத்தோடு பயின்று நுண்மாண் நுழைபுலம் மிகுந்து புலவர் ஏறாய் விளங்குவான் எனின், அப்பெரியானைப் பாராட்டுவது தமிழன் கடமையாகும். மேலை நாட்டிலிருந்து ஈண்டுப் போந்து தமிழ்மொழிக்குச் செய்த அரிய தொண்டுகளால் அண்ணல்களாய் விளங்குவாருள் விழுமிய வித்தகர் வீரமாமுனிவரும் ஒருவரென்றால், அவர்தம் நூல்களையும், வரலாற்றுச் செய்திகளையும் நாம் அறிய வேண்டியது அவசியமே. தமிழ் மொழிப் புலமை சாலவும் எய்தி, இலக்கண நூல்கள், அகராதி ஆகிய பல்வேறு அணிகளால் தமிழ மாதை அலங்கரித்து நம்மிடை இற்றைநாள வரை புகழ்மணம் வீசிக் கொண்டிருப்பவர் வீர தீரம்படைத்த வித்தகரே.

இத்தாலி நாட்டைச்சேர்ந்த ஜோசப் பெஸ்கி கி.பி.1680ஆம் ஆண்டு பிறந்தார். ஐரோப்பிய மொழிகளையும், கலைகளையும் பயின்றபின் துறவறம் புகுந்தார். அக்காலத்திலும் இவர் அரசியல் அலுவல் ஒன்றை நாடியிருப்பின் அவர் தம் கல்விக்கேற்ப அரியபெரிய பதவியில் அமர்ந்திருக்கக் கூடும். ஆயினும் அரசியல் துறையை அற்பம் என்று மதித்து அருள் துறையில் இறங்கினார். தாம் பெரிதும் விழைந்த அறத்தொண்டுகளைப் பரந்த நிலையில் ஆற்ற எண்ணியே ஜென்ம தேசம் நீத்து இந்தியாவிற்கு வந்தார். திருப்பணி செய்வதற்கே தமிழ் நாடு வந்தார்; செந்தமிழ்பணி செய்வதற்கன்று. அவரது பணியின் ஆர்வத்தையும் தமிழ்ப்புலமையையும் கண்ட மதுரைச் சங்கத்தார் "வீரமாமுனிவர்" என்று அவரை அழைத்தனர். நுகத்தில் ஒளியும் அகத்தில் அளியும், செயலில் தெளிவும் உடையவர். ஆடம்பரத்தில் ஆசை அற்றவர். அன்னாரின் துறவின் தூய்மையும், அகத்தின் அகலமும், அறிவின் செறிவும், அன்பின் ஆழமும், அருளின் பெருக்கமும் அடங்காப் புகழ் உடையன.

வீரமாமுனிவர் தமிழ் கற்கத்தொடங்கி தமிழ்த் தொண்டு செய்த காலம் அரசியல் கொந்தளிப்பான காலம். மராட்டியர் படையெடுப்பும், ஆற்காட்டு நவாப்பின் ஆராட்டமும் தமிழ்நாட்டை நிலைகுலுங்கச் செய்தன. இந்தச் சந்தர்ப்பத்தில், கடல் கடந்து வந்த பிறநாட்டினர், தமிழ் மொழியில் கருத்தைச் செலுத்தி, உயர் இலக்கண இலங்கியங்களை கற்றுத்தெளிந்து. அம்மொழியிலே கவிபாடும் திறமை கைவரப் பெறுதல் என்பது எளிதான செயலன்று. அவர் காலத்தில் அச்சிடப்பட்ட தமிழ் நூல்கள் இல்லை. தமிழ்க் கற்ற பெரியாரைத் தேடி செல்வதற்குரிய இரயிலோ, மோட்டார் வண்டியோ, விமானமோ இல்லை. சீரான பாதையில்லை. நேரான தபால் செதி இல்லை. கையில் பணம் இருந்ததா? வறுமை வாக்களித்த துறவிக்குப் பணம் ஏது? தமிழ்ப்பணி செய்வதையே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவரா? அதுவுமில்லை.

கிறிஸ்துமதத்தை மக்களிடையே மாண்புற நிறுவுதற்குப் பணி செய்த இவர், இந்து மதப் பற்றுடையாரோடு வாதம் நிகழ்த்த வேண்டியதாயிற்று. சமய வாக்குவாதங்கள் செய்வதற்காக இந்து மத நூல்களை கற்றுணர்ந்தார். முனிவர் மேனாட்டினராயினும் முத்தமிழ்ப் புலமை பெற்றிருந்தார். இத்தாலி, கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளில் புலமை வாய்ந்தவர். இவர் தமிழ் மொழிக்கு செய்துள்ள தொண்டு ஈடும், எடுப்பும் அற்றது. தமிழ் உரைநடையை வளர்த்தார். மக்களின் ஆன்மநலங் கருதிப் போந்த முனிவர், தமிழ்க்கலை நலங்கண்டார். கண்ட கலையின் காட்சியிலும், கொண்ட கருத்து மாட்சியிலும் ஒன்றெனக் கலந்து நின்றார். திருக்குறளின் தெள்ளியநயமும், சிந்தாமணி செழுஞ்சுவையும், கம்பராமாயணத்தின் கவியின்பமும் அவர் மனதைக் கவர்ந்தன. சிந்தாமணியைப்போல் கிறித்து மதச் சார்பாக ஒரு பெருங்காப்பியம் செய்ய ஆசை கொண்டார். அவ்வாசையின் கனியே தேம்பாவணி என்னும் அருங் காவியமாகும். இயேசு நெறியை மேற்கொண்ட மக்களால் தேம்பாவணி பெரிதும் பாராட்டப்படுகின்ற காவியமாகும். "இப்பெருங் காப்பியத்தைப் படித்தும் கேட்டும் உணர்ந்தோர் கடவுளளித்த மெய்ம்மறை தெளிந்து அறவழி நடந்து கசடெல்லாம் கடந்து கதிபெற்று வாழ்வர்" என்று தேம்பாவணியின் திறத்தினைத் தமிழ் அறிஞர் ஒருவர் வியந்து மகிழ்ந்தார். தேம்பாவணி பிறமதத் துவேஷனைகளுக்கு இடங்கொடாது கிறிஸ்துவின் தியாகச் சிறப்பை உயரியமுறையில் தமிழருக்கு உணர்த்த வேண்டுமென்று எழுந்தது. இக்காவியத்தை எம்மதத்தோரும் ஆர்வமுடன் கற்றலே அறிவாகும். அறம் விளைவிக்கும் நல்லொழுகலாறுகளை மக்கள் கைக்கொள்ளுமாற்றானும், அகத்திற்கு மாறான மறைச் செயல்களை மக்கள் விலக்கும் மாற்றானும், ஒரு முறைக்கு மேல் மற்றொருமுறை கூறுவது, கூறியது கூறல் என்ற வழுவாயினும் அவ்வழுவிற்கு இடநின்று வெவ்வேறு படியில் நின்று வலியுறுத்திக் கூறுவதைக் காவியம் முழுவதும் பரக்கக் காணலாம்.

சில அரிய உண்மைகளை வீரமாமுனிவர் புகட்ட எண்ணினார். செல்வத்தின் நிலையாமையை "நீரெழுங் குமிழி போலும்", "காரெழு மின்னல் போலும்", "கடலெழும் திரைகள் போலும்" என்ற உவமைகளைக் கொண்டு நன்கு விளக்கியுள்ளார்.



"இளமை நிலையாதது" என்பது யாவரும் அறிந்த உண்மையாயினும் அதுபற்றி மக்கள் போதிய கவனம் செலுத்துவதில்லை. ஆனால் வீரமாமுனிவர் தம் கற்பனா சக்தியை அவ்வுண்மையோடு கலந்து திறம்படச் சொல்லி உரம்பட உள்ளத்தில் நாட்டும்போது அவ்வுண்மை நம் உள்ளத்திடை ஊன்றி உறுதி கொள்கின்றது.

வீரமாமுனிவர் தம்காப்பியத்தில் தமிழ்ப்புலவர்களைப் போற்றியதுபோல், தாந்தே, தாசோ, வெர்ஜில் முதலிய மேநாட்டுப் புலவர்கள் நூல்களையும் பயன்படுத்தியுள்ளார். தேம்பாவணியில் எருசலேம் விடுதலை என்ற இருபதாம் படலத்தில் தாசோவின் காப்பியம் முனிவருக்குத் துணைபுரிகின்றது. எனவே, மேனாட்டுக்கலையாறும், தமிழ்நாட்டுக்கலையாறும் கலக்கும் ஏரி தேம்பாவணியாம்.

தமிழ் மக்கள் போதிய புலமையும் மொழிப் பற்றுமின்றி இருந்தமைக்குக் காரணம் தேடினார். பிற மொழிகளில் வசன நூல்கள் மலிந்து கிடப்பன போன்று தமிழ்மொழிக்கண் இல்லாமையே காரணமாக கொண்டார். கற்றோர்க்கு அன்றி, மற்றோர்க்குப் புரியாத செய்யுள்களால் இயன்ற இலக்கிய நூல்களின் வாயிலாக மக்களுக்கு அறிவு ஊட்டுவதைவிட, வசன நூல்களின் வாயிலாக அறிவுறுத்தல் எளிதென எண்ணினார். தமிழ் உரைநடைக்கு முனிவர், வளர்ப்புத் தந்தையாக விளங்கினார். பாமர மக்களுக்கு, விகடச்சுவை செறிந்த, "பரமார்த்த குரு கதை"யை எழுதி வெளியிட்டார். இக்கதை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இதிலிருந்து இந்நூலின் சிறப்பு விளங்குகிறது. "வேதியர் ஒழுக்கம்" என்ற அரிய நூலை இயற்றி, வேதத்தைப் புகட்டும் குருக்களுக்கு ஞானத்தைப் புகட்டினார். மக்களுக்கு அறிவு புகட்ட பலநூல்களை எழுதி வெளியிட்டார்.

தமிழ் அகராதிக்குத் தனித் தந்தையாகிவிட்டார். பண்டைக் காலத்தில் நிகண்டுகள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டு வழங்கி வந்தன. நிகண்டுகள் செய்யுட் பயிற்சியுடையார்க்கு மட்டும் பயன்பட்டன. அகராதி எழுதும் வழக்கம் ஐரோப்பியர்க்குரியது. அந்த முறையைத் தமிழருக்கு காட்டியவர் வீரமாமுனிவரே. வீரமாமுனிவரது சதுர் அகராதியே பின்னெழுந்த அகராதிகளுக்கு முதல் நூலாகவும், வழிகாட்டியாகவும் அமைவதாயிற்று. தமிழின் சொல்வளத்தை அனைவரும் அறிந்து மொழியில் வல்லுநர் ஆதல் வேண்டுமென்ற பேரெண்ணத்தோடு இயற்றப்பட்ட சதுர் அகராதி மக்களுடைய கண்களைத் திறந்தது.

அரியதோர் அகராதி தொகுத்துத் தண்டமிழ் மொழிக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவர், நன்னூல் முதலிய புன்னூல்களையும் ஐயந்திரிபுற ஓதியுணர்ந்து, "தொன்னூல் விளக்கம்" என்னும் பெயரால் ஒரு செந்தமிழ் இலக்கணம் செய்தார். இந்நூல் எழுத்து முதல் அணி ஈறாகவுள்ள ஐந்திலக்கணங்களையும் அழகுறத் தொகுத்திருக்கின்றது. உலக வழக்கிலமைந்த தமிழ் மொழியின் இலக்கணங்களை இனிதறிந்து, "கொடுந் தமிழ் இலக்கணம்" ஒன்று இலத்தீன் மொழியில் வரைந்தார். இவ்விலக்கணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் முயலும் பிற நாட்டறிஞர்களுக்கு இந்நூல் பேருதவியாக நிற்கின்றது.

பழம் பெருமை வாய்ந்த தமிழ் மக்களின் பண்பினை மேனாட்டினருக்கு அறிவுறுத்த, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் பெயர்த்தமைத்தார்.

திருக்காவலூரில் கோயில் கொண்டெழுந்தருளிய தேவமாதாவின் மேல் அன்பு கொண்டு, அவ்வன்பை "திருக்காவலூர் கலம்பக"மாக உருவாக்கினார். இன்னும் அவர் எழுதிய "கித்தேரியம்மாள் அம்மானை"யும் போற்றத்தக்கதாகும். வீரமாமுனிவர் இசைத்த செய்யுள் நடைநூல்களுள், உலக மீட்பரின் அன்னையாரது பெருமைகளைப் போற்றும் "திருக்காவலூர் கலம்பகமும்" கிறிஸ்துவின் மறைக்காக உயிர்நீத்த கித்தேரியம்மாளின் சரிதையாகிய "கித்தேரியம்மாள் அம்மானை"யும் கனிந்த உள்ள நெகிழ்ச்சியால், குறையில்லாப் பாவினங்களின் ஓசை நயத்தால் மேம்பட்டவை.

### ப்ளோரம்மாள் மெறாயிஸ்

முனிவர் எழுத்துத்திருத்தமும் செய்தார். தற்போதுள்ள ஏகார ஓகாரங்களின் உருவ நிலை வீரமாமுனிவரின் முயற்சியின் பயன்தான். ஒல்காப்புகழ் தொல்காப்பியர் கூறிய விதியை தமிழ்ப்பால் அல்காப்பற்றுடைய முனிவர்மாற்றி விடத் தமிழ் மொழி அறிஞர்கள் யாவரும் அச்சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டனர் என்றால், முனிவரின் பெருமைதான் என்னே!

நன்றி- தேம்பாவணிச் சொற்பொழிவுகள்

## தியாகதீபம்

செந்தமிழ் வளரவும்
செழுங்கலை வளரவும்
விடுதலை என்ற
பேரொளி காணவும்
தம்முயிர் நீத்துத்
தம்புகழ் நிறுவிய
தியாக சீலர்
ஆயிரம்! ஆயிரம்!
இந்திய ராணுவம்
இலங்கையிற் புகுந்ததும்
இயற்றிய கொடுமையும்
கண்ட எங்கள்
அன்னை பூபதியெனும்
தியாகத்திருவுரு
அதனை நிறுத்த
அன்பொடு வேண்டி
அஹிம்சை எனும்
ஆயுதம் ஏந்தி
உண்ணா நோன்பை
நோற்றே தன்னுயிர்
நீத்ததால்
தியாகச் செய்கையால்
குன்றில் இட்ட
தீபம் ஆகி
என்றும் நிலைக்கும்
புகழ் எய்தினரே!

- சி.கனகசுந்தரம்

# ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் புடின் ஈட்டிய அமோக வெற்றி!

ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் விளாடிமிர் புடின் (Vladimir Putin) அமோக வெற்றி ஈட்டியுள்ளார். யெல்ட்ஸின் பதவி துறந்ததை அடுத்து கடந்த ஜனவரி புத்தாண்டு தினத்தில் புடின் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். தற்போதைய தேர்தல் மூலம் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

94.27 சதவீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் புடினின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 6ஆம் திகதி வெளியிடப்படும்.

ரஷ்யப்படைகளின் கட்டுப்பாட்டில் தற்பொழுது இருந்து வரும் செச்சினியாவில் பாதுகாப்பு காரணமாக தேர்தல்முடிவை வெளியிடுவது தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

செச்சினிய தேர்தல்முடிவு வெளிவராமலேயே புடின் 52.52 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார். செச்சினிய முடிவு வெளிவரும் போது இது மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யப்படையினர் மத்தியில் புடினுக்குப் பேராதரவு இருந்து வருகிறது. ஜனவரி முதலாம்திகதி புடின் பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடன் முதலில் விஜயம் செய்தது செச்சினியாவுக்குத்தான். செச்சினியாவில் ரஷ்யப்படைகள் ஈட்டிய வெற்றியே இந்தத்தேர்தலில் புடினின் வெற்றிக்கு வழிவகுத்தது.

செச்சினியாவில் 90 ஆயிரம் ரஷ்யப் படைகள் நிலை கொண்டுள்ளன. செச்சினியாவில் நியாயமான முறையில் தேர்தல் நடந்திருக்குமா என்பது குறித்து கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் ஜென்னடி சிகனோவ் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதித்தேர்தலில் ஒரு வேட்பாளர் வெற்றிபெறுவதற்கு குறைந்தது 50 சதவீதமான வாக்குகள் தேவை. 50 சதவீதமான வாக்குகளை எவரும் பெறுவதற்கு தவ




ரஷ்யாவின் தூர கிழக்குத் துறைமுகம் ஒன்றில், ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்ய கடற்படையினர் வாக்களிக்கும் காட்சி.

றும் பட்சத்தில் இரண்டாவது கட்ட வாக்களிப்பு நடத்தப்படும். இரண்டாவது கட்ட வாக்களிப்பை இம்மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. புடின் 50 சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெற்றது மூலம் இரண்டாம் கட்ட வாக்களிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் புடினுக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுக்க மாட்டாது என்றே ஆரம்பத்தில் கணிப்புக்கள் தெரிவித்தன. முதலில் வெளியான முடிவுகளும் ஆரம்பத்தில் அப்படித்தான் இருந்தன. புடினுக்கு போட்டியாகக் கருதப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜென்னடி சிகனோவ் ஆரம்பத்தில் 30 சதவீத வாக்குகளையும் புடின் 45 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தனர். புடின் 50 சதவீதவாக்குகளைப் பெறுவது சந்தேகம் என்றே முதலில் கருதப்பட்டது.

ஆனால் ரஷ்யாவின் பிரதான நகரங்களில் வாக்குகள் எண்ணப்பட்ட சமயம் புடினின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. புடினின் சொந்த நகரான பீற்றேர்ஸ்பேக் மற்றும் தலைநகர் மொஸ்கோ ஆகியவற்றில் புடினுக்கு ஆதரவாக பெரும் எண்ணிக்கையான மக்கள் வாக்களித்திருந்தனர்.

கே.ஜி.பி.எனப்படும் ரஷ்ய உளவு ஸ்தாபனத்தின் தலைவராக ஒரு காலத்தில் இருந்த புடினை அரசியலுக்குக் கொண்டு வந்ததே இந்த பீற்றேர்ஸ்பேக் நகரம் தான். கே.ஜி.பி.யில் இருந்து விலகிய பின்னர் பீற்றேர்ஸ் பேக் மாநகர மேயராக புடின் கடமை ஆற்றி இருந்தார்.



பதவி துறந்த யெல்ட்ஸின்

94.27 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி புடின் 52.52 சதவீத வாக்குகளையும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜென்னடி சிகனோவ் 29.44 சதவீதவாக்குகளையும் பெற்றிருந்தனர். ஏனைய வேட்பாளர்கள் மிகவும் குறைந்த அளவிலான வாக்குகளைப் பெற்றுப் படுதோல்வி அடைந்துள்ளனர். இவர்களில் விளாடிமிர் ஷிறிநோஸ்கியும் ஒருவர். 1991, 96 ஆம் ஆண்டுகளில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட இவர் இம்முறை பெற்ற வாக்குகள் 2.72 சதவீதம் மட்டுமே.

ரஷ்யாவின் புதிய அரசமைப்புக்கிணங்கி தேர்தல் செல்லுபடியாவதற்கு தேர்தலில் குறைந்தது 50 சதவீதமானோர் வாக்களிக்க வேண்டும். 50 சதவீதத்துக்குக் குறைந்தோர் வாக்களிக்கும் பட்சத்தில் தேர்தலை செல்லுபடி அற்றது என்று தேர்தல் கமிஷனர் அறிவிப்பார். ஆனால் தற்போதைய தேர்தலில் 65.8 சதவீதமான ரஷ்ய மக்கள் வாக்களித்துள்ளனர். இந்த வாக்களிப்பு விகிதம் எதிர்பார்க்கப்பட்டது ஒன்றே.

கடந்த வருட இறுதி வரை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ புடினைப் பற்றிப் பலருக்கு அதிகம் தெரியாது.

புடின் முன்னர் கிழக்கு ஜேர்மனியில் கே.ஜி.பி. உளவாளியாகக் கடமை ஆற்றியவர். தனது அரசியல் வாழ்க்கையை 1990 களில் முற்பகுதியில் ஆரம்பித்தார்.

புடின் 1952 ஆம் ஆண்டு சென் பீற்றேர்ஸ்பேக் நகரில் பிறந்தார். சட்டத்துறையில் கல்வி பயின்று பட்டதாரி ஆனார். இவர் பட்டதாரியானவுடன் ரஷ்யாவின் உளவு ஸ்தாபனமான கே.ஜி.பி.யில் சேர்ந்து கொண்டார். பல ஆண்டு காலம் கிழக்கு ஜேர்மனியின் தலைநகரான கிழக்கு பேர்லினில் இவர் கடமை ஆற்றினார். அரசியல் உளவு நடவடிக்கையிலேயே இவர் ஈடுபடுத்தப்பட்டார்.

இவர் மிகவும்கடினமான உழைப்பாளி. வெட்டசாட்டமானவர். 1980 களின் இறுதியில் கே.ஜி.பி.யில் இருந்து ஓய்வு பெறும் வரை லெப்டினன்ட் கேணலாக பதவி உயர்வு பெற்றிருந்தார்,

கே.ஜி.பி.யில் இருந்து ஓய்வு பெற்றதும் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார். 1990 ஆம் ஆண்டு சென். பீற்றேர்ஸ்பேக் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு மேயர் ஆனார். சென்பீற்றேர்ஸ் பேக்கில் ஜனநாயக முறைப்படி தெரிவான முதலாவது மேயர் இவர்தான்.

கடந்த ஓகஸ்ட் மாதம் யெல்ட்ஸினால் இவர் பிரதமராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னரே அவர் பிரபல்யம் அடையத் தொடங்கினார். அவரே யெல்ட்ஸினின் அரசியல் வாரிசு என்பதை அப்பொழுது எவருமே அறிந்திருக்கவில்லை.

செச்சினிய பிரிவினைவாதிகளுக்கு எதிராக அவர் ஆரம்பித்த யுத்தமே அவரை பதில் ஜனாதிபதியாகவும் தற்பொழுது ஜனாதிபதியாகவும் உயர்த்தி விட்டுள்ளது.

செச்சினியா தற்பொழுது ரஷ்யப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் மலைப்பகுதிகளில் இன்னும் பிரிவினைவாதிகளே ஆதிக்கம் செலுத்துகின்றனர். தொடர்ந்து பெரும் எண்ணிக்கையான படைகளை செச்சினியாவில் வைத்திருப்பதற்கு ரஷ்யாவின் பொருளாதார நிலைமை இடம் கொடாது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



ஜனவரி முதலாம் திகதி பதில் ராகப் பதவி ஏற்றவுடன் விளாடிமிர் புடின் செச்சினயா சென்று அங்கு செச்சினியப் பிரிவினைவாதிகளுக்கு எதிராகப் போராடும் ரஷ்யப் படைகளுக்கு உற்சாக மூட்டினார். புடினுக்குப் பக்கத்தில் காணப்படுபவர் அவரது மனைவி லயட்மிலர்.

ரஷ்யாவை மீண்டும் அமெரிக்காவுக்கு ஈடாக பலம் வாய்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்பதே புடினின் குறிக்கோள். இந்த நோக்கம் பழைய சோவியத் பாணி ஆட்சிக்கு மீண்டும் இட்டுச் செல்லலாம் என்று மேற்கு நாடுகளில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

புடின் ஒரு புதிரான மனிதர் என்று கூறுகிறார் அமெரிக்க செனேட்டில் குடியரசுக்கட்சித் தலைவராக

**உலக உலா**
**என்.பி.சீலன்**

உள்ள ட்ரென்ட்லொட். "புடினின் பேச்சுக்கள் நன்றாக இருக்கின்றன. ஆனால் அவரின் நடவடிக்கைகளைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்கிறார் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மடெலின் ஆல்பிரைட்.

ரஷ்ய மக்கள் புடினிடமிருந்து பெரிய மாற்றங்களை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் புடினால் உடனடியாக அவற்றை நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகமே. புடினுக்கு ஆயுதப் படைகளின் பேராதரவு இருப்பது தேர்தல் முடிவுகளின் மூலம் தெரியவருகிறது. ரஷ்யாவில் இது முக்கியமானது.

ரஷ்யாவின் 12 லட்சம் படைவீரர்களில் 97 சதவீதமானோர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துள்ளனர். இவர்களின் வாக்குகளில் 80 சதவீதமானவை புடினுக்கே கிடைத்துள்ளன. பொஸ்னியாவில் சமாதானப் பணிகளில் ஈடுபட்டிருக்கும்

## பலம் வாய்ந்த ரஷ்யாவை உருவாக்குவதே குறிக்கோள்

ரஷ்யப் படையினரில் 80 சதவீதமானோரும் கருங்கடலில் நிலை கொண்டுள்ள ரஷ்ய கடற்படைவீரர்களில் 86 சதவீதமானோரும் புடினுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

புடின் தற்பொழுது எதிர்நோக்கும் முதலாவது பிரச்சினை நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதே. நாட்டின் பொருளாதாரம் பெரும் அளவில் ஆட்டம் கண்டுள்ளது. சந்தைச் சீர்திருத்தம், சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாட்டில் ஊழலும் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் கடந்த 10 ஆண்டுகளாகப் போதிய பலனை அளிக்கவில்லை. அரசியல் துறையிலும், பொருளாதாரத்துறையிலும் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதே நாடு எதிர்நோக்கும் முக்கிய தேவை ஆகும். ரஷ்யாவில் பலமான அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே தம்து குறிக்கோள் என்கிறார் புடின்.

பேச்சுச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்று புடின் உறுதி அளித்துள்ளார். சொத்துக்களை வைத்திருப்பதற்கு தனியாருக்கு உள்ள உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்றும் கூறினார்.

இந்தத் தேர்தலில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சம் கம்யூனிஸ்ட்டுக்கள் படுதோல்வி அடைந்ததே



ரஷ்யா நாடாளுமன்றமான டூமாவுக்கு வெளியே கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் யெல்ட்ஸினுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். யெல்ட்ஸினுக்கு எதிரான குற்றப் பிரேரணையை நாடாளுமன்றம் விவாதித்த சமயம் யெல்ட்ஸினைப் பதவி விலகும்படி கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கம்பியூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஜென்னடி சிகனோவ் இரண்டாவது தடவையாகத் தோல்வி அடைந்துள்ளார்.

முதல் தடவை 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யெல்ட்ஸினுடன் கலர் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். 1996 தேர்தலில் ரஷ்ய வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் யெல்ட்ஸினுக்கு வழங்கிய பேராதரவு அவரது வெற்றிக்கு சுலபமாக வழிவகுத்தது.

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் போது ரஷ்யாவில் தற்பொழுது நிலவிவரும் ஏழ்மை, சர்வாதிகாரப் போக்கு, வன்செயல்கள் ஆகியவற்றுக்கு தாம் முடிவு கட்டுவதாக சிகனோவ் உறுதி அளித்தார். தாம் பதவிக்கு வந்தால் ஓய்வூதியத்தை அதிகரிக்கப் போவதாகவும், கூடுதல் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதாகவும், விலைவாசி உயர்வைத் தடுக்கப் போவதாகவும் வாக்குறுதி அளித்தார். எனினும் எதிர்பார்த்தது போன்று தேர்தலில் அவருக்கு இரண்டாவது இடமே கிடைத்தது.

கிறிஸ்துவே முதலாவது கம்யூனிஸ்ட் என்று கூறும் சிகனோவ் ஒரு பட்டதாரி. கடந்த ஆண்டு செஞ்சதுக்கத்தில் ஜோசப் ஸ்ராலின் பிறந்த தினவிழா கொண்டாடப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சிகனோவ், "ஜோசப் ஸ்ராலின் 20 ஆம் நூற்றாண்டில் மட்டும் அல்ல ரஷ்யாவின் முழு வரலாற்றிலுமே ஒரு பெரும் தலைவர்" என்று புகழாரம் சூட்டி இருந்தார்.

# யாழ்ப்பாணத்தவர் விருப்பம் எது என்பதினை வெளிப்படுத்தியது மக்களின் அசல் பேரணி

**உள்ளும் புறமும் — குறுமுனி**

யாழ்ப்பாணத்தில் கடந்த வார இறுதியில் - இருபத்தைந்தாம் திகதி சனிக்கிழமை - நடைபெற்ற சமாதானப் பேரணி கொழும்பில் உள்ளவர்களின் கவனத்தை மட்டுமன்றி சர்வ தேச மட்டத்திலும் அக்கறையை உண்டாக்கியது.

இந்தச் சமாதானப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் தெற்கில் சமாதானப் பிரார்த்தனை நடத்தப்பட்டது. கொழும்பு விகாரமகாதேவிப் பூங்காவில் நடைபெற்ற சமாதானப் பிரார்த்தனையில் சமாதானத்தை விரும்பும் பல அமைப்புகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் மிக அண்மைக் காலத்தில் நடைபெற்ற பிரமாண்டமான மக்கள் பேரணியாக இருபத்தைந்தாம் திகதி நடைபெற்ற சமாதானப் பேரணி விளங்கியது. அறுபதுக்கும் மேற்பட்ட சமய சமூக அமைப்புக்களின் ஆதரவுடன் பேரணி நடைபெற்றது. சர்வமத குருமார்கள், ஆன்மீகப் பெரியோர்கள், மாணவர்கள், பொதுமக்கள், தொழிலாளர்கள், பெண்கள், வர்த்தகர்கள் உட்பட்ட எல்லாத் தரப்பினர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இதில் பங்குபற்றினர்.

இந்தப் பேரணியின் விசேட அம்சம் என்னவெனில், இதற்கு அரசியல் கலப்போ, பின்னணியோ எதுவும் இல்லாததுதான்! முழுக்க முழுக்க பொதுமக்கள் அமைப்புகள் முன்னர் எப்போதும் இல்லாத விதத்தில் ஒன்று திரண்டு, மிகுந்த எழுச்சியுடன் இந்தப் பேரணியில் பங்கு கொண்டனர். தாமாகவே, தமது சொந்த விருப்பத்தில் மக்கள் கலந்து கொண்ட இந்தப் பேரணிக்கு பல்லாயிரக் கணக்கானோர் திரண்டது மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

அரசியல் கட்சிகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்ன பின்னணியில் நடக்கின்றன என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. தமக்கு மக்கள் ஆதரவு அதிகம் இருக்கின்றது என்பதனைப் போலியாகக் காட்டிக் கொள்வதற்காகவும், தாம் நடத்தும் கூட்டம் அல்லது ஊர்வலம் வெற்றி தந்தது என்று சொல்வதற்காகவும் அரசியல் கட்சிகள் தூர இடங்களில் இருந்து மக்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டுவந்தே இவற்றை நடத்துவது உண்டு. பல சந்தர்ப்பங்களில் அதற்கு நன்றியாக பலவகை வெகுமதிகளைக் கொடுப்பதும் உண்டு.

## கலப்படம் இல்லாதது

ஆனால் கடந்த இருபத்தைந்தாம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற சமாதானப் பேரணியில் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. மக்கள் நடந்து வந்தும், சைக்கிள்களில் வந்துமே பேரணியில் பங்குபற்றினர். அவ்வாறிருந்த போதிலும் சமாதானப் பேரணியில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர். கலப்படம் இல்லாத, போலியற்றதான உண்மையான, புனிதமான பேரணியாக அது விளங்கியது.

பேரணி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அரசியல் கட்சி ஒன்று தமக்கு ஆதரவு தேடும் வகையில், துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க முற்பட்ட போது, பேரணியின் அமைப்பாளர்கள் அதற்கு இடங்கொடுககாது தடுத்துவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமாதானப் பேரணி, எல்லா வகைகளிலும், மக்களுக்காக, மக்களால் நடத்தப்பெற்ற மக்களின் பேரணியாக இடம்பெற்றது. இது வேறெந்தப் பேரணிக்கும் இல்லாத விசேட சிறப்பு. இந்த வகையில் சமாதானப் பேரணியை மக்களின் பேரணியாகப் பேணியதில், ஒழுங்கு செய்ததில், வெற்றிபெறச் செய்ததில் அக்கறையுடன் உழைத்த சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினர் பாராட்டப்பட வேண்டியவர்களே.

பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் பங்குகொண்ட சமாதானப் பேரணி சொன்ன செய்தி - தென்னிலங்கைக்குச் சொன்ன செய்தி - வெளி உலகத்துக்குச் சொன்ன செய்தி - மிக முக்கியமானதாகும்.

ஈழத்தமிழர் தாயகத்தின் இதயமாக விளங்குவது யாழ்ப்பாணம். இங்கு வாழும் மக்கள் சுதந்திரமான மனிதர்களாக, சுய கௌரவமும் மரியாதையும் உள்ள மக்களாக, ஆட்சி உரிமை உட்பட்ட நீதிபொலியும் சகல உரிமைகளையும் அனுபவிக்கும் மக்களாக வாழ விரும்புகிறார்கள். அவற்றுக்காக அவர்கள் போராடவும் தயங்காதவர்கள்.

தமிழர்கள் தமக்குரிய நியாயமான, நீதியான உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கியதால்தான் யுத்தமே வெடித்தது. அந்த யுத்தத்தினால் சிங்கள மக்களைவிட பலப்பல மடங்கு பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள். ஆகையால் எல்லோரையும் விடத் தமிழர்களே சமாதானத்திலும் அமைதியிலும் அதிக ஆர்வமாக உள்ளார்கள். மனித இயல்பும் அதுவே. ஆகையால் தமிழர்கள் சமாதானத்தை விரும்பாதவர்கள் என்று எவரும் தப்புக்கணக்குப் போட்டு விடக்கூடாது.

ஆனால், தென்னிலங்கையில் சில சாரார் யாழ்ப்பாண மக்கள் சமாதானத்தை விரும்பாதவர்கள் என்ற தப்பான எண்ணத்துடன் இருக்கிறார்கள். மேலும் யாழ்ப்பாண மக்கள் எந்தவகையான சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதும் வெளியாருக்கு விளக்கமில்லாமலும், தெளிவில்லாமலும உள்ளது உண்மையே. தமிழ் மக்கள் எந்த வகையான தீர்வை விரும்புகிறார்கள் என்பது எவ்வாறு பிறருக்கு விளக்கமற்று உள்ளதோ, அதே போன்றே எத்தகைய பின்னணியுடனானசமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதும் பிறருக்குத் தெளிவில்லை.




அத்தகைய தெளிவற்ற தன்மையைப் போக்கும் வகையிலும் யாழ்ப்பாண மக்களின் விருப்பத்தைப் புலப்படுத்தும் வகையிலும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் பேரணி விளங்கியது. இன்றைய அரசியல் பின்னணியில் யாழ். மக்களின் விருப்பம் என்ன என்பதையும் இப்பேரணி எடுத்துச் சொல்லி உள்ளது.

★ 17 ஆண்டு காலப்போர் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

★ யுத்தம் உடன் நிறுத்தப்பட்டு நீதியானதும் நியாயமானதுமான ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும்.

★ அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

★ சமாதானத்துக்காக விடுக்கப்படும் சமிக்ஞைகள் உதாசீனப்படுத்தப்படலாகாது.

யாழ் மக்களின் சமாதானத்துக்கான விருப்பம் மேற்கண்ட அடிப்படைக் கோரிக்கைகளை உள்ளடக்கியதே என்ற செய்தி தென்னிலங்கை மக்களுக்கும் அங்குள்ள அரசியல்வாதிகளுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

சமாதானம் என்ற போர்வையில் தமது உரிமைகள் பறிக்கப்படுவதையோ, நீதியற்ற வஞ்சகமான தீர்வு திணிக்கப்படுவதையோ யாழ். மக்கள் விரும்பமாட்டார்கள், ஏற்கமாட்டார்கள் என்ற செய்தியும் பேரணி மூலம், அங்கு எடுத்துச் செல்லப்பட்ட சுலோகங்கள் மூலம், ஒலிக்கப்பட்ட கோஷங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆண்டாண்டுகளாக நடைபெறும் போரின் விளைவு தமிழருக்கு வேதனை தரும் வாழ்க்கையைத் தந்துள்ளதை எல்லோரும் அறிவர். இந்தப் பின்னணியில் குடாநாட்டு மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களையும் பின்வருமாறு விவரித்தே பேரணியை ஏற்பாடு செய்த சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு மக்களைப்பேரணியில் கலந்து கொள்ள அழைத்து-

அடுக்கடுக்காய்த் தொடர்ந்துவரும் அவலங்கள், அன்புச் சுற்றங்கள் அருகிலில்லா நிலை, தந்தையை இழந்த தனயன், தனயனை இழந்த தந்தை, தாயை இழந்த சேய், சேயை இழந்த தாய், கணவனைப் பிரிந்த மனைவி, மனைவியைப் பிரிந்த கணவன், இல்லறச்சோலையில் இன்புற்று இணைந்த எத்தனை குடும்பங்கள் இன்று வாழ்விழந்து வாழ வழியிழந்து வேதனையின் விளிம்பில் விரக்தியின் எல்லையில் போரின் பிடியில் பரிதவித்து நிற்கின்றன.

சொந்தக் கடலில் மீன்பிடிக்க முடியவில்லை. உற்பத்தி செய்த விளைபயிரை சந்தைப்படுத்த முடியவில்லை. வேண்டாத கைதுகள், விரும்பாத சோதனைகள், பாலியல் வல்லுறவுகள், பயத்தின் மத்தியில் அன்றாட வாழ்க்கை, பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை, பாடசாலைச் சிறார்கள் பள்ளி செல்வதும் பாடங்கற்பதும் அசாதாரண சூழ்நிலையில், கையிழந்து, காலிழந்து, கண்ணிழந்து வாடுவோர் தொகை நாளாந்தம் அதிகரிப்பு, தொடரும் பொருளாதாரத் தடை வன்னியில் எம் சோதரர் பட்டினியின் விளிம்பில் - என்று இருந்தது.

மேலும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தும் சூழ்நிலை உருவாகிவரும் வேளையில், நோர்வேக்கு எதிராக தெற்கின் சில சக்திகள்- தமிழர்களுக்குரிய நீதியான உரிமைகள் வழங்கப்படக்கூடாது என்பதில் அதீத அக்கறை உள்ள சக்திகள் - ஆர்ப்பாட்டங்கள் நடத்த முயன்றன.

இந்தவேளையில் யாழ்ப்பாணத்து மக்களின் நிலைப்பாடும் விருப்பமும் சமாதானப் பேரணிமூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீதியுடன் கூடிய சமாதானம், உரிமைகளைத் தரும் சமாதானம் தேவை என்பது வெளியாருக்குப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

## பயப்பிராந்தியும் மக்கள் பேரணியும்

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட சமாதானப் பேரணியை, குடாநாட்டு மக்கள் சமாதானத்துக்காக ஒன்றுபட்ட ஒரு நிகழ்வாக தென்னிலங்கையில் சில அவதானிகள் கருதுகிறார்கள். இப்பிரதேச மக்கள் தமக்குள்ள கஷ்டங்களை, தமது நிலைப்பாட்டை அச்சமின்றிச் சொல்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் கொண்டனர் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இம்மாதம் 23 ஆம் திகதி, அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணையம் நடத்திய ஆய்வுப்பட்டறையில் "ஹியுடெக்"கைச் சேர்ந்த வண.பிதா கே.ஜெ.ஜெயக்குமார் கூறிய கருத்து நோக்கற்பாலது.

குடாநாட்டு மக்கள் தம்மிடம் வளர்த்துக் கொண்டுள்ள பயப்பிராந்தியம் காரணமாக இங்கு நடைபெறும் எந்த விதமான அநீதிக்கும் எதிராகக் குரல் கொடுப்பதில்லை - என்று அவர் கவலை தெரிவித்திருந்தார். அடிவாங்கினாலும் பரவாயில்லை உயிர் பிழைத்தால் போதும் என்ற நிலைக்கு யாழ்.மக்கள் வந்திருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்த நிலை மாறுவதற்கான ஓர் ஆரம்பமாகவும் சமாதானப்பேரணி அமைந்தது என்றால் மிகையில்லை.

# அரசு - ஐ.தே.கட்சிப் பேச்சுகளில் வண்டிக்குப் பின்னால் நிற்கும் குதிரை

## பிராந்திய சபையா? மாகாணசபையா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்முயற்சியில் ஆளும் கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றன. கடந்த வியாழக்கிழமை வரை இரு தரப்புக்களையும் சேர்ந்த குழுக்கள் ஐந்து தடவைகள் கூடிப்பேசிவிட்டன. ஆனால் முக்கியமான விடயங்களில் முழுமையான அளவில் இணக்கம் காணப்பட்டதாகத் தகவல் இல்லை.

பேச்சுவார்த்தை மேசைக்குப் போவதற்கு முன்னர்,1997ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்த அறிக்கையில் உள்ள யோசனைகளை ஆராய்வதே நல்லது என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றிலும் அதனை வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் இப்போது, 1997 அறிக்கையில் அடிப்படையிலா அல்லது ஆளுங்கட்சியின் புதிய பொதியின் அடிப்படையிலா அரசு - ஐ.தே.க கலந்தாலோசனை நடைபெறுகிறது என்பது குறித்து வெளியில் பெரிதாகப் பேச்சில்லை. எந்த அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றாலும் சரி, இரண்டு முக்கிய விடயங்களில் இரு சாராருக்கும் இடையில் கருத்திணக்கம் ஏற்படவேண்டும். இல்லையேல் பேச்சுக்கள் பயனற்றவையாகிவிடும்.

இரண்டு முக்கிய விடயங்களில் முதலாவதாகவருவது இந்த நாட்டின் ஆட்சிமுறை எப்படி இருக்கப் போகிறது என்பதாகும். பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற புதிய முறையா அல்லது மாகாணங்களைத் தன்னகத்தே கொண்ட ஐக்கிய இலங்கை என்ற இப்போதுள்ள (பழைய) முறையா என்பது திட்டவட்டமாகவும் முழு அளவிலும் முடிவு செய்யப்பட வேண்டிய பெரும் விவகாரமாகும்.

இரண்டாவது - பிராந்திய சபைகளுக்கான அல்லது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலை எவ்வாறு அதிகரிப்பது; என்னென்ன துறைகளில் எப்படி எப்படி அதிகரிப்பது என்பன குறித்து முடிவுக்கு வருதல் - இணக்கம் காணுதல் - என்பதாகும்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பேச்சுக்களில் அதிகாரங்களை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து ஆராயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

முக்கியமற்ற விடயங்களை தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்காமல் முக்கியமான ஒரு விடயத்தையாவது ஆலோசனைக்கு எடுத்தமை வரவேற்கத்தக்கது.

இங்கேயும் வண்டிக்குப்பின்னால் குதிரையைப் பூட்டும் தன்மையையே காணமுடிகிறது. அதிகாரப் பரவல் அலகு (Devolution unit) எது என்று முடிவு செய்யாமல், அதற்கான அதிகாரங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என ஆராயப்பட்டிருக்கிறது.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் வெறும் அதிகாரங்களை கேட்டுத் தொடங்கப்பட்டதல்ல. தந்தை செல்வா காலம் தொடக்கம் ஆட்சியில் பங்கு கேட்டுத்தான் தமிழர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களின் அந்த உரிமையை (கோரிக்கை என்று சொல்லுவது இங்கு பொருத்தமற்றது.)

ஓரளவிலேனும் உறுதி செய்யக்கூடிய ஆட்சிமுறை சமஷ்டி தான். சமஷ்டி குறித்த சாதக, பாதகங்களை தென்னிலங்கை அரசியல் தலைவர்கள், காலத்துக்குக் காலம், அவ்வப்போது பேசி வந்த போதிலும், அவர்களுக்கு அது, ஓர் ஒவ்வாமைப் பொருளாகி (Allergy) விட்டது. சமஷ்டி என்றால் தமிழர்களுக்கு நாட்டைத் துண்டாடிக்கொடுப்பதாகும் என்ற பேரினவாத மாயையால் அவர்களின் சிந்தனைகள் இருளடைந்துள்ளன என்பதே உண்மை.

இந்தியாவில் உள்ள ஆட்சிமுறையே அரைச் சமஷ்டி தான். அதனையொத்த விதத்திலேயே ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தத்தின் கீழான மாகாணசபை முறை என்று கூறப்பட்டது. ஒற்றையாட்சி முறையைக் கைவிட மனமில்லாத ஜே. ஆர் ஜெயவர்த்தனா அப்படி ஒரு பூச்சடித்தார். எனினும் சந்திரிகா மேல் மாகாண முதலமைச்சராக இருந்த போது, மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் போதாது என்றார். ஆனால் இப்போது அது குறித்து உரத்துப் பேசினால் தமிழர் சமஷ்டி கேட்டது நியாயம் என்று ஒப்புக்கொள்ள நேரிடும் என்பதால் அது குறித்து அடக்கி வாசிக்கிறார்.

தமது தந்தையார் காலத்தில் - நாற்பத்து மூன்று வருடங்களுக்கு முன்னர் - 1957 ஆம் ஆண்டில் - அப்போதைய அரசியல் சூழ் நிலைக்கு ஏற்ப உச்சரிக்கப்பட்ட பிராந்திய சபை என்ற வாசகத்தை பொறுக்கித் தமது தீர்வுப் பொதியில் சேர்த்துள்ளார்! அவ்வளவு தான்!! பிராந்திய சபை முறை என்ற சொல்லினுக்கும் தமிழ் மக்களின் சுயாட்சி அபிலாசைக்கும் இடையில் பெரிய இடைவெளியும் குறைபாடும் உள்ளன என்பதே உண்மை. ஆனால் தமது தீர்வு யோசனை தமிழர்களுக்குப் போதிய உரிமைகளை வழங்கக் கூடியது என்று அரசு வெளி உலகத்தவரை நம்ப வைத்திருக்கிறது.

பிராந்திய சபைகள் திட்டத்துக்காவது ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு நல்குமா என்பதனையே தென்னிலங்கையில் உள்ள சமாதானம் விரும்பும் சாராரும், வெளிநாட்டவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது குறித்து அரசும் ஐ.தே.கட்சியும் கருத்திணக்கத்துக்கு வருமா?

முக்கியமான இந்த விவகாரம் குறித்துப் பேசி முடிக்காமல் -

ஆளுநர்களின் பணிகள், சட்டமா அதிபரின் பணிகள், பிராந்திய அமைச்சரவை எவ்வாறு அமைய வேண்டும், உபஜனாதிபதி பதவிகளை உருவாக்குதல் என்ற உபவிடயங்களை ஆராய்ந்து என்ன பயன்? இவற்றில் கருத்திணக்கம் காணப்படின், பிரதான விவகாரத்திலும் - பிராந்திய சபைகளை நிறுவ - ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் தெரிவிக்கும் என்று அரசு தரப்பு நம்புகிறதா?

வண்டிலுக்குப் பின்னால் குதிரையைப் பூட்டினால் வண்டி பின்னுக்கு இழுத்துச் செல்லப்படும். அதன் பின்னர் முன்னுக்கு இழுத்து வருவது கடினமே!



# எதிர்பார்ப்பு

~ முகுமாலை சேகர் ~

மேசையின் மத்தியில் கிடந்த கடிகாரத்தைப் பார்க்கிறேன். நேரம் 7.30. இன்னமும் இருபது நிமிடத்திற்குள் அந்தக் கடைக்கு சென்றாக வேண்டும். அவசரமாக உடை மாற்றிக்கொண்டு அறையைப் பூட்டி சாவியைப் பத்திரப்படுத்திக்கொள்கிறேன். வீட்டில் உள்ளோர் ஏற்கனவே புறப்பட்டு வெளியே சென்றிருந்தமையால் எவரிடமும் சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. வீட்டின்முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். வீட்டிலிருந்து பிரதான வீதி அண்மையில்தான் இருக்கிறது. சில நிமிடங்களில் பிரதான வீதியை அடைந்தபோது சனநடமாட்டம் அதிகரித்திருந்தது. வழமையைவிட இன்று மனம் ஒரு பரவச நிலைக்கு ஆட்பட்டிருந்தது.

"எங்க தம்பி துலைக்கோ போறியள்?"

குரல் கேட்டு திரும்பிய என்னை நோக்கி மார்க்கண்டு மாஸ்டர் முகமலர்வுடன் வந்து கொண்டிருந்தார்.

"வாங்கோ மாஸ்டர்"

புன்னகையை வரவழைத்து உதட்டில் பொருத்திக் கொண்டேன்.

"கொஞ்சசாமான்கள் கடையிலை வாங்கவேணும்"

நான் கேட்காமலேயே அவர் புறப்பட்ட காரணத்தைக் கூறிவிட்டார். நான் மௌனித்தேன்.

"அப்ப தம்பி எங்கை போறீர்?"

மாஸ்டரிடம் எதிர்பார்த்திருந்த கேள்வி. விடை சொல்வது சுலபமாக இருந்தது.

"நானும் சந்தி வரைக்கும் போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டனான்"

பதிலுடன்சைக்கிளின் வேகத்தை சற்று அதிகரித்தேன்.

கைகடிகாரத்தில் நான் நிர்ணயித்த நேரத்தை முட்கள் அண்மித்துக் கொண்டிருந்தன. சந்தியை அடைந்தபோது கடைகள் திறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அந்தக் கடை மட்டும் சமீபகாலமாக விடியற் காலையிலேயே திறக்கப்பட்டு விடுகிறது. சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் கடையின் இருமருங்கையும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. எனது சைக்கிளையும் நிறுத்திவிட்டு வியர்வை அரும்பிய நெற்றியைத் துடைத்தபடி உள்ளே நுழைகிறேன்.

அங்கு பலர் காணப்பட்டனர். முகங்களில் பலவித உணர்வுக் கலவைகள். நாம் யாவரும் ஏதோ ஒன்றிற்காக காத்திருக்கிறோம் என்ற உணர்வு பொதுவானதாக அவர்களில் இருந்தது. என்னையும் அவர்களுடன் இணைக்க வேண்டிய நிலை. நாற்பது வயது மதிக்கத்தக்க அம்மணி ஒருவர் தவிப்புடன் கடையின் வெற்றிடப் பகுதியில் குறுக்குநெடுக்காக உலவிக் கொண்டு இருந்தார். நெற்றியில் துலங்கிய பெரிய குங்குமப் பொட்டும், கழுத்தில் மின்னிய தாலியும் அவர் திருமணமானவர் என்பதை வெளிக்காட்டின. கைகள் ஐந்து சோடிகளுக்கு குறையாத வளையல்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கதிரையொன்றில் அமர்ந்திருந்த சிறுபையனின் அருகே சென்ற அப்பெண்மணி "தம்பி அப்பாவிட்டை என்ன கேட்பாய்?" - என்றார்.

இக்கேள்வியை எதிர்பாராத சிறுவன் எதைக் கேட்பது என்பதுபோல தாயின் முகத்தைப் பார்க்கிறான்.

"ரொம்பக் காசு அனுப்பச் சொல்லு"

அறிவுறுத்திவிட்டு மீண்டும் உலாவ ஆரம்பித்தார்.

மேசையில் கிடந்த தொலைபேசி கிணுகிணுக்கிறது. மேசை முன் அமர்ந்திருந்தவர் ரிசீவரை எடுத்து 'ஹலோ' என்றார். மறுகணம் ஓர் ஆணின் குரல் மெலிதாகக் கேட்கிறது. இருந்தவர்களின் ஆர்வம் அவர்களது செயற்பாட்டு மாறுதல்களில் புலப்படுகிறது. தாம் குறித்து வைத்திருந்த விடயத்துண்டை சிலர் எடுத்துக்கொண்டனர். இருக்கையின் நுனிப்பகுதிக்கு அசைந்தவர்கள் சிலர். உலாவிக் கொண்டிருந்த பெண்தொலைபேசி அருகில் சென்று நின்று கொண்டார்.

"வத்சலா யார்? ஜேர்மனியில் இருந்து கோல் வந்திருக்கு. அன்னராசா எண்டவர் கதைக்கிறார்"

மேசை முன்பாக அமர்ந்திருந்தவர் ஒரு கையில் தொலைபேசியை பிடித்தபடி அங்கே அமர்ந்திருந்தோரை நோக்கி உரத்த குரலில் அறிவிப்பு செய்கிறார். அநேகரது முகங்களில் படிந்திருந்த ஆர்வ ரேகைகள் மறைந்து ஏமாற்றக் கோடுகள் படிந்தன. தொலைபேசி அருகே நின்றிருந்த பெண்ணது நிலைமையோ பரிதாபமாக இருந்தது. காற்றுப்போன பலூன் போல் குன்றிப்போனாள். மெதுவாக அவ்விடத்தே இருந்து விலகி காலியாகக் கிடந்த இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டாள். வெளியே இருந்த ஒரு பெண்மணி பரபரப்புடன் அழைப்பாளரை நோக்கி விரைந்தாள். அவளது முகத்தில் கிடைத்தற்கரிய பேறு ஒன்று பெற்று விட்ட முகமலர்வு. தொலைபேசியை கையிலெடுத்து "ஹலோ! நான் வத்சலா கதைக்கிறன். நீங்கள் ஆர் கதைக்கிறது? மாமாவோ?" கேள்விக்குப் பின்னர் விடையையும் கேள்விக் குறியாய் நிறுத்தினார். அவளது ஊகம் சரியானது என்பதை தொடர்ந்து அவள் உரையாடியது உறுதிப்படுத்தியது.

மெலிதான குரலில் பேசியதிலிருந்தும் தொலைபேசியை கையாளும் விதத்திலிருந்தும் தொலைபேசி பாவனையுடன் பரிச்சியப்பட்டவள் என்பது தெரிந்தது. சுமார் பதினைந்து நிமிட நேரத்தின்பின் அவளது உரையாடல் முற்றுப்பெற்றது. மீண்டும் அங்கு இருந்தோரிடையே ஆர்வ அலை தோன்றியது. நாற்பது வயது மதிக்கத்தக்க அப்பெண் இருக்கையில் இருந்து எழுந்து நின்று கொண்டாள். அடுத்த அழைப்பு நிச்சயமாக தனக்காகவே இருக்கும் என்பது போல அவளது பாவனைகள் அமைந்திருந்தன. மீண்டும் தொலைபேசி அழைக்கிறது.

"ஹலோ! யார் கதைக்கிறது?"

மேசைமுன் இருந்தவர் தொலைபேசியை எடுத்து கேட்கிறார்.

"கனடாவிலை இருந்து கோல் வந்திருக்கு. ராசரட்ணம் என்பவர் கதைக்கிறார். தனலக்ஷ்மி நிற்கிறாவோ?"

எழுந்து நின்றவளின் வேகமான செயற்பாடுகளில் இருந்து அது அவளிற்கான அழைப்பு என்பதை புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவள் ஓடிச்சென்று தொலைபேசியை எடுத்து மாறி உபயோகிக்க முயன்றபோது ஒரே நேரத்தில் பலகுரல்கள் அவளை திருத்த முற்பட்டன.

"பிள்ளை மற்றமாதிரி வைத்துக் கதையும்" - ஒருவரின் குரல் அது.

"ரெலிபோனை கண்ணிலும் காணாததுகள் கதைக்க வெளிக்கிட்டால் உப்பிடித்தான்" - வேறொருவரின் முணுமுணுப்பு.

எல்லாவற்றையும் மீறிச் சிரிப்பொலி கிளம்பி அவ்வறையை நிறைத்தது. இவற்றையெல்லாம் சட்டை செய்யும் நிலையில் அவள் இல்லை. தொலைபேசியை மாற்றிப் பிடித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள். அவளது குரலோ தெளிவாக அனைவருக்கும் கேட்டது.

"நீங்கள் யார் கதைக்கிறியள்?..சரி.சரி. எப்பிடி சுகமாய் இருக்கிறியளோ? தம்பியும் உங்களோடை கதைக்க வேணும் எண்டு வந்திருக்கிறான்" - இவ்வாறு அவள் பேசியதிலிருந்து மறுமுனையில் கதைப்பவர் அவள் கணவர்தான் என விளங்கியது.

"என்ன கொஞ்ச நாளாய் உங்கடை கடிதத்தைக் காணேல்லை?"

கேள்வியுடன் சிலகணநேரம் மௌனமானாள். எதிரிலிருந்து ஏதோ சமாதானம் கூறியிருக்க வேண்டும். அவளது உரையாடல் சாந்தமாக தொடர்ந்தது.

"மாமிக்கும் இப்ப அடிக்கடி சுகமில்லாமல் வருகுது. ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்கும் மாறி மாறித் திரியிறம். சரியான காசுச் செலவு. இனிமேல் நீங்கள் கொஞ்சம் கூடக் காசு அனுப்பினால் நல்லா இருக்கும்"

பணத்தை அதிகப்படியாக பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் போல் அவளது தொனிப்பு அமைந்திருந்தது. எனக்கு ஏனோ வெறுப்பாகஇருந்தது. தொலைபேசி இயக்குநரிடம் சென்று "அண்ணா! எனக்கேதிலும் தகவல் வந்ததோ?" எனக் கேட்டேன். "இண்டைக்கு *சரியான நெருக்கடியாய் கிடக்குது. லைன் கிடைக்கிறது கஷ்டம். அவை அங்கை எடுத்தாலும் இஞ்சை கதைக்கிறது கஷ்டம். எனக்கு எத்தகவலும் வரவில்லை." - என்றார் அவர். நான் உதட்டைக் கடித்துக் கொண்டேன். அவள் தொடர்ந்தும் உரையாடிக் கொண்டே இருந்தாள்.

"போன முறை வந்த போட்டோவிலை நீங்கள் கொஞ்சம் மெலிஞ்ச மாதிரிக் கிடந்தது? ஏன் சாப்பிடுறேல்லையே? ஒழுங்காய் உடம்பைக் கவனிச்சுக் கொள்ளுங்கோ. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். என்ன செய்யிறது? நாங்களும் பிரிஞ்சிருக்கவேண்டிய ஆட்களாய்ப் போனம்"பெருமூச்சொன்றை தொலைபேசி மூலம் தூது விட்டாள் அவள்.

"மச்சாளின்ரை கலியாணவீடு நல்ல பெரிசாய் நடந்தது. வீடியோவும் எடுத்தவை. நானும் என்ரை பங்குக்கெல்லாம் செய்திருக்கிறன். கசற் அனுப்புவினம்தானே. பாருங்கோவன்" தனது பங்களிப்பு கணவரின் தங்கையின் கலியாண வீட்டில் எத்தனை முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை வெளிப்படுத்தினாள் அவள்.

"நீங்கள் இருந்திருந்தால் இன்னும் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்" கனதியான சோகத்தை குரல் மூலமாக கரைத்து வார்க்கிறாள். என்ன ஆச்சரியம்? கண்ணிலிருந்து ஒரு துளி கூட அரும்பவில்லை. சிலவேளை அழுது அழுது கண்ணீர் வற்றிப் போயிருக்கலாம் என எண்ணிய நான் அவளின் இச்செய்கைக்கு நியாயம் தேடிக் கொண்டேன். உரையாடல் தொடர்ந்து கொண்டிருக்கையில் "ஹலோ! ஹலோ! ஹலோ!" என தொடர்ச்சியான ஹலோக்கள் அவளது வாயில் இருந்து உதிர்ந்தன.

தொலைபேசி இயக்குநர் "அக்கா கட்டாய் போச்சு வையுங்கோ" என வேண்டுகோள் விடுத்தார். பெருத்த ஏமாற்றத்துடன் தொலைபேசியை பொருத்திவிட்டு அகன்றபோது ஒரு குரல்...

"ஹலோ, ஹலோ எனக் கத்திகிலோக் கணக்கிலை காசு வேண்டுவமெண்டு பார்க்குதுகள்"

"அதுக்குத்தானே நீங்களும் வந்திருக்கிறியள்" குரல் வந்த திசையை நோக்கிச் சீறினாள் அப்பெண். வாய் திறந்தவர் தலையைச் சொறிந்து கொண்டார்.

தொலைபேசி உரையாடல் தொடர்ந்தது. பணநோட்டுக்கள் இயக்குநரின் லாச்சியை நிறைத்துக் கொண்டிருந்தன. உரையாடல்களில் காணித்தகராறுகள், அயல்வீட்டுச் சண்டைகள், எதிர்வீட்டுப் பையனுக்கும், அயல் வீட்டுப் பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட காதல்... தாராளமாக உலாவந்தன. எனக்குள் ஒரு சிந்தனை. இவையெல்லாம் தொலைபேசியில் கூறத்தான் வேண்டுமா? இககேள்வியை எனக்குள்ளே கேட்க முடிந்ததே தவிர வெளியிட முடியவில்லை.

வெளிநாடுகளில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பதென்ன? தூய்மையான அன்பையல்லவா? இதை ஏன் எம்மவர்கள் சிலர் மறக்க முயல்கிறார்கள்? இவர்களது எதிர்பார்ப்பெல்லாம் பணம்தானா? பணம் மரத்தில் காய்க்கிறது போலும்!. நேரம் பதினொருமணி தொடர்ந்தும் நிற்க ஏனோ மனம் ஏவவில்லை.

இயக்குநரிடம் "கோல் ஒன்று எடுக்கவேணும். பேந்துவாறன்" என்று கூறிவிட்டு பதிலுக்கு காத்திராமல் கடையை விட்டுத் தெருவில் இறங்குகிறேன். வரும்போது இருந்த உற்சாகம் இப்போது இல்லை. மனதில் ஏதோ இனம் புரியாத சுமை. சுமையை யாரிடம் பகிர்வது? மௌனமாக சைக்கிளை மிதிக்கிறேன். சந்தி கலகலப்பாக இருந்தது. மனமோ சுமைக்குள் அழுந்திக்கிடந்தது.

*

## யுத்தமில்லை! யுத்தமில்லை!!

யுத்தமில்லை யுத்தமில்லை யுத்தமென்ப தில்லையே
இததானி உள்ளவரை இனியும்
யுத்தமில்லையே
ரத்தவாறு பாய்வதென்ப' திவ்வுலகி லில்லையே
கத்தியில்லை சத்தமில்லை கவலையுமினி யில்லையே
புத்தன்காந்தி சொன்னவற்றை புரிவமினி நாமுமே
நித்தமெங்கள் நெஞ்சமதில் நிம்மதியை நாட்டுவோம்
பக்தியுடன் எம்பிரானின் பாதமதை பணிந்துமே
புத்தியுள்ள புருதர்களாய் வாழ்வமினி நாட்டினிலே

வி. பராபரன்

## பாலைவனமாக்காதீர்!

பள்ளிதனைக் கண்டறியேன்; பாடங்கள் படித்தறியேன்!
எள்ளி நகை யாடாதீர் என் மனத்திலுள்ளவற்றை
உள்ளபடி கூறுகின்றேன்; ஒளிவுமறைவு சற்றுமில்லை
கள்ளமிலா நெஞ்சத்துக் கன்னியரே கேட்டிடுவீர்!

பாரதியை நீவிரெல்லாம் பாட்டினிலே கண்டிருப்பீர்
ஊரறிந்த கவிஞன்வன் உயர்வினையும் அறிந்திருப்பீர்
வீரமிக்க விளைநிலத்தின் விடியாத அடிமை நிலைப்
பாரத்தை நீக்கிவிடப் பகலிரவாய்ப் பாடுபட்டான்

சீலத்தை இன்னதெனச் சித்திரம்போற் பாட்டினிலே
காலத்தை அறிந்தன்றோ கவிஞனவன் சொல்லிவைத்தான்
ஞாலத்தை நல்லபடி நடத்திடவே அவன் நினைத்தான்
கோலத்தை மாற்றி இந்தக் கோதையர்தான் செய்வதென்ன?

வீதியில் விண்கதையும் விசித்திரமாய் கேட்குதையா!
பாதியிலே எமைக்கண்டால் பட்டென்று விட்டிடுவார்
நாதியற்ற நங்கையரே நடிப்பைவிட்டுப் படிப்பினிலே
சேதிசொல்ல வைக்கும்படி செய்து காட்ட மாட்டீரோ

காளையரைக் கண்டவுடன் கண்ணடித்து வலைவீசி
வேளை வந்தவுடன் வேண்டாமென்று தள்ளுகின்றீர்!
நாளையுமக்கு நல்லபெயர் நல்வாழ்வும் கிடைத்திடுமோ?
மூளையுடன் செயற்பட்டு முழுமதியாய்த் துலங்கிடுவீர்!

பேச்செல்லாம் இனிப்பாகப் பேசிநிதம் உரையாடி
மூச்செல்லாம் உமக்கென்றே முழுப்பொய்தான் சொல்லிவிட்டு
காசுபணம் இல்லை என்றால் கட்டழகும் வெறுத்திடுமோ
சூசுதடி என்மனம் உன் குளறுபடி வேலையினால்!

வந்தித்தே கரங்கூப்பி வனிதையரே யுமை வணங்கின்றேன்
சிந்தித்தே பாரும் உங்கள் சிறப்பான குணங்களைத்தான்
பிந்தித்தான் புத்தி வரும் பிறகு வந்து ஆவதென்ன?
பந்தித்த பாவவினையாலே பாவையராய்ப் பிறந்துவிட்டீர்!

நீதிநெறி கருணை நேர்மை நியாயமெல்லாம் எங்கேயடி?
சாதிமத பேதமெல்லாம் சரித்திரமே வெறுக்குதடி
தீது உந்தன் வேலையிது காளையரை வாழவிடு!
மாது என்ற மங்கையரை மனத்தினாலும் தீண்டலாமோ?

அறியாமலா சொல்லி வைத்தான் அன்று அந்தக் கவிஞனுமே
சேலை கட்டிய மாதரை செகத்தினிலே நம்பவேண்டாமென்று
வாலைக் குமரிப் பருவத்திலே வாய்காட்டல் கூடாது
பாலை வனமாக்காதீர் படிக்க வரும் இளைஞர் வாழ்வை!

பெண் என்றால் பேயும் இரங்குமென்று சொல்வாரே
கண்ணொன்றைக் காட்டி மட்டும் காளையரைக் குழப்பாதீர்
பண்ணொன்று பாடி அந்தப் பரமசிவனைக் கும்பிட்டு வாழ்வீர்
மண்ணான வேலையிதை யிளமங்கையரே செய்யாதீர்!

கல்வியென்ற கருந்தனத்தைக் கற்பதிலே கவனமெடும்
சொல்லி வைக்க விரும்புகின்றேன் காதல் லீலை வேண்டாமே
பல்லிளிக்கும் பாவையரே இனிப்படிக்க விடும் காளையரை
மெல்லியலார் நீங்களிதை நிச்சயமாய்ச் செய்ய வேண்டும்.

காட்டிடுவீர் சாதனையைக் கல்விதனைக் கற்பதிலே
நாட்டிடுவீர் புகழ்தன்னைப் நானிலமே பேசும்படி
கேட்டிடுவீர் என்புத்திமதி கெடுவழியிற் செல்லாதீர்
மூட்டிடுவீர் கெடுமதிக்குத் தீ வைத்தே கொளுத்திடுவீர்!

பாட்டினிலே சொல்லி வைத்த பாரதியின் புதுமைப் பெண்ணாய்
நாட்டினிலே யுலவிடுவீர் நங்கையரே நல்லவராய்
கூட்டினிலே கிளிபோன்று வாழும் வகையினி வேண்டாம்
வீட்டினிலே இருந்து 'நல்லபெண்' ணென்று பேரெடுப்பீர்!

நிச்சயமாய் சொல்லிவிட்டேன் நீங்களிது செய்ய வேண்டும்
கச்சிதமாய் சேலை கட்டிக் காசினியில் உலாவருவீர்
எச்சமான வேலைகளை இனியென்றும் செய்யாதீர்
உச்சமான புகழ் உமக்கு உன்னதமாய்க் கிடைத்திடுமே!

- ஸ்ரீ

# சண்டித்தனம்

“நீ ஆர் சீர்திருத்தவாதியே?”

சிவநாதனின் மனம் ஒரு போதும் இவ்வளவு தூரம் அவமானப்பட்டது கிடையாது. அந்தக் கூட்டத்தவர் கேட்ட இந்தவொரு கேள்வியே அவரை அவமானப்படுத்தப் போதுமானதாயிருந்தது. அவமானமென்றால் சாதாரண அவமானமல்ல. எத்தனை பேர் மத்தியில் “என்னைப் பற்றித் தெரியாது. கை காலெல்லாம் முறிச்சுக் கிடத்திப் போடுவன்” என்றான் அவன். சிவநாதனின் வயதிற்கு கூட மரியாதை தரவில்லை. சிவநாதனால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

“தம்பி வார்த்தையை அளந்து கதையும். இல்லாட்டில் வீண் பிரச்சினை வரும்” சிவநாதனின் இந்த வார்த்தைகள் அந்த இளைஞனின் கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

அந்த இளைஞனின் தந்தை அவனிடம் கேட்டார்.

“சங்கர்! என்ன நடந்தது?”

“நான் அப்பா ரியூசன் முடிஞ்சு என்ர பிறண்டோட வந்து கொண்டிருந்தனான். எங்களுக்கு முன்னால கொஞ்ச கேர்ள்ஸ் போனவை. இவர் அந்த நேரம் எங்களுக்குப் பின்னால வந்து ‘என்னடா பெம்பிளைப் பிள்ளையளோட சேட்டை விடுறியளோ?’ எண்டு சத்தம் போட்டார். என்னோட வந்தவர்கள் எல்லாம் பயத்தில ஓடிட்டாங்கள். நான் பயப்பிடேல்ல. எதுக்கு நான் பயப்பிட வேணும்?” மகனின் விளக்கம் தந்தையைக் கோபத்தின் உச்சிக்கே கொண்டு சென்றது.

தெய்வேந்திரம் “இதெல்லாம் உண்மையா?” என்று கேட்பதைப் போல சிவநாதனைப் பார்த்தார்.

“ஏன் தம்பி உண்மையை மறைக்கிறீர்? நீர் ஒரு பொம்பிளைப் பிள்ளையை உம்மட சைக்கிளால முன் மறிச்சு சேட்டை விடேல்லையோ?” சிவநாதன் குமுறினார்!

“என்ர மகன் சேட்டை விட்டா உமக்கென்ன? உங்கை எத்தினை இடத்தில சேட்டை விடுறாங்கள். அதெல்லாம் உன்ர கண்ணுக்குத் தெரியேல்லையோ? ஆம்பிளைப் பிள்ளையள் எண்டால் பொம்பிளைப் பிள்ளையளுக்கு சேட்டைவிடுகிறது வழமைதானே. இதையெல்லாம் கேட்க நீ ஆர் சீர்திருத்தவாதியோ?” மகனை விட ஒருபடி மேலே போய்த் தந்தை தடியடி நியாயத்தை ஆரம்பித்தார்.

“சரி ஏதோ நடந்தது நடந்து போச்சு. இதில நிண்டு சத்தம் போட்டுச் சண்டையை வளர்க்காமல் தயவுசெய்து போங்கோ” தெய்வேந்திரம் தந்தையையும் மகனையும் பணிந்து போகும் குரலில் வேண்டினார்.

“சரி. நாங்கள் போறம். ஆனால் கடைசியாய் ஒரு வார்த்தை சொல்லிப் போட்டுப் போறம். உங்கட சீர்திருத்தவாதியைக் கவனமா இருக்கச் சொல்லுங்கோ” என்றபடியே தந்தையும் மகனும் ஒரு சாதனை நிகழ்த்தி விட்டவர்களைப் போலப் போய்க் கொண்டிருந்தனர். அதைத் தொடர்ந்து “உந்த மனுசனுக்கேன் தேவையில்லாத வேலை” என்ற கேள்வியோடு சிலரும், “நல்லதுக்குக் காலமில்லை” என்ற கவலையுடன் ஏக்கப் பெருமூச்சுவிட்டபடி சிலரும் அந்தக் கூட்டத்தில் இருந்து கலைந்து போனார்கள். எஞ்சியிருந்தவர்கள் எதுவும் பேசாமல் மௌனிகளாக நகர்ந்து கொண்டிருந்தனர்.

“சிவநாதன் என்ன வேலை மச்சான் இது?” தெய்வேந்திரத்தின் கேள்விக்குத் தலை குனிந்து நின்றிருந்த சிவநாதன் பிசுபிசுத்த குரலில் கேட்டார். “நான் செய்தது பிழையா தெய்வம்?”

“சேச்சே. நான் பிழையெண்டு சொல்ல வரயில்லை. மரியாதை தெரியாதவங்களோட எதுக்கு வீண் சோலிக்குப் போனனீ?” இவ்விதம் கேட்ட தெய்வேந்திரனை நிமிர்ந்து பார்த்தார் சிவநாதன். பின்னர் அமைதியாகச் சொன்னார்.

“நான் சோலிக்குப் போனதுக்குக் காரணமிருக்கு. தேவையில்லாமல் நான் ஏன் சோலிக்குப் போறன்?”


“என்ன காரணம் மச்சான்?” தெய்வேந்திரம் கேட்டார்.

சிவநாதன் நிதானமான குரலில் சொன்னார்.

“மாதவி எண்டொரு பிள்ளை. என்ர ரியூசனில ஓ. எல். படிக்குது. அதின்ர தகப்பன் நேற்று வீட்டை வந்து ‘மாஸ்ரர் என்ர பிள்ளை ரியூசன் முடிஞ்சு வீட்டுக்கு வரேக்க சில காவாலிப் பொடியள் பின்னால துரத்தி வந்து சேட்டை விடுறாங்களாம். ஒருக்காக் கவனிச்சுக் கொள்ளுங்கோ’ எண்டு சொன்னவர். அது தான் இப்பிடிச் செய்ய வேண்டி வந்தது.”

இதைக் கேட்ட தெய்வேந்திரம் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பின்னர் “சரி, அது இருக்கட்டும் முதல்ல உன்ர கையில் இருக்கிற காயத்துக்கு மருந்து கட்டுவம்.” என்றபடி அவரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

* * *



“என்ன வீண் பிரச்சினை...? என்ன வீண் பிரச்சினை எண்டு கேக்கிறன். எங்க எனக்குமேல தொடு பார்ப்பம்” அவன் நெஞ்சு நிமிர்த்தி வீரம் காட்டியபோது அங்கே கூடியிருந்தவர்கள் சந்தோஷமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் எதிர்பார்ப்பெல்லாம் ‘இந்த வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடியாதா?’ என்பதுதான். கடைசியில் அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியது. நெஞ்சு நிமிர்த்தி வீரம் காட்டிய அந்த இளைஞன் சிவநாதனின் நெஞ்சில் கைவைத்து பலமாகத் தள்ளினான். அவர் இதை எதிர்பார்த்திருக்கவில்லை. அதனால் அவன் தள்ளிய வேகத்தில் நடுவீதியில் போய் விழுந்தார். அவர் எழுந்திருப்பதற்கிடையில் மீண்டும் பலமாகத் தள்ளினான். அதனால் அவரால் எழுந்திருக்க முடியவில்லை.

விவகாரம் எல்லை மீறிப்போய்க் கொண்டிருந்தது. அங்கே கூடியிருந்தவர்கள் அமைதி காத்தனர். இம்முறை சிவநாதன் ஒருவாறு எழுந்து விட்டார். அவருக்குக் கோபத்தில் உடல் நடுங்கியது. அந்த இளைஞன் அவருடைய சேட் கொலரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

“நான் எத்தினை பொம்பிளைப் பிள்ளையளுக்குப் பின்னாலயும் போவன். அதைக் கேட்க நீர் யார் எண்டு சொல்லும்?” இவ்விதம் கேட்டவன் அவர் கன்னத்தில் பலமாகத் தாக்கினான். அந்தநேரம் எங்கேயோ போய்க் கொண்டிருந்த தெய்வேந்திரம் நடுவீதியில் ஒரு கூட்டமிருப்பதைக் கண்டு அவ்விடம் நோக்கி விரைந்தார்.

கூட்டத்தில் இருந்து இந்த இளைஞனுக்குச் சார்பாகச் சில குரல்கள் “உவருக்கேன் தேவையில்லாத வேலை...?” என்று எழுந்தது.

தெய்வேந்திரம் அவசரமாகக் கூட்டத்தை விலக்கி உள்ளே நுழைந்தார். அவருக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. மறுகணம் விரைந்து செயற்பட்டார். அந்த இளைஞனுக்கும் சிவநாதனுக்கும் இடையில் புகுந்தார். தெய்வேந்திரம் இவ்வாறு செய்ததையால் அந்த இளைஞனால் சிவநாதனைத் தாக்க முடியாமற் போயிற்று. இதற்கிடையில் அங்கே அந்த இளைஞனின் தகப்பன் வந்து சேர்ந்தார். அவர் மகனை மிஞ்சிய சண்டித்தனக்காரர் போலத் தோன்றினார்.

“சிவா! என்ன நடந்தது?” தெய்வேந்திரம் சிவநாதனைப் பதற்றம் நிறைந்த குரலில் கேட்டார். அந்தக் கேள்விக்கு சிவநாதன் பதில் சொல்வதற்கிடையில் அதே கேள்வியை

“சங்கர் நேற்றையைப் போல இண்டைக்குத் தேவையில்லாத பிரச்சினைக்குப் போகாமல் பின்னேரம் ஆறு மணிக்கு முதல் வீட்டுக்கு வரப்பார்” அம்மா சமையற்கட்டிலிருந்து குரல் கொடுத்தாள்.

“இண்டைக்குத் தேவையில்லாத பிரச்சினையொண்டும் வராது. அந்த வாத்தி நேற்றையோட நல்லாய்ப் பயந்திருப்பான். சூடு கண்ட பூனை ஏன் நெருப்புக்குக்கிட்ட வரப்போகுது. அப்படியில்லையெண்டு வந்தாலும் இண்டைக்கு என்ன செய்ய வேணுமெண்டு எனக்குத் தெரியும்” என்று வீராப்பாகப் பேசியவாறு புறப்பட்டான் சங்கர்.

வழமையான தங்கள் கடமையைச் செய்வதற்காக சங்கரின் தோழர்கள் நாற்சந்தியில் காத்திருந்தனர்.

“மச்சான் இன்னும் ரியூசன் விடேல்லையோ?” என்ற வினாவோடு அவர்களின் கூட்டணியில் சேர்ந்து கொண்டான் சங்கர். அரை மணித்தியாலங்கள் கடந்த பிறகு அந்தத் தனியார் கல்வி நிலையம் முடிந்து மாணவ மாணவியர் வந்து கொண்டிருந்தனர். சங்கர் மாதவியைத் தேடினான். அவள் மற்ற மாணவிகளுடன் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

சங்கர் விரைந்து செயற்பட்டான்.

“மச்சான்! நீங்கள் ஒருத்தரும் என்னோட வரவேண்டாம். இங்கேயே நில்லுங்கோ. எந்தப் பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக் கொள்ளுறன்” என்று கூறியபடியே மாதவியைப் பின் தொடரப் புறப்பட்டான். நண்பர்கள் சிலர் “உந்தச் சந்தி மட்டும் வாறன் மச்சான்” என்று கூறிக் கொண்டு அவனோடு புறப்பட்டனர்.

மாதவி தன்னை அவர்கள் பின் தொடர்வதை அறிந்து கொண்டதால் வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள். சங்கரும் சைக்கிளை மிக வேகமாக உழக்கினான்.

மாதவியைப் பின்தொடரும் அவசரத்தில் சந்திக்கருகே உள்ள காவலரணில் இறங்கிச் செல்ல வேண்டியதை மறந்தான். மிகவேகமாக காவலரணைக் கடக்க முயன்றவனைச் சிப்பாய் ஒருவன் கைதட்டி அழைத்தான்.

“அடோ, அங்கிட்டிருந்து சைக்கிளை தூக்கிக் கொண்டு வாறது” அவனின் கோபமான குரலைக் கேட்டுத்தான் சங்கர் தன் நிலையுணர்ந்தான். உடனே சைக்கிளில் இருந்து கீழே குதித்து சைக்கிளை இரு கைகளாலும் தூக்கியபடியே அந்தச் சிப்பாய் நின்றிருந்த இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். அப்போதுதான் அவனுக்கு தான் அடையாள அட்டையையும் எடுத்து வர மறந்திருந்தது ஞாபகம் வந்தது. அவன் நெஞ்சில் பய உணர்வும் சுரந்து பரவியது. ‘கடவுளே என்னைக் காப்பாற்று’ மனதிற்குள் கடவுளை வேண்டிக் கொண்டான்.

“செக் பொயின்ரில இறங்கிவரத் தெரியாது?” என மிகவும் கோபமான குரலில் கேட்டான் அந்தச் சிப்பாய்.

“வெரி சொரி சேர்” சங்கரின் குரல் உயிரில்லாமல் ஒலித்தது.

“ஐடென்ரி எங்க?” அதட்டலுடன் கேட்டான் அவன்.

“கொண்டு வரேல்ல சேர்” அவன் சொல்லி வாய் மூடுவதற்கிடையில் ‘பளார்’ என அவன் கன்னத்தில் அறை விழுந்தது.

## சித்திரா

“ஐசியும் இல்லாம செக் பொயின்றிலும் சயிக்கிள் ஓடிச் சேட்டை விடுறது” அவன் வார்த்தைகளில் கோபக்கனல் தெறித்தது. சங்கர் மன்றாடினான்.

“மறந்து போனன் சேர்.” சங்கரின் வார்த்தைகள் மேலும் சிப்பாய்க்குக்

(XV ஆம் பக்கம் பார்க்க)

குறுங்காவியம்



## பசிப்பிணி மருத்துவன்

- புலவர் ம.பார்வதிநாதசிவம் -

அங்கம்:- மூன்று

என்றந்தப் புலவனுரை செய்த போதில்
இனியகுணப்பண்ணனுமே அவனை நோக்கி
“நன்றுங்கள் போற்றுதல்கள் சோழன் கிள்ளி
நயமாக வள்ளல் எனப்புகழ்ந்தான் என்னை
கொன்றொழிக்கும் பசிபோக்கும் காரணத்தால்
பசிப்பிணிக்கு மருத்துவன் நான் என்றும் சொன்னான்
என்றும் நான் மருத்துவன்தான் முல்லையூரில்
இருப்போரின் கல்வி இன்மை என்னும் நோயும்

நீக்கவெனத்துணிந்திட்டேன் இதற்கு நும்போல்
நிறைகுடங்கள் உதவிடுதல் வேண்டும்” என்றான்!
வாக்கதனைக் கேட்டதுமே புலவர் சொன்னார்
“வள்ளலே! பண்ணனே! உன்னுள்ளத்தின்
நோக்கமதை நானறிந்தேன் ஓரிடத்தில்
நிலைத்திருந்து கற்பிக்க நேரங்காணேன்!
வாழ்க்கையெல்லாம் பெருங்குடும்பம் தன்னைத்தாங்கும்
பொறுப்புடையேன் இங்கிருக்க வழிதான் உண்டோ?

முரசுறங்கும் கட்டிலிலே உறங்கிவிட்ட
முத்துறங்கும் கவிவல்லோன் மோசிகீரன்
பெருமையை நீ கேட்டிருப்பாய்! திண்டோள் வாய்ந்த
பெருமன்னன் இரும்பொறைதான் அவனுக்கன்று
அருமையுறச் சாமரை வீசினனே அன்றோ?
அப்பெரிய புகழ் மோசிகீரனாரின்
பெருங்குடியில் ஒரு பெண்ணாள் தமிழ்நாடெங்கும்
கல்விக்குப் பெருந்தொண்டு செய்கின்றாளால்!

தாமரைபோல் எழில்முகத்தாள் விழிகள் என்றே
தண் கயத்துக்குவளைகளைச் சேர்த்துக் கொண்டாள்!
பாமலர இடமாகும் மேனிபெற்றாள்!
பாலோடு தேன் கலந்த வார்த்தை பெற்றாள்!
பூமலரும் நகை பெற்றாள் கூந்தலாகப்
புவித்தலத்தே கார்முகிலைப் பெற்றுக் கொண்டாள்!
பூமிதரும் எழில் பெற்றாள் எனினும் நாடிப்
புவித்தலத்தே துறவுநெறி வாழ்வு பெற்றாள்!

இளமைதரும் பொலிவெல்லாம் சிறக்கப்பெற்றாள்!
இடைபெற்றாள்! கொடியானால்! அங்கம் எல்லாம்
வளமிகுந்த பொழிலானாள்! காண்போர் நெஞ்சை
வாட்டுகின்ற தோற்றத்தாள்! ஆனபோதும்
இளமையிலே துறவு பெற்றாள்! ஏனோ என்றால்
இவ்வுலகிற் கல்வி இலார் வாடுகின்ற
நிலைநீக்கிக் கொள்வதற்கே! என்றும் சொன்னாள்
அருள்வழியே எனும் பெயரைக் கொண்டாள் பாவை!

இவ்வுலகை வெறுத்ததனால் துறவி ஆனோர்
இருக்கின்றார் மிகப் பலபேர் இவளோ மற்றும்
இவ்வுலகை விரும்பியதால் துறவி ஆனாள்!
எண்ணுங்கால் இது மிகவும் வியப்போ அன்றோ?
இவ்வுலகோர் கல்விபெற வேண்டும் என்றும்
இவ்வுலகோர் தமிழ் கற்க வேண்டும் என்றும்
இவ்வுலகில் நல்லொழுக்கம் வேண்டும் என்றும்
இனிய பணிபுரிவதற்குத் துறவி ஆனாள்!

பண்ணனிது கேட்டதுமே மகிழ்ச்சி எய்திப்
பாவையினை உடனழைத்து வருதல் வேண்டும்
எண்ணரிய கல்வியெனும் செல்வம் தன்னை
இச்செல்வி முல்லையூரார்க்கு நல்கித்
திண்ணியதன் துறவினையும் காத்திடட்டும்
திகழ்சமய வளர்ச்சியையும் பார்த்திடட்டும்
பெண்ணவளின் வருகையினால் முல்லையூரார்
பெருங்கல்வி உடையவராய் விளங்கக் காண்போம்

பொறி ஐந்தை இளவயதில் வென்றாள் என்றால்
போற்றுதமிழ்ப்பணியினிலே நின்றாள் என்றால்
அறிவென்ற செல்வத்தை வழங்கும் ஆற்றல்
அவளுக்கே மிகப் பொருத்தம் ஆகும் அன்றோ?
செறிவுடைய நல்லறிஞ சென்றிப்போதே
சேயிழையை அழைத்து வந்தே எனது மக்கள்
அறிவுபெற வழிசெய்க துறவு கொண்ட
அருள் வழியின் தமிழ்த் தொண்டு நமக்குத் தேவை

பண்ணன் இவ்வாறுரைத்திடலும் புலவர் தாமும்
பாரிடையே மிகமகிழ்ச்சி கொண்டாராகி
எண்ணுங்கால் நின்போன்ற வள்ளல் யாரும்
இருப்பதாய் என்தனுக்கே தெரியவில்லை
உண்ணுதற்குச் சோறளிப்பாய் சோம்பிடாதே
உழைப்பதற்கு நிலம் கொடுப்பாய் அதும் அல்லாமல்
கண்ணனைய கல்வியினைக் கற்பதற்கும்
கருத்துடனே வசதியெல்லாம் செய்து வைப்பாய்!

எடுப்பான தோற்றத்தோய்! ஈகைதன்னால்
இன்சொல்லால் யாவரையும் கவர்ந்த நல்ல
குடிப்பிறந்த சிறப்புடையாய்! பண்ணனென்னும்
குணக்குன்றே என்றும் தான் இந்தவையம்
கொடுக்கின்ற தர்மமே பெரிது என்றே
கூறிடுமே! நீ அந்த ஈகையோடு
அடுப்போர்க்கே உழைப்பாற்றல் கல்வி ஆற்றல்
அத்தனையும் வழங்கியே உயரச் செய்வாய்! (தொடரும்)

# வெள்ளை ரோஜா முள்

**மு.சிவநேசன்**



19

மேவினின் கொலையைத் துப்புத் துலக்கிவிட்டால் எல்லாம் அக்கதையுள் அடங்கும் என நினைத்தாள் எமிலி. மைக் எந்த உருவில் எப்படி வந்து புயலாகப் பொழிவானோ என்ற அச்சமும் மனதில் எழத்தான் செய்தது.

விடுதலை பெற்றதும் மேவின் கொலையுண்டது மோலரின் மனதையும் மிகக் குடைந்தது. பொலீஸார் நிறையத் தடயங்களைச் சேகரித்து இருந்தனர்.

கடற்கரை மணற்பரப்பில் பதிந்த சப்பாத்து அடையாளங்கள், வாகன ரயர் தேய்வு விகிதங்கள் எல்லாம் ஆழமாக ஆராயப்பட்டன.

வங்கிக் கொள்ளை தொடர்பான சந்தேக நபர்களின் பட்டியல் கணனிகளில் புகுத்தப்பட்டே இருந்தது. ஆரம்பத்தில் சுமார் இரண்டாயிரம் பேரின் விவரங்கள் அங்கே திரட்டப்பட்டன.

அதில் மிகவும் பின்தங்கிய இடத்தில் தான் மேவின் நின்றிருந்தான். அவனது கொலை இப்பொழுது அவனது நிலைமையைக் கணனியில் சற்று முன்னோக்கி நகர்த்தியிருக்கிறது.

மேவினைக் கொலை செய்தவன் நடக்கும் பாணி - அடி எடுத்து வைக்கும் முறை - எல்லாம் இப்போது ஆழமாக ஆராயப்பட்டன.

கடற்கரையில் காலாற நடக்க வருபவர்களின் தடங்கள் மணலில் பதியும் விதம் ஆளுக்கு ஆள் வேறுபடுதலைப் பொலீஸார் உன்னிப்பாக அவதானித்துப் பதிவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

அதே ஆள்கள் கடினமான தரையில் நடக்கும் போது எழும் ஒலியும் கூட பதியப்பட்டன. ஆள்களைத் தொடர்ந்து சுவடு பிடிக்கும் பணி கடினமாக இருந்தது.

*   *   *

மேனின் எலக்ரோனிக் திருத்த வேலைகள் மும்முரமாகவே நடைபெற்றன. அவனது பாணியே தனி.

அங்கு திருத்தப்படும் சாதனங்களில் உள்ளே இன, ரக அடையாளங்கள், இலக்கங்கள் எதுவுமே இருக்காது. உதிரிப்பாகங்களில் எந்த எழுத்தும் பொறிக்கப்பட்டு இருக்காது. அவற்றை வேறு ஆள்கள் திருத்தத்துக்காகப் பிரித்தால் எதையுமே கண்டுபிடிக்க இயலாது.

அத்துடன் திருத்தப்பட்டு கையளிக்கப்படும் சாதனங்களில் எவரும் கைவைக்க முடியாதவாறு மேனின் கம்பனி சீல் வைத்துவிடுவது வழக்கம். மீண்டும் உரிய காலத்துள் ஏற்படும் பழுதுகள் இலவசமாகச் சீர் செய்து கொடுக்கப்படும்.

நீண்ட காலமாகப் பின்பற்றப்படும் இந்த நடைமுறை மேனுக்குச் சாதகமாகவே இருந்தது. ஆணிகளைக் கழற்றிப் பெட்டிகளைப் பிரிக்கும் போது ஓர் எலக்ரோனிக் உத்தரவும் சில சாதனங்களுக்கு அவசியமாகிறது.

அது சரிவர வழங்கப்படாமல் தொலைக்காட்சிப் பெட்டியோ, வானொலிப் பெட்டியோ, கணனியோ திருத்தத்துக்காகப் பிரிக்கப்பட்டால் அது முற்றிலும் செயல் இழந்தும் விடுகிறது.

எனவேதான் மேனின் கையிலிருந்து நழுவும் சாதனங்கள் மீண்டும் தேவை ஏற்படின் அவனிடமே வருகின்றன. அத்துடன் ஆண்டுதோறும் அவற்றுக்கான சீர்பார்ப்புக்களையும் (Service) அவனே பொறுப்பேற்கிறான்.

மேன் தானே தனிக்கவனம் எடுத்துச் சீர்செய்யும் சாதனங்கள் அனைத்தும் நகரின் பெரியபுள்ளிகளுடையவையாகவே இருக்கும். அதனால் எலக்ரோனிக் யுகத்தில் அவனது செல்வாக்கோ மிகமிக உச்சம்.

கடற்கரையில் காலாற நடந்த பொலீஸ் அதிகாரி மோலரும் மேனும் இந்த எலக்ரோனிக் சாதனங்கள் பற்றியே பேசிக்கொண்டனர். டானியலைச் சந்தித்தமை பற்றியும்கூட மோலர் விசாரித்தான்.

மோலரின் படுக்கையறைத் தொலைக்காட்சியான 14 அங்குல நஷனலையும், கணனியையும் அடுத்த தவணைக்கான சீர்பார்த்தலுக்கு மறுநாள் அனுப்பிவைப்பதாக அவன் கூறிக்கொண்டான்.

வங்கியில் கொள்ளை நடந்த அன்றுதான் கடைசியாக அவை சீர்பார்க்கப்படவென மேனால் கழற்றப்பட்டு இருந்தன. மேன் வங்கி லொக்கர்களைத் திறக்க அழைக்கப்பட்டதன் விளைவாக சீர்பார்த்தல் தாமதப்பட்டுப் போயிற்று.

இம்முறை தடங்கல் ஏதும் இன்றி விரைவாகவே சீர்செய்து தரும்படி மோலர் மேனைக் கேட்டுக்கொண்டான்.

இருவரும் மணலில் நடந்து கொண்டிருக்கையில் மோலரின் பாதுகாப்புக்காக பின்னால்நடந்து கொண்டிருந்த பொலீஸ் அதிகாரியொருவன் தான் எடி.

அவன் மேனின் காலடித் தடங்களைச் சுவடு பிடித்தபடி நடந்து கொண்டிருந்தான். இருவரும் மணற்பரப்பை தாண்டி வீதிக்கு ஏறி வாகனத்தளம் நோக்கி நடக்கவும் கடினமான தரையில் மேனின் திமிர் நடை எடியின் சந்தேகத்தை நிவர்த்திப்பதாக இருந்தது.

இருவரையும் வழியனுப்பியபின் எடி மேலும் இரு துப்பறியும் அதிகாரிகளை வரவழைத்து அவர்கள் நடந்து வந்த தடங்களைப் பரிசோதிப்பதில் தீவிரமாக இறங்கினான்.

இரவிரவாகப் பொலீஸ் திணைக்கள கணனிகளின் காலடிச் சுவட்டுக் கோப்புக்கள் செயற்பட்டன. பல்வேறு சம்பவங்களோடு அவை ஒப்புநோக்கப்பட்டன.

நேரம் நள்ளிரவை எட்டிக் கொண்டிருந்தது. மோலர் வீட்டில் தொலைக்காட்சியில் லயித்துப்போய் இருந்தான். படுக்கைக்குத் தயாராகும் போது தனது தொலைக்காட்சிப் பெட்டியையும் கணனித்திரையையும் மேனின் கம்பனிக்கு மறுநாள் காலை எடுத்துப்போக வேண்டி - வாகனத்தில் வைத்துவிடும்படி உத்தரவிட்டான்.

பணியாளர்கள் இருவர் ஹோலில் வளைந்து ஏறும் மாடிப்படிவழியே அவற்றைக் கொண்டுவர மேலே ஏறிச்சென்றனர். கீழேயிருந்து இந்தச் சாமத்திலும் உற்சாகமாகத் துள்ளி ஏறும் இருவரையும் ரசித்தபடி மோலர் விழிகளைச் சொருகிக் கொண்டான்.

அவ்வேளை தூக்கத்தைக் கலைக்குமாப்போல் கணகணத்த தொலைபேசியை எடுத்துக்கொண்டான் மோலர்.

இரகசியப் பொலீஸார் மோலரிடம் தமது சந்தேகத்தைத் தெரிவித்தனர். மேவினைக் கொலை செய்தது மேனாக இருக்கக்கூடும். அவனது காலடித் தடயங்கள் மேவின் கிடந்த இடத்துத் தடயங்களை ஒத்திருக்கின்றன என்பதே செய்தி.

மோலரால் ஏற்க இயலவில்லை. அன்றைய மேனின் நடவடிக்கைகள் படுபிஸியானவை. மோலரை மேன் சந்தித்து விட்டு டானியலிடம் போன வேளை கொலை நடந்திருக்கிறது. இடையில் போதிய நேர அவகாசம் மேனுக்கு இருந்திராது.

மௌனமாக அவர்கள் கூறும் விளக்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்தான் மோலர்.

தொலைக்காட்சிப் பெட்டியுடன் மாடிப் படிகளில் இறங்கி வந்தவன் இடறி விழுந்தான்.

மோலரின் 14 அங்குலப் படுக்கையறைத் தொலைக்காட்சிப்பெட்டி உருண்டடித்து மோதி வெடித்தது. அதன் ரியூப் கண்ணாடிகள் சிதறிப் பறந்தன.

ரியூப்பின் சுமை கழிய வெற்றுப் பெட்டியும் அதனுடனான எலக்ரோனிக் அட்டைகளுமாக உருண்டு வந்து ஹோலில் தடுக்கி நின்றது.

அதிர்ச்சியுடன் ரிசீவரை வைத்துவிட்டு எழுந்து வந்த மோலருக்கோ இரட்டை அதிர்ச்சி.

பெட்டிக்குள்ளிருந்து சிதறியவை கண்ணாடித் துண்டுகள் மட்டுமல்ல. அசல் வைரங்களும் தான் ஒரு பிளாஸ்ரிக் டப்பா திறந்து கிடந்தது.

நிச்சயமாக இது மேனின் வேலைதான். என்னைக் கள்வன், கொள்ளையனாக்கவோ, தான் பிடிபடாமல் இருக்கவோ கொள்ளைப் பொருள்களை எனது தொலைக்காட்சிப்பெட்டிக்குள்ளேயே வைத்திருக்கிறானே பாவி.

ஹோல் முழுவதுமே தரையெங்கும் பரவிப் பிரகாசித்துக்கொண்டிருந்தனவைரங்கள்.மோலர் உறைந்து போனான்.

இரகசியப் பொலீஸார் மோலரின் வீட்டை மொய்த்தனர். தொலைக்காட்சிப் பெட்டியையும் சிதறல்களையும் பரிசீலித்தனர்.

பெட்டியில் மேன் சீல் வைத்திருப்பது அவனது தந்திரத்தைப் புட்டு வைத்தது. விடயத்தைப் பொலீஸார் பரமரகசியமாக மூடி வைத்தனர்.

மேனின் கம்பனி சீல் வைக்கப்பட்டது. அவனும் கைது செய்யப்பட்டான். வங்கிக் கொள்ளை நடைபெற்ற அடுத்துவரும் நாள்களில் அவனால் திருத்தம் செய்யப்பட்டுச் சீல் வைக்கப்பட்ட எலக்ரோனிக் சாதனங்களின் பட்டியலை பொலீஸார் தயாரிக்கத் தொடங்கினர்.

மேனின் கம்பனிக் கணனிகளில் இருந்து அத்தகைய பொருள் உரிமையாளர்களின் பட்டியல்கள் பொலீஸ் கணனிகளுக்கு மாற்றம் பெற்றன.

விடிந்ததும் அத்தகைய பல சாதனங்கள் பொலீஸ் தலைமையகத்துக்கு எடுத்து வரப்பட்டன. பெரும்பாலும் அத்தனையும் நகரின் பெரிய அதிகாரிகள், அரசியல்வாதிகள், லட்சாதிபதிகளின் வீடுகளிலேயே காணப்பட்டன.

அவைகளெல்லாம் பிரிக்கப்படப் பிரிக்கப்பட கொள்ளைபோன கரோலின் நகைகளும் வைரங்களும் பணத்தாள்களும் பொலிந்தன. அப்பப்போ சீர்பார்க்க வரும்போது நிலைமையைப் பொறுத்துக் கைவைக்கலாம் எனக் காத்திருந்தவன் மேன்.

என்ன என்ன பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. எவ்வளவு பெறுமதியானவை? அவற்றில் மீட்கப்பட்டவை போக மீதமெல்லாம் எங்கெங்கே இருக்கும் போன்ற விவரங்களைச் சரிவரப் பெறமுடியவில்லை.

மேனை உருட்டி உருட்டி விசாரித்தனர் அதிகாரிகள். அவன் வாயையே திறக்கவில்லை. எல்லாம் இழந்தவனாகப் பிரமை பிடித்தவனாக நின்றிருந்தான்.

பொலீஸாரின் உத்திகள் அவனை வாயைத் திறக்க வைத்தன. எனினும் எல்லாவற்றையும் மீட்க அவனால் சரிவரத் தகவல்களைத் தர இயலவில்லை.

ஜோனின் பெயரை மேன் சொன்னதும் அங்கெல்லாம் பொலீஸார் மொய்த்தனர். ஒரு துரும்புகூட அகப்படவில்லை. அங்கு மைக்கோ கரோலோ இருந்தமைக்கான எந்தத் தடயமும் அகப்படவும் இல்லை.

(தொடரும்)



## நாம் உழைத்திடுவோம்

நாட்டு நலங்கருதி உழைத்திடுவோம்
நலிவுறு மக்களையும் இணைத்திடுவோம்
வீட்டுப் புறமனைத்தும் பயிர்விளைப் போம்
வினரை ஒழித்தின்பம் எய்திடுவோம்

காட்டுத் தலங்களெல்லாம் கனி வளர்ப்போம்
கனிவு கொடுக்குநல்ல கலை வளர்ப்போம்
மேட்டு நிலங்களிலும் பயிர்விளைப்போம்
மேலும் மிகுபயன்கள் பெற்றிடுவோம்.

உண்டி பெருக்கியென்றும் உயிர்வளர்ப்போம்
உவந்து பிறர்க்குமதை உதவிடுவோம்
மண்டி வருத்தும்பசி மாற்றிடுவோம்
மக்கள் மகிழ்வுபெற உழைத்திடுவோம்.

நெற்றி வியர்வையினால் நிலநனைத்தே
நெற்குவை செய்து நன்றே வாழ்ந்திடுவோம்
மற்றும் பயிர்களையும் வளர்த்திடுவோம்
மன்னும் உயர்பயன்கள் உற்றிடுவோம்.

ஏழையாம் உழவர்க்கே உதவிடுவோம்
எங்கும் அவர்பெருமை உரைத்திடுவோம்
தாழையே வளர்கின்ற தரிசிலெல்லாம்
தண்பயிர் வளர்த்தின்பம் எய்திடுவோம்.

உழவுப் பணியுயர்ந்து வளர்ந்திடவே
உலகினி லேநல்ல வழிவகுப்போம்
பழனத் தலங்களெங்கும் விழவெடுக்கும்
பழக்கத்தை ஏற்படுத்தி வைத்திடுவோம்.

மாவலி கங்கையினை வடக்கிழுத்தே
மண்ணிற் பெரும்புகழை நண்ணிடுவோம்
ஆவலுற் றேயதனைப் பயிர்க்குதவி
அதிக விளைவு பெற்றே மகிழ்ந்திடுவோம்.

மலையகம் உதித்துக்க டவிடை மேவும்
மாநதி கள்தம்மைத் தடுத்துவைத்து
நிலைகொளச் செய்ததனைப் பயன்படுத்தி
நிரந்தர வருமானம் பெற்றிடுவோம.

வேண்டுமுண் பொருள்களினை விளைத்திடுவோம்
மிகுவிலை உயர்வினுக்கோர், தடைவிதிப்போம்
மாண்புகழ் கொண்டெங்கள் மக்கள் வாழ
மதிப்பரு நலங்களைநாம் புரிந்திடுவோம்.

பருத்தி விளைத்துமிக்க பஞ்செடுத்தே
பாங்குற வேயதனைப் பண்படுத்தி
விருப்புற வேதுணிகள் நெய்தெடுத்து
வியத்தகு வகையினிலே வாழ்ந்திடுவோம்.

மந்தை வளர்த்துமிகு வளம்பெறுவோம்
மாண்புற வாழ்ந்தின்பம் அடைந்திடுவோம்
விந்தை மிகுந்தநல்ல பொருள்கள் செய்து
மேவரு நலங்கள் பெற்று வாழ்ந்திடுவோம்.

உத்தியோ கமாப்பிள்ளை வேண்டுமென்றே
உன்மத்த மெய்திநின்றே சிறையிருந்து
நித்தம் தவஞ்செய்யும் கன்னியரை
நிச்சயம் உழவரையே மணக்க வைப்போம்.

உடைதரும் எழிலதனை உயர்வென்றே
உழவரை இகழ்கின்ற குமரியரை
விடையென நடந்துசெயல் ஆற்றிவரு
வீரரின் மேன்மையை உணரவைப்போம்.

அரச பணிவிரும்பி அலைந்திடுவோர்
அனந்தம் அனந்தமென்றே அறிந்திடுவோம்
தரத்துயர் தொழில்களையே பயிலவைத்து
தனித்துவத் தொடுவாழ வழிவகுப்போம்.

வகுத்தவன் பிணிவறுமை களைந்திடுவோம்
வளமுறு வாழ்வதனை அமைத்திடுவோம்
விருந்தினர் பேணிநிதம் மகிழ்ந்திடுவோம்
வீரர் தமைப்பயந்து வளர்த்திடுவோம்.

*— பொலிகை ச. திருப்பதி —*

| | | | |
|---|---|---|---|
| சூ | செ வியா சனி | | |
| புத வெ | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | | | |

மாற்றம்:- அவிட்டம் - கும்பம் - இராசியில் சந்திரன்நிற்கும். 3-4-2000ல் வெள்ளி - மீனஇராசியில் மாறும். 3-4-2000ல் புதன் - மீன இராசியில் மாறும்.

பதற்றமான சூழ்நிலை உருவாகும். சமாதானப் பேச்சுக்கள் தொடரும். அரசியல்வாதிகளுடன் சமயவாதிகள் கருத்து முரண்படுவர். அங்கொன்றும் இங்கொன்றும் இழப்புக்கள் மாறிமாறி ஏற்பட்டபடி இருக்கும். தொழிலாளர்கள், மாணவர்கள், மக்கள் பலவித கருத்துக் குழப்பநிலைகளை அடைவார்கள். இந்தியாவின்

# இந்த வார இராசி பலன்

**01-04-2000 இலிருந்து 07-04-2000 வரை**

மனக்கவலை, எதனையும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பால் துன்பங்கள், எதிர்ப்புக்கள் ஏற்படும். வாய்வுத் தொல்லை, மலச்சிக்கல், என்பன கொடுக்கும். அரசியல், செய்தித் துறை, பிரயாணத்துறை, குருத்துறை சம்பந்தப்பட்டவர்கள் அதிக மாற்றங்களும், நன்மைகளும் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-திங்கள், வியாழன், வெள்ளி (மத்தியானவேளை-12.00-1.00மணி)*

## கடகம்

விதி என்பது ஒருவரை பாசத்தைவிட - அவரின் விதிப்பலனைச் செய்ய உந்திக் கொண்டிருக்கும். வீர்கள். தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு அவசரம், வீட்டில் புதிய பொறுப்பு என அங்கும் இங்கும் பறந்து திரிவீர்கள். கைகால் பிடிப்பு, சளிவருத்தம், வயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, மனக்கவலை என்பன கொடுக்கும். சுயகௌரவம், தனித்தன்மையைப் பாதிக்கும். எச்செயலுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பீர்கள். பொதுக்காரியங்களுக்காக ஓடியாடித் திரியும் காலமாகும். சுகத்திற்காக அதிக பொருள் செலவு செய்வீர்கள். பிரயாணத்துறை, இசைத்துறை, ரீ.வி, கொம்பியூட்டர், ஹோட்டல், குருத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்களும் நன்மைகளும் அடைவார்கள். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன், வெள்ளி.*

மேலும் பல துன்பங்களை அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள். மனக்குமுறல்கள் வரும். வீடு, வாகனசுகம் கொடுக்கும். இடமாற்றங்கள் வரலாம். பொருள் விஷயமாக மனக்கருத்துகள் ஏற்பட இடம் உண்டு. குடும்பத்தவர்களின் தேவைகளுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிர்ப்பாலாரால் மனப்பயம் ஏற்பட இடம் உண்டு. சளி, நரம்புப் பலவீனம், தலையிடி, வயிற்றுவருத்தங்கள், அடிக்கடி கோபம் என்பன வரப்பலன் உண்டு. வெளிநாட்டுச் செய்தி நன்மை தரும். விவசாயத் துறை, நீதித்துறை, அரசியல்துறை, சமயத்துறை, வியாபாரத்துறை, போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள் இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு, வியாழன்.*

## மீனம்

அளவுக்குமீறிச் சுகத்தையும், பொருளையும் நாடுபவர்கள் பலர் அடிக்கடி அவதிப்பட்டுக் கொண்டிருப்பார்கள். பலரை ஏமாற்றப்போய், நீங்களே குடும்பத்தினரால், குழந்தைகளால் ஏமாற்றப்படும் பலன்கள் போல ஓர்உணர்வு உங்களுக்கு ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்கள் தேடிவரும். சமாளித்துக் கொள்ளுவீர்கள். சொந்தமென்று வந்தவர்கள் வீண் குற்றம் சுமத்துவார்கள். பொருள் ஏமாற்றம், இழப்பு வரலாம். அவதானம் தேவையாகும். சளி, கைகால் விறைப்பு, நரம்புப்பலவீனம், நாரிநோ, தடிமன் தலையிடி என வைத்தியம் செய்வீர்கள். ஆலய வாசலுக்குச் சிலவேளை சென்று வருவீர்கள். காசைக் கவனமாகச் செலவு செய்யுங்கள் அல்லது இழப்பு அதிகரிக்கும். வியாபாரத்துறை, வைத்தியத்துறை, விவசாயத் துறையினர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள். இடமாற்றங்கள் சகஜம்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு, வியாழன்.*

# சோதிட சஞ்சீவி

ஸ்திரமான போக்கு உலகநாடுகளின் ஆதரவைத் தேடித்தரும். கிழக்கு நாடுகளில் தளம்பல் அரசியல் போராட்டமும் மேற்கு நாடுகளின் தந்திரப் போக்கும் பொருளாதார அழுத்தங்களும் கிழக்கு நாடுகளுக்கு பலவித மாற்றங்களை ஏற்படுத்தும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

இந்தஉலகில் பலர் போலியாகக் கண்ணீர் வடித்து உண்மைகளை மறைத்துத் தமது சுயநலக் காரியங்களைச் சாதனைப்படுத்துகிறார்கள். அதுபோல நீங்களும் பட்டெனப்பேசி சட்டெனக் காரியங்களை சாதனைப் படுத்துவீர்கள். சிலவேளை தொழில் ஸ்தானத்தில் முரட்டுத்தனமான கோபங்கள் ஏற்பட்டு சகநண்பர்களைப் பேசிவிட்டு வேதனைப்படுவீர்கள். சட்டம் எதுவரை எனக் கேட்பீர்கள்? உங்கள் போக்கு சிலருக்குப் பிடிக்காமல் வசைபாடுவார்கள். கண் கூச்சம், சளி, தடிமன், வயிற்றுநோ, தலைநோ என்பன வரலாம். ஓய்வு எடுங்கள். தண்ணீர் அதிகம் குடியுங்கள். குளிர்பானம், தேசிக்காய்நீர் அருந்துங்கள். உடல்நிலை சமநிலை அடையும். பத்திரிகை போன்ற செய்தித்துறைகள், இசைத்துறை, ரீ.வித் துறை, ஹோட்டல் வியாபாரம் போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். அந்நிய நாட்டிலிருந்து நற்செய்திகள் வர இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.*

## இடபம்

ஒருவரின் உள்ளத்தில் அன்பு வரும் பொழுது பலவீனம், மௌனம் என மாறிமாறி வந்துதான் செயலுருப்பெறும். அதற்காக அதிகம் யோசிக்காதீர்கள். இன்று நடப்பதை நாளை யார் அறிவார்? எனவே கையில் உள்ளதை நயம்பட அளவுடன் செயற்படுத்துங்கள். தொழில் ஸ்தானத்தில் அமைதியாக, அக்கறையுடன் பணியாற்றி வருவீர்கள். பணவரவு சுமாராக இருக்கும். கோயில் விஷயங்களில் பொருள், செலவுகள் ஏற்பட்டபடி இருக்கும். மனக்கவலை, நெஞ்சுநோ, வாய்வுத் தொல்லை என்பன வருத்தாமல் இராது. குருத்தொழில் மருந்துத் துறை, கோயில்துறை, வாகனத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிக வருவாய்கள் வர இடமுண்டு. தூரதேசச் செய்திகளால் மனக் கலக்கம் வரச் செய்யும்.

*அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.*

## மிதுனம்

இக்காலத்தில் தாய் - தந்தையர் கூட தம் பிள்ளைகளில் கடும்பாசமோ, கடும் அழுத்தமோ பிரயோகிக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் இயலாமை ஏற்படலாம். ஏனெனில் வேகமான இயந்திரமய உலகம் வந்து கொண்டிருக்கின்றது. வருவது வரட்டும் என எங்கும் பம்பரம் சுழலுவது போன்று செயற்பட்டுவருவதனால் தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் செல்வாக்கு இருக்கச் செய்யும். மேலதிகாரிகள் நல்ல ஆதரவு தருவார்கள். இனஜனங்கள் முரண்டு பிடிப்பார்கள். பொருள்களில் கவனமாக இருக்கவும். சிலருக்கு கொடுக்கல் வாங்கலால் பிரச்சினைகள் ஏற்படும்.

உங்களை தொழில் ஸ்தானத்தில் உற்சாகப்படுத்தி வேலைவாங்குவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, கொண்டாட்டங்கள் ஏற்படும். பாசத்தவர்கள் உதவி செய்தாலும் வேசம் போடுகிறார்கள் எனக் கலங்குவீர்கள். பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகள் செய்வார்கள். சிரசு வருத்தங்கள், வாய்வுத் தொல்லை, கைகால்வாத உளைவு, என்பன கொடுக்கும். வீடு, வாகனச் செலவு அதிகரிக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் ஏற்பட்டபடி இருக்கும். ரீவித்துறை, செய்தித் துறை, மருத்துவத்துறை, பாதுகாப்புத்துறை, அரசியல்துறை, கமிஷன் துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

## சிங்கம்

குலப்பெருமை என்கின்றார்களே அதைக் காப்பற்ற அந்தக் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் பாடுபட வேண்டும். நீங்கள் தொழில் ஸ்தானத்தையே குடும்பம் மாதிரி நினைத்துச் செயற்படுவீர்கள். திடீர் திடீரென பெரிய அதிர்ச்சிகள் கொடுக்கும். விருந்தொன்று உங்களுக்கு கரும்பு போன்றிருக்கும். நிதானமாகச் செயற்படுங்கள் அல்லது மருந்து போடவும் கூடும் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். உங்கள் ஆலோசனையை சிலர் அலட்சியம் செய்வதை உங்களால் தாங்கமுடியாது கத்துவீர்கள். நெஞ்சு படபடப்பு, வாய்வுத்தொல்லை, அடிவயிற்றுநோ, மு[illegible] நவலி, உஷ்ண பீடைகள் என் பல[illegible] வரும். அரசியல்துறை, நகைத்து[illegible], ஹோட்டல் துறை, மருந்துத் துறை, நிர்வாகத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.*

# மகாதேவா ஜோதிடம்

## கன்னி

உங்களுக்கு புதிய பிறவி எடுக்கும் காலம் போலிருக்கும். பழமைகள் நீங்கிப் புதுமைகளால் பிரகாசிப்பீர்கள். பணத்[illegible]தப் பார்த்தால் குணத்தைத் தேட முடியாது அல்லவா? இந்த உலகில் நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் தொழில் ஸ்தானத்தில் சுயநலத்தால் சிலர் உங்களுக்குத் தொல்லைகள் கொடுப்பார்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் ஊழியர்களின் எதிர்ப்புக்கள் இருக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். அவசரத்தில் பொருள் இழப்புக்கள், மறதியால் இழப்புக்கள் அடைய நேரிடலாம். அயலவர்கள், இனஜனங்கள், நண்பர்களால் வீண் மனக்குழப்பம், சளி, விறைப்பு, நாரிநோ என்பன வரலாம். நகைவேலைகள் செய்தித் துறை, வாகனத்துறை, இசைத்துறை, அச்சுத்துறை, கொம்பியூட்டர், ரீ.வித் துறையினர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:-வியாழன், வெள்ளி.*

## துலாம்

எதையும் சீர்துக்கிப் பார்ப்பதனால் கொஞ்சம் நிதானமாகச் செல்

## விருச்சிகம்

மனிதர்கள் மனிதர்களை ஏமாற்றலாம். இறைவனை ஏமாற்ற முடியாது. குடும்பத்தில் ஏமாற்றங்கள் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் கூட இருப்பவர்களே குழிபறிப்பார்கள். தனக்குக் கிடையாதது யாருக்கும் கிடைக்கக்கூடாது என நினைக்கும் ஒரு சிலரால் உபத்திரவங்கள் ஏற்பட்டு மனக்குமுறல் ஏற்படும். இடமாற்றங்களுக்கு யோசனை வந்தாலும் சுயகௌரவம் விட்டுக்கொடுக்காது. தாய் வழியினருடன் கருத்து வேற்றுமைகள் கொடுக்கும். வயிற்றுநோ, உடல்நோ கைகால் பிடிப்பு, உஷ்ணபீடைகள், நெஞ்சு வருத்தம் என வரலாம். அந்நிய தேசத்திலிருந்து துக்கச் செய்திகள் வரலாம். செய்தித்துறை, குருத்துறை, உலோக வேலை, நகைத்தொழில், மருந்து, வாசனைத் தொழில் போன்ற தொழில் தொடர்பானவர்கள் இலாபங்களும் மாற்றங்களும் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன், வெள்ளி.*

## தனுசு

பாசம் வந்தால் கூட படபடப்பும் இருக்கச் செய்யும். சொந்தபந்த உணர்வுடன்நீதியை எவரும செலுத்த முடியாது. சுயநலம் மீறிவரும் காலத்தில் தத்துவம் பேசி நடக்கும் ஒரு சிலர் விதிவிலக்கு. இவர்களால் எதையும் சமாளிக்க முடியாமல் போகும். எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருந்து நல்ல பெயர் வாங்க முயலுங்கள். எடுத்தெறிந்து பேசிச் சிலரின் பகைமையை சம்பாதித்துக் கொள்ளாதீர்கள். நண்பர்கள், அயலவர்களுடன் மதிப்பு பாதிக்கும்படி நடந்து கொள்ளாதீர்கள். வயிற்று வருத்தம், வாய்வுத்தொல்லை, சிரசு வருத்தம், உஷ்ணபீடைகள யோசனை என்பன கொடுக்கும் இடமாற்றம் நல்லதல்ல. வியாபாரத்துறை, செய்தித்துறை, வருமானத்துறை, கலைத் துறை, ரீ.வி, இசைத்துறை போன்ற துறையினர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

## மகரம்

எந்த விஷயத்திலும் அளவுடன் இருந்து செயற்படுபவர்கள் எப்பொழுதும் வெற்றி பெறுவார்கள். தேவையற்ற கற்பனைகள் இலாபம் தராது. நீங்களும் தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருந்து செயற்படுங்கள். சகோதரங்களுடன கருத்துவேற்றுமை ஏற்படலாம். பேச்சுச்சாதுரியத்தால் எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடியாது. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நரம்புப் பிடிப்பு, உளைவு கொடுக்கும். நகைவேலை, சாய்ப்புச் சாமன் விற்பனை, பிரயாணத்துறை, சட்டத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் மாற்றங்கள் நன்மைகள் அடைவார்கள். தூரதேசச் செய்திகள் மனநிறைவைத் தரலாம்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

## கும்பம்

துன்பங்களை அனுபவிக்காதவர்கள் வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை அறியாதவர்களாகத்தான் இருப்பார்கள். இதனால் அவர்கள்

## 'உலகை வெல்பவள் நீயாவாய்!'

பருவப் பெண்ணே கேளாய் நீ ~ உன்
பருவம் உனக்குப் பகையாகும்
உருவின் எழிலைக் காண்போர்கள் ~ அதன்
சுவையை ருசிக்க நினைப்பார்கள்!

தெருவில் போகும் போதெல்லாம் ~ உன்
பின்னே சுற்றித் திரிவார்கள்
அரும்பே மலரே என்பார்கள் ~ அன்பால்
அணைத்து வெல்லத் துடிப்பார்கள்!

தருணம் பார்க்கும் காளையர்கள் ~ தம்
காரியம் நடந்த பின்னாலே
கருவைச் சுமக்க வைத்துவிட்டு ~ காணாத்
திசையில் தாம் மறைவார்கள்!

பெருமை பேசிய உந்தனையே ~ ஊர்
சிரிக்கப் பேசி வசை சொல்லும்
அருமை உரிமை பறிபோகும் ~ தினம்
அவலம் உன்னைத் தேடிவரும்!

மருவும் காதல் பாதையிலே ~ கவனம்
மிகவும் கட்டாயம் கருத்துடன்
வருவதை எண்ணி நீ நடந்தால் ~ இந்த
உலகை வெல்பவள் நீயாவாய்!

அரியாலையூர்
**சி. சிவதாசன்**

## கட்டை விரலுக்கோர் கவிதை

**ஐந்து விரல் சேர்ந்து அழகான பூவாகி...**
**உள்ளங்கையெல்லாம் மகரந்த ரேகையிட...**
**நைந்த ஓர் இதழாய் என்னுடைய கட்டைவிரல்..**

**சுட்டுவிரல் இருந்து கொட்டம் அடித்தென்ன...?**
**குட்டிவிரல் மெல்ல அமைதியாய் இருந்தென்ன...?**
**மோதிரவிரல் மின்னற் சிரிப்பால் மயக்கியென்ன...?**
**நீள விரல் தன் பெருமை நீட்டி முழக்கியென்ன...?**
**கட்டை விரலுக்கின்று மனம் ஏங்கி அழுகிறது!**

**நேற்றுவரை அந்த விரல் கைக்குள் அடங்குகையில்**
**அந்த மகிமைக்கு மகுடமிட மறந்தேனா...?**
**கிரீடம் என நினைத்து ஷமுள்மகுடம்ெ சூட்டிவிட்டு**
**கீறல்களோடு அதைப் போராடவைத்தேனா..?**
**தவறிப்போயன்று ஜன்னலுக்குள் நெரியுண்ட**
**விரலின்று வீங்கிச் சீழூற்றுக் கிடக்கிறது...**
**நகம் பெயர்ந்துதிர்ந்து, வலிதனையெழுப்பி...**
**அகமெல்லாம் குலைந்து, மனமெல்லாம் தேய...**
**விரலொன்று என் மனதை வருத்தி வதைக்கிறது...!**

**அன்றைக்கு நான் கொஞ்சம் அவதானம் எடுத்திருந்தால்**
**இன்றைக்கும் இந்தவிரல் சிதையாமல் சிரித்திருக்கும்...!**
**கன்றிவிட்ட காயமின்றி, நகம் பிரிந்த சீழுமின்றி..**
**முன்தினமாய் எப்போதும் முத்தாகி முகிழ்ந்திருக்கும்...!**
**என்றாலும் எனக்கிப்போ புதுஞானம்...!**
**இழந்துதான் ஒன்றின் அருமை புரியுமென்றால்...**
**கட்டைவிரல் மீதில் கனிவு இனி ஊறுமென்றால்...**
**இன்றுவரை நான் இழந்த மகிழ்விற்கும் வரவு வைப்பேன்..**
**அதனாலே,**
**என் நெஞ்சுக்கொருமடலை நானே எழுதுகிறேன்...!**
**'பொறுமனமே இந்தக் காயமெல்லாம் ஆறிவிடும்...**
**வேதனைத்தீ மாறும்... விரல் சிதைந்த பெருவிரலின்**
**தோலுமினி நிறம்மாறும்... நகம் பெயர்ந்து போனதுவா...?**
**கவலை விடு.. இனி முளைக்கும்..!'**
**என என்னைத் தேற்றியந்தக் கட்டைவிரல் தன்னை,**
**இதமாக வருடுகிறேன்...!**
**இனி இல்லை ஒரு துன்பம்!**


**- தாட்சாயணி**


# ஐந்தடக்கி இலக்கியத்தில்

முதலைகளைப்போல ஆமைகளும நீண்ட பின்னணியை உடையவை: அநாதியானவை: உயிர் வாழும் சுவடாக (LIVING FOSSILE) கருதப்படவேண்டியவை. இவற்றின் முன்னோடி எது. எப்படியிருந்திருக்கும் என்பது சரியாகத்தெரியவில்லை.

அங்கிகள் எதிரிகளிடம் இருந்து தப்புவதற்குப் பலதரப்பட்ட இசைவாக்கங்களை மேற்கொள்ளும். சிலவற்றின் உடல் சுவையற்றதாக இருப்பதனால் தப்புகின்றன; சிலவற்றின் சதை நச்சுத்தன்மையாக இருப்பதனால் தப்புகின்றன: சில மறைந்து வாழுவதன் மூலம் தப்புகின்றன: சில பாதுகாப்பான கவசங்களைக் கொண்டிருப்பதனால் தப்புகின்றன. இங்ஙனம் இசைவாக்கங்கள் பலப்பல.

ஆமைகள் பாதுகாப்பான ஓடுகளைக் கொண்டிருப்பதனால் தப்புகின்றன. ஆமையின் கவசம் (ஓடு) இரண்டு அடுக்குகளினால் ஆனது. ஆமையோட்டை முதுகுப்புறப்பரிசை, வயிற்றுப்புறப்பரிசை என்று பிரித்துக் கொள்ளலாம். முள்ளெலும்புகள் விலாவென்புகளின் சேர்க்கையினால் உள்முதுகுப்புறப் பரிசையையும், மார்பென்புகளின் திரிபால் வயிற்றுப்புற உட்பரிசையும் தோன்றின. இவற்றிற்கு மேலும் ஓடுகள் போன்ற போர்வைகள் உண்டு. முதுகுப்புறப்பரிசையும், வயிற்றுப் புறப்பரிசையும் உட்பக்கம், வெளிப்பக்கம் என்ற அடிப்படையில் அவதானித்தால் இந்த வேறுபாடு புலப்படும். நாட்சென்ற ஓடுகளில் உட்பக்க, வெளிப்பக்க அலகுகள் தனித்தனியாகக் கழன்றிருப்பதையும் காணலாம். இங்ஙனம் ஆமைகளில் முதுகெலும்பு, விலாவெலும்புகள், மார்பென்பு ஆகியவற்றினால் ஒரு வன்கூட்டுக் கவசம் தோன்றியிருப்பதனால் இவற்றின் தோட்பட்டை வளையம் விலாபென்புக் கூட்டுக்கு வெளியே (எமக்கு இருப்பதுபோல) இல்லாமல் உள்ளேயிருக்கும்.


பாலாமை (LISSEMYS PUNCTATA CEYLONENSIS)


கடலாமைக் குட்டிகள்: முதுகுப்புற, வயிற்றுப்புறத் தோற்றங்கள்.


பேராமை அல்லது பாலாமை (CHELONIA MYDAS அல்லது CHELONE MYDAS)


கல்லாமை அல்லது பீ ஆமை அல்லது கறுப்பாமை அல்லது பறையாமை (MELANOCHELYS TRIJUGA THERMALIS)

இத்தகைய ஒரு கவசம் இருப்பதனால் ஆமைகள் எதிரிகளிடமிருந்து முழுமையான பாதுகாப்புப் பெறுகின்றன எனக்கொள்ள முடியாது. சிறுத்தை போன்ற விலங்குகள், ஆமைகள் அகப்பட்டால், கற்பாறைகளில் போட்டு உடைத்து உள்ளடக்கத்தைச் சுவைக்க முற்படும். பிராந்து போன்ற பறவைகள் ஆமைகளைத் தூக்கிக்கொண்டு உயரப் பறந்து கற்பாறைகளிற் போட்டு உடைத்து பின் உண்ணும். மனிதனிலிருந்து தப்புவதற்கோ அங்கிகள் எத்தகைய பாதுகாப்பைப் பெற்றும் பயனில்லை.

**குகன்**

ஆமைகளை ஐந்தடக்கி என்று குறிப்பிடுவதற்குக் காரணம் கால்களையும், தலையையும் ஓட்டுக்குள் இழுத்து எதிரியிடம் இருந்து தப்புவதற்கு அசையாமல் இருக்கும் அதன் பண்பாகும். சில பொழுதின் பின் தலையை இலேசாக வெளியே நீட்டும்; நிலைமை சரியில்லையென்றால் மீண்டும் உள்ளிழுத்துக் கொள்ளும். கடலாமைகளில் அவயவங்கள் பெரிதாகத் துடுப்புப் போல இருப்பதனால், இவற்றினால் அவயவங்களை உள்ளெடுக்க முடியாது. தலையை உள்ளெடுத்துக் கொண்டு, அவயவங்களைப் பரிசை மூடிகளின் இடுக்கில் அணைத்து வைத்திருக்கும்: வாலை மடித்து வைத்திருக்கும். (வால் விடயம் சகல ஆமைகளுக்கும் பொருந்தும்)

சகல ஆமைகளிலும் வயிற்றுப்புறப் பரிசை (PLASTRON) தட்டையாகவிருக்கும்: முதுகுப்புறப்பரிசை (CARAPACE) ஓரளவிலிருந்து அதிக அளவில் வெளிநோக்கி வளைந்திருக்கும். அதனால்தான் ஆமைகளை முதுகுப்புற பரிசையில் புரட்டிவிட்டால் அவற்றிற்குப் பிரச்சினையாகப் போய்விடுகின்றது.

ஆமைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். தரை ஆமைகள் (TORTOISES), நன்னீர் ஆமைகள் (TERRAPINS), கடல் ஆமைகள் (TURTLES). நில ஆமைகளில் கால்கள் குண்டாந்தடி போன்றவை; நிலத்தில் நடப்பதற்கு உதவும்; நீந்த உதவா. நில ஆமைகள் வரட்சியான இடங்களில்தான் காணப்படும். எமது நாட்டு நில ஆமைகள் மிக அழகானவை. கலபேகோஸ் (GALAPAGOS) தீவுகளில் இராட்சத நில ஆமைகள் உண்டு.இவை நாகதாளி வகைக்(CACTI)குரிய தாவரங்களை உணவாகக் கொள்ளும். இவை நீண்டகால் வாழ்க்கைக்குரியவை. கனைத்துச் சத்தமெழுப்பும். மிருகக் காட்சி சாலைகளில் இவை கவர்ச்சிப் பேர்வழி. சிறுவர்கள் சவாரி செய்ய இடமளிக்கும்.

நன்னீர் ஆமைகளில் கால்கள் குண்டாந்தடி போலிருப்பதனாலும், விரல்களுக்கிடையே சவ்வு இருப்பதனாலும், இவற்றினால் நடக்கவும் முடியும்; நீந்தவும் முடியும்.

கடல் ஆமைகளில் கால்கள் பெரிதாக, தட்டையாக, துடுப்புப்போலவிருக்கும். விரல்கள் துலக்கமாகத் தெரியாவிட்டாலும் விரல்களுக்குரிய நகங்கள் வெளிவிளிம்பில் தெரியும். இவற்றினால் நீரோட்டங்களையும் அலைகளையும் எதிர்த்து நன்றாக நீந்த முடியும். ஆனால் தரையில் வெகு சிரமத்துடன்தான் இவற்றினால் இடப்பெயர்ச்சி செய்யமுடியும்.

ஆமைகளில், சுவாசப்பைகளைத் தவிர, மேலதிக சுவாச உறுப்புகளுமுண்டு. தொண்டைக்குள்ளும், கழியறைக்குள்ளும் நீரை உள்ளெடுத்து சுவாசத்திற்குப் பயன்படுத்தும். அதனால் நீண்ட நேரம் மூச்சுவிடுவதற்கு நீரின் மேற்பரப்புக்கு வராமல் இருக்கமுடியும்.

ஆமைகளும் சூழல்வெப்பக் குருதி நிலையானவை. நன்னீராமைகள் வெயில் காய்வதுண்டு; கடலாமைகள் அதனைச் செய்வதில்லை.

ஆமைகளில் புணர்ச்சியின் பின் அகக் கருக்கட்டல் நிகழும். முட்டைகள் மணலில் புதைத்து வைக்கப்படும். சூரிய வெப்பத்தினால் முட்டைகள் பொரிக்கும். கடலாமைகள் மணற்பாங்கான கடற்கரைகளை நாடிவரும். இலங்கைக் கடற்கரைகளை நாடிவருவதுமுண்டு. பொதுவாக ஆண்டிற்கு இரு முறை இங்ஙனம் வருவதுண்டு. கடற்கரையை அடைந்ததும் மணல் மேட்டில் ஏறி, உலர்வான இடத்தை அடைந்ததும், துடுப்புக்களின் (கால்கள்)உதவியினால் ஆழமாக வளை தோண்டி, முட்டைகளையிட்டு, பின் மூடிவிடும். வளையின் மேல் குறுக்கும் மறுக்கும் நடப்பதுடன், தான் வந்த பாதையிலும் குறுக்கும் மறுக்கும் நடந்து மறைத்துவிடும். முட்டையிடும்போது ஒரு மீன் 'வெடுக்கு' எழும். செல்லும் பாதையிலெல்லாம் இதைவிட்டுச் செல்லும். அதனால் முட்டைகள் இடப்பட்ட இடத்தைக் கண்டுகொள்வது கடினம். முட்டையிடும் நிகழ்ச்சி இராக்காலத்தில் தான் நிகழும். பொதுவாக ஒரு தடவையில் 125 முட்டைகள் வரை இடும். இங்ஙனம் பல தடவைகள் முட்டைகள் இடப்படும். முட்டைகள் நன்கு மறைக்கப்பட்டாலும், சில சமயங்களில் காட்டுப்பன்றி, மாமிச பட்சணிகள், உடும்புகள் போன்றவை நிலத்தைக் கிளறி முட்டைகள் கிடைத்தால் உண்பதுண்டு. மனிதன்தான் ஆமைகளுக்கு முதல் எதிரி. அவனிடமிருந்து முட்டைகளை மறைப்பது இயலாத காரியம். அவன் ஆமைகள் வரும் காலத்தை அறிந்து. அவற்றைப் பின்தொடர்ந்து, அவை முட்டைகளை இட, அவன் முட்டைகளை அள்ளி பறிகளில் போடுவதுண்டு. மேலும், நீண்ட கம்பியை மணலில் செலுத்தி, முனையை ஆராய்ந்து, முட்டைகள் இருப்பதை அறிந்து, மண்ணைக் கிளறி, முட்டைகளை அகற்றுவதுண்டு. ஆமை முட்டை சிறந்த சத்துள்ள உணவு.

இவற்றிலிருந்தெல்லாம் தப்பி, முட்டைகள் இருந்தால், அவை பொரித்து குட்டிகள் தோன்றும். அவை மணலைக் கிளறி, வெளியேறி, கடலை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கும். இப்பொழுதும், இவைகளை எதிர்பார்த்துப் பல எதிரிகள் காத்திருக்கும். தரைப் பறவைகள், கடற் பறவைகள் மற்றும் ஊனுண்ணிகளில் இருந்தெல்லாம் தப்பியவை, கடலில் சென்று மறையும். இவை எங்கு சென்று வளர்கின்றன என்பது இன்னமும் துலக்கமாகத் தெரியவில்லை. பூரண வளர்ச்சியடைந்த பின்தான் இனவிருத்திக்காக கரையை (தரையை)நோக்கி வரும். இங்ஙனம் வரும் ஆமைகளின் முட்டைகள் பறிபோவதுடன், ஆமைகளும் சட்டிக்குள் போவதுண்டு.

மனிதன் உணவிற்காக ஆமைகளையும் கடலில் வேட்டையாடுவதுண்டு. ஆமைகளைப் பிடித்து கடற்கரையில் அமைக்கப்பட்ட கூடுகளில் அடைத்து விளம்பரப்படுத்தி விலை பேசி விற்பார்கள். கரையூரிலும் இத்தகைய கூடுகளை முன்னர் காணக்கூடிய
இப்பொழுது இது தடைசெய்ய
உணவிற்குப் பயன்படாத ஆமை
டிற்காகப் பிடிப்பார்கள். ஆமை
சீப்புக்கள், பொத்தான்கள், பெ
றும் பல அலங்காரப் பொருள்
படுகின்றன.

மனிதனின் பாதிப்பினால் ஆ
மளவில் அருகிவிட்டன. இலங்
பல நாடுகளில் இப்பொழுது
பாதுகாக்கப்பட்ட அங்கிகள்.
விருத்திக்குப் பல சங்கங்கள்
கின்றன. இலங்கையிலும் உத
ஆமைகள் கடற்கரைக்கு வந்து
இட்டு, பின் முட்டைகள் பொரி
கடலை அடையும்வரை பாதுக
படுகின்றது. முட்டைகளைச் சே
காப்பான இடங்களில் வைத்து
குட்டிகளைக் கடலில் கொண்டு
முண்டு. இங்ஙனம் ஆமையின
படாமல் ஓரளவு பாதுகாக்கப்பட
பினும், மனிதனுக்கு ஆமை மு
ஆமை இறைச்சியிலும் உ
மறைந்ததாகத் தெரியவில்ல
ஆமை முட்டை வேட்டையும்; அ
யும் தொடரத்தான் செய்கின்றது
பயனில்லை; மனமாற்றம்தான்

இனி இலங்கைக்குரிய ஆமை
சிலவற்றை இங்கு கவனிப்போ

### தோணி ஆமை அ
### ஏழுவரி ஆமை

இதன் விஞ்ஞானப் பெயர்
CHELYS CORIACEA. ஆங்
LEATHERY TURTLE. கடலா
இதுதான் பெரியது; மிகவும் வே
கூடியது. ஆபத்து வேளைகளி
தாக ஆழ்மாகச் சுழியோடி
கொள்ள முயற்சிக்கும். நிறு
களையிடும் ஒரே நகருயிரி (
முட்டைகள் ஒழுங்கான வெள்
வளைகளில் இரட்டையர்களை
டைகளுமிருக்கும். பொரித்தவுட
நிறம் முதுகுப்புறத்தில் நெடுக்கா
கோடுகளையும் புள்ளிகளையும்
கறுப்பு. முதிர்ந்தவற்றில்
மேலோங்கும். இந்த ஆமைகள்
ஊனுண்ணிகள்; கடல் அல்
உணவாகக் கொள்ளும். கூடு
வாழ்க்கைக்குரியது; முட்டையி
திரம் கரைக்கு வரும்.


### சித்தாமை

விஞ்ஞானப் பெயர் - LEPI
OLIVACEA OLIVACEA. ஆங்
- OLIVE BACKED LOGG
இலங்கைக்குரிய கடலாமைகளி
ணமானது; சிறியது; பொரிக்கு
யின் நிறம், முதுகுப்புறம் நீலப்
களின் விளிம்புகள் கரிக் கறு
வயிற்றுப்புறப் பரிசையின் புரு
நிறம்; நிறையுடலியின் முதுகு
- கபில நிறம்: வயிற்றுப்புறம்
அல்லது பசிய மஞ்சள்.

உணவைப் பொறுத்தவரை
வாகச் சைவம். கடற் பாசிகளை
கக் கொள்ளும். கடல் முள்
URCHINS) முத்துச் சிப்பிகள்
யும் உணவாகக் கொள்ளும்.

### பெருந்தலை ஆ

நாயாமை அல்லது கிளிச்சொ
என்றும் இது அழைக்கப்படும்.
ஞானப் பெயர் - CARETTA
GIGAS. ஆங்கிலப் பெயர்
BROWN RED LOGGER
வகைக்குரிய ஆமைகளில் இது


(a)ஒரு தோல் கடலாமை இலங்கைக் கடற்கரையில் முட்டையிடுகின்றது. (b) ஒரு குழியில் இருந்து எடுக்கப்பட்ட முட்டைகள் அளவுப் பிரமாணத்தின் அடிப்படையில் அடுக்கப்பட்டுள்ளன.


ஏழு வரி ஆமை முட்டையிடும் காட்சிகள், (a) வ
சாதாரண முட்டைமேலே, விகாரமானவை கீழே.

# ...தில் இடம்பெற்ற ஆமைகள்

...ர் காணக்கூடியதாகவிருந்தது. ...இது தடைசெய்யப்பட்ட விடயம். ...யன்படாத ஆமைகளையும் ஓட் ...பார்கள். ஆமையோட்டிலிருந்து ...த்தான்கள், பொடிடப்பிகள் மற் ...ங்காரப் பொருள்கள் செய்யப்

...பாதிப்பினால் ஆமைகள் பெரு ...கிவிட்டன. இலங்கை உட்படப் ...ல் இப்பொழுது கடலாமைகள் ...ட்ட அங்கிகள். மேலும் அதன் ... பல சங்கங்கள் உதவி வரு ...ங்கையிலும் உதவுகின்றார்கள். ...ற்கரைக்கு வந்து முட்டைகளை ...ட்டைகள் பொரித்து குட்டிகள் ...யும்வரை பாதுகாப்பு வழங்கப் ...ட்டைகளைச் சேகரித்து, பாது ...ங்களில் வைத்து; பொரித்தபின் ...கடலில் கொண்டுபோய் விடுவது ...னம் ஆமையினங்கள் அழிந்து ...பு பாதுகாக்கப்பட்டுள்ளன. இருப் ...துக்கு ஆமை முட்டைகளிலும், ...ச்சியிலும் உள்ள "ரேஸ்ற்" ...த் தெரியவில்லை. களவாக ... வேட்டையும், ஆமை வேட்டை ...ான் செய்கின்றது. சட்டங்களில் ...மனமாற்றம்தான் அவசியம். ...கைக்குரிய ஆமையினங்களில் ...ங்கு கவனிப்போம்.

## ... ஆமை அல்லது ...ழுவரி ஆமை

...ஞ்ஞானப் பெயர் - DERMO...RIACEA. ஆங்கிலப் பெயர் - ...TURTLE. கடலாமைகளிலேயே ...யது; மிகவும் வேகமாக நீந்தக் ...ந்து வேளைகளில் நிலைக்குத் ...கச் சுழியோடித் தப்பித்துக் ...ற்சிக்கும். நிறமுள்ள முட்டை ...ரே நகருயிரி (ஏனையவற்றின் ...ழுங்கான வெள்ளை). அநேக ...ரட்டையர்களை உடைய முட் ...ும். பொரித்தவுடன் குட்டிகளின் ...றத்தில் நெடுக்காக வெள்ளைக் ... புள்ளிகளையும் உடைய நீலக் ...ர்ந்தவற்றில் கறுப்பு நிறம் ...இந்த ஆமைகள் முக்கியமாக ...்; கடல் அல்காக்களையும் ...காள்ளும். கூடுதலாகக் கடல் ...யது. முட்டையிடுவதற்கு மாத் ... வரும்.

## ...சித்தாமை

... பெயர் - LEPIDOCHELYS ...LIVACEA. ஆங்கிலப் பெயர் ...ACKED LOGGER HEAD. ... கடலாமைகளில் இது சாதார ...யது; பொரிக்கும்போது குட்டி ...துகுப்புறம் நீலப்பச்சை; பரிசை ...கள் கரிக் கறுப்பாக மாறும்; ...பரிசையின் புருவங்கள் கபில ...லியின் முதுகுப்புறம் ஒலிவ் ... வயிற்றுப்புறம் இளம் மஞ்சள் ... மஞ்சள்.

... பொறுத்தவரை இது பொது ... கடற் பாசிகளையே உணவா ...ம். கடல் முள்ளிகள் (SEA ...த்துச் சிப்பிகள் போன்றவற்றை ...க் கொள்ளும்.

## ...ந்தலை ஆமை

...ல்லது கிளிச்சொண்டான்ஆமை ...அழைக்கப்படும். இதன் விஞ் ... - CARETTA CARETTA ...ங்கிலப் பெயர் - GIANT ...D LOGGER HEAD. இவ் ...ஆமைகளில் இதுவே பெரியது.

பொரித்தவுடனும் குட்டிகளின் நிறம் - தலை, முதுகுப்புறம் சிவப்பும் கபிலமும்; சொண்டு களும் கன்னங்களும் கருங்கபிலம்; தொண்டை கறுப்பு; முதுகுப்புறப் பரிசை சிவப்பும் கபில மும்; புருவங்களுக்கிடையே கருமை; வயிற் றுப்புறப் பரிசை முதுகுப்புறப் பரிசையைக் காட்டிலும் இளம் நிறம். அதன் விளிம்பு கரு மையானது.

நிறைவுடலியில் முதுகுப்புறம் சிவப்பு - கபிலம்; விளிம்பு மஞ்சள்: உணவு :- அல்காக் கள், மொலூக்காக்கள், கடல் முள்ளிகள், நண்டுகள் போன்றவை.

## அழுங்காமை அல்லது சீப்பாமை

விஞ்ஞானப் பெயர் - ERETMOCHELYS INBRICATA. ஆங்கிலப்பெயர் - HAWKS-BILL TURTLE அல்லது CARET அல்லது SHELL TURTLE.

அலகு பறவையின் சொண்டு போலிருக்கும். தலை மெல்லியது. உடன் பொரித்த குட்டி களின் முதுகுப்புறப் பரிசை வெண்ணிற விளிம் பையும் கபிலநிற நடு முதுகுப் பட்டியையும் கொண்ட இளம் சிவப்பு நிறம். நிறைவுடலிக ளில் முதுகுப்புறமாகக் கறுப்பு செதில்களுக் கிடையே மஞ்சள் இடைவெளிகள் காணப்படும். முதுகுப்புறப் பரிசையின் தகடுகளில் கறுப்பு, செம்மஞ்சள், செந்நிறக் கபில மஞ்சள் பூச்சுக் களிருக்கும். வயது போகப்போக கறுப்பு நிறம் அதிகரிக்கும். வயிற்றுப்புறப் பரிசை மஞ்சள். இது பெரும்பாலும் ஓர் ஊனுண்ணி. ஆயினும் தனியே அல்காக்களை உட்கொண்டும் இத னால் வாழ முடியும். சில கண்டல் இனத் தாவரங்களின் கனிகளையும் உணவாகக் கொள்ளும். இதன் சதை உண்ணக் கூடியது: ஆனால் சுவையற்றது. சில சமயங்களில் இதன் சதை நச்சுத்தன்மையடைவதுண்டு.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

இதனால் பல மனித இழப்புக்கள் ஏற்பட்ட துண்டு. சதையின் நச்சுத் தன்மைக்குக் கார ணம் அச்சமயத்தில் அது உட்கொண்ட உணவே எனக் கருதப்படுகின்றது. மீனவர்க ளின் கூற்றுப்படி விலங்கின் ஈரலின் ஒரு துண் டைக் காகங்களுக்கு வீசுவார்கள். காகங்கள் அதனை உண்ண மறுத்தால் சதை நஞ்ச டைந்து விட்டது என்பது கருத்து. பிறிதொரு பரிசோதனையில் பச்சை இறைச்சியைச் சுண் ணாம்புடன் சேர்ப்பார்கள். இறைச்சி நஞ்சடைந் திருந்தால் சுண்ணாம்பு பச்சை நிறம் பெறும்.

இதன் பெறுமதியான பரிசைகளுக்காக (SCUTES) இது பெருமளவில் பிடிக்கப்படும். இறைச்சி பயனற்றதாகப் போனாலும் பரிசை கள் கிடைக்குமல்லவா?

## பேராமை அல்லது பாலாமை

இதன் விஞ்ஞானப் பெயர் - CHELONIA MYDAS (CHELONE MYDAS). ஆங்கிலப் பெயர் - GREEN TURTLE. சிங்களத்தில் இதைக் கல்லாமை அல்லது இறைச்சி ஆமை அல்லது மணல் ஆமை என்று அழைப்பார்கள். இறைச்சிக்காகப் பெரிதும் விரும்பப்படும் ஆமை.

உடன் பொரித்த குட்டிகளின் ஓடு முது குப்புறமாக கரும்பசிய வெண்கல நிறம்; முது குப்புறப் பரிசை, வயிற்றுப்புறப் பரிசை, துடுப் புக்களின் முதுகுப்புறம் வெள்ளை. நிறைவுட லிகளின் முதுகுப்புறப் பரிசை விளிம்பு பல்லுள் ளதாயிருக்கும். ஒவ்வொரு பரிசையினதும் பின் மூலையில் பெரிய செங்கபிலப் பூச்சு இருக்கும். இதிலிருந்து கறுப்பு, கபிலப் பட்டிகள் கதி ரெறியப்பட்டிருக்கும். தலை இளஞ் சிவப்பு: வயிற்றுப்புறப் பரிசை இளம் மஞ்சள்.

உணவைப் பொறுத்தவரை இது சைவம். கடற் புற்களையும் அல்காக்களையும் உண வாகக் கொள்ளும். சில சமயங்களில் மேய்வ தற்காக அலையினால் அடிக்கப்படும் முருகக் கற்பாறைகளின் மேலும் ஏறி உலாவரு வதுண்டு. இங்கு அதிக அளவில் பாசிகள் கிடைக்கும். கைப்பற்றப்பட்ட ஆமைகளுக்கு மீனையோ, இறைச்சியையோ கொடுத்தால் மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளும். ஆயினும நிலத் திலும், அடைப்புக்களிலும் இதன் சமிபாட்டு நிகழ்வுகள் நின்றுபோய்விடும்.

## கல் ஆமை

பீ ஆமை அல்லது கறுப்பு ஆமை என்றும் இது அழைக்கப்படும். இதன் விஞ்ஞானப் பெயர் - MELANOCHELYS TRIJUGA THERMALIS ஆங்கிலப் பெயர் - COMM-ON TERRAPIN அல்லது HARD TERRA-PIN அல்லது BLACK TERRAPIN. தமிழில் பறையாமை அல்லது சருகாமை என்றும் கூட இதனை அழைப்பார்கள். துர்நாற்றமுள்ளது. இலங்கையில் சாதாரணமாகக் காணப்படும். இதைக் கையாண்ட ஆய்வாளர் இதன் மணத்தை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இந்த மணத்தை இது கழியறையில் உள்ள சுரப்பிகள் வாயிலாகவும் மல வாயுக்கள் வாயி லாகவும் வெளிவிடும். இது ஓர் அனைத்து முண்ணி. அதனால் சிறந்த அழுக்ககற்றி (SCAVENGER). நீண்ட நேரம் நீருக்கு வெளியே வந்து வெயில் காயும். இரவு நேரங் களில் உணவு தேடி நீரைவிட்டு வெளியே வரும். இனவிருத்தியின் போது வளையில் மூன்று தொடக்கம் எட்டு முட்டைகள் வரை இடும்.


## காட்டு ஆமை

காட்டுப்பெட்டி ஆமை என்றும் இது அழைக்கப்படும். விஞ்ஞானப் பெயர் - TESTUDO ELEGANS (GEOCHELONE ELEGANS) ஆங்கிலப் பெயர் - STAR TORTOISE. நட்சத்திர ஆமை என்ற ஆங்கி லப் பெயர் இதற்கு மிகவும் பொருத்தமானது. முதுகுப்புறப் பரிசையில் நட்சத்திரம் போன்ற அடையாளங்கள் இருக்கும். அதனால் மிகவும் அழகான ஆமை. இனப் பெயர் (ELEGANS) இதையே குறிப்பிடுகின்றது. முழுக்க முழுக்க தரை வாழ்க்கைக்குரியது. வயிற்றுப்புறப் பரிசை தட்டையானது. முதுகுப்புறப் பரிசை பெரிதாக வளைந்து கூடாரம்போலிருக்கும். பொதுவான நிறம் செம்மஞ்சள் அல்லது மஞ்சள். இதில் கறுப்புக் கோடுகள் இருக்கும். முதுகுப்புறப் பரிசையில் பல மேடுகள் இருக் கும். இவற்றில் மேற்படி கோடுகள் ஆரைக் குரியவையாக இருக்கும். அதனால் ஒவ் வொன்றும் நட்சத்திரத் தோற்றத்தைக் கொடுக்கும். இது சிறப்பாக சைவமாயினும் அனைத்துமுண்ணியாகச் செயற்படுவதுமுண்டு. நத்தைகளையும், கடற்கரைகளில் நீரில்லாத இடங்களில் கொட்டணை (SALICORNIA) யையும் உணவாகக் கொள்வதுண்டு. இதன் உணவு வாயிலாகத்தான் இதற்கு வேண்டிய நீர் கிடைக்கும். இது மிகவும் உலர்வான இடங்களில்தான் காணப்படும்.

## பாலாமை

விஞ்ஞானப் பெயர் - LISSEMYS PUNCTATA CEYLONENSIS ஆங்கிலப் பெயர் - SOFT TERRAPIN. பறையாமையும், பாலாமையும் தோலாமைகள் (SKIN TOR-TOISES) எனவும் அழைக்கப்படும். காரணம் ஓடுகள் தோற்போர்வை கொண்டதாய் இருக் கும். குட்டிகள், முதுகுப்புறம் இளம் ஒலிவ் - பச்சையாகவும், வயிற்றுப்புறம் பாலாடை மஞ்சளாகவும் இருக்கும். ஆரைக்குரிய கோடு களும் இருக்கும். நிறைவுடலியில் கோடுகள்


(XV ஆம் பக்கம் பார்க்க)




காட்டு ஆமை அல்லது காட்டுப்பெட்டி ஆமை (TESTUDO ELEGANS/GEOCHELONE ELEGANS)



அழுங்காமை அல்லது சீப்பு ஆமை (ERETMOCHELYS IMBRICATA - CHELONE IMBRICATA அல்லது CHELONIA IMBRICATA எனவும் அழைக்கப்பட்டது.)



பெருந்தலை ஆமை அல்லது நாயாமை அல்லது கிளிச்சொண்டன் ஆமை (CARETTA CARETTA GIGAS)



சித்தாமை (LEPIDOCHELYS OLIVACEA OLIVACEA)




தோணி ஆமை அல்லது ஏழுவரி ஆமை (DERMOCH ELYS CORIACEA)






(b)



(c)



(d)

...ட்சிகள். (a) வளை தோண்டுகிறது. (b) முட்டையிடுகின்றது (c) வளையை மூடுகின்றது. (d) முட்டைகள்:- ...னவை கீழே.

# மனிதனைத் தாக்கும்

## தொற்று நோய்கள்

எமது உடலின் வேறு பகுதிகளில் ஏற்படும் தொற்று நோய்கள் போன்று பால் உறுப்புக்களிலும் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலனவை பாலியல் தொடர்புகள் மூலமே தொற்றுகின்றன. உதாரணம்:-

* வெட்டைநோய் (Gonorrhoea)
* எயிட்ஸ் (AIDS)
* மேக நோய் (Syphilis)
* ரைக்கோமோனாஸ் தொற்று (Trichomonas infection)
* பாலுறுப்புக்களில் வாட்ஸ் (Genital warts)
* பாத்தோலினின் சுரப்பி அழர்ச்சி (Bartholinitis)
* கண்டிடியாசிஸ் தொற்று (Vaginal thrush)
* யோனித் துவாரத்தைச் சூழக் கடி ஏற்படல் (Pruritus valvae)

### வெட்டை நோய்

இத்தொற்றுதல் ஆண்களில் குறிப்பிட்டது போன்றே பெண்களிலும் நிகழ்கின்றது. அதன் குணங்குறிகள் வருமாறு:-

* சிறுநீர் கழிக்கும் போது எரிவு.
* சிறுநீர் வழியைச் சூழ்ந்து வீக்கம் காணப்படுவதுடன் அது செந்நிறமாகவும் காணப்படும்.
* யோனிமடல் வீக்கமடைவதுடன் செந்நிறமாகக் காணப்படும்.
* வெண்ணிறத் திரவம் அதிகளவில் வெளியேறுதல்.
* ஆண்களில் குறிப்பிட்டது போன்று பொதுவான குணங்குறிகளும் இங்கும் காணப்படும்.

உரிய நேரத்தில் இந்நோய்க்கு சிகிச்சையளிக்காதுவிடின் இந்நோய் பின்வரும் சிக்கல்களுக்கு வழி அமைக்கும்:-

**(அ) பாத்தோலியின் சுரப்பி வீக்கமடைதல்** (Bartholinitis)

இங்கு யோனிவாயிலுக்கு அருகில் காணப்படும் இச்சுரப்புக்கள் இந்நோயக் கிருமியின் தொற்றுக்குள்ளாகி வீக்கமடைகின்றன. இதனால் நோ ஏற்படுவதுடன் சிலவேளைகளில் இதில் சீழ்(pus) காணப்படும். இதனால் நோயாளி நடப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவார்.

**(ஆ) பலோப்பியன்குழாய் அழற்சி** (Sulpingitis):-

பலோப்பியன் குழாயில் தொற்று ஏற்படுவதனால் அது வீக்கமடைகின்றது. இந்நிலையில் கருத்தரித்தலில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

## பாகம் IV

இவற்றைவிட மாதவிடாய ஒழுங்கீனங்கள், உடலுறவின் போது யோனிவழியில் நோ காணப்படல், வயிற்றுநோ ஏற்படல், குருதி தொற்றுக்குள்ளாதல்(Septicemia) போன்றனவும் ஏற்படும்.



பெருபிற்சொண்டில் காணப்படும் புண் (Chancre)

### மேகநோய்

இந்நோய் ஆண்களில் குறிப்பிட்டது போன்றே பெண்களிலும் தொற்றுகின்றது. இது பின்வரும் பல நிலைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

I. பெறப்பட்ட மேகநோய் (Acquired Syphilis)

II. பிறப்பின் போதான மேக நோய் (Congenital Syphilis)

**பெறப்பட்ட மேகநோய்:-**

இங்கு இந்நோயின் பாதிப்புக்கள், குணங்குறிகள் 2 நிலைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

* முந்தியநில்ல (Early stage):-

இது இரண்டு நிலைகளைக் கொண்டது.

அவை:-

1) முதலாம்நிலை (Primary stage)
2) இரண்டாம்நிலை (Secondary stage)

* பிந்திய நிலை (Late stage) இது Tertiary stage எனவும் அழைக்கப்படுவதுண்டு.

பெண்களைப் பொறுத்த அளவில், அவர்களின் மேக நோய்க்குரிய குணங்குறிகள் ஆண்களில் உள்ளவாறே காணப்படுகின்றது. இருப்பினும் பெறப்பட்ட மேகநோயின் முந்திய நிலையின் முதலாம் நிலையில் உருவாகும் புண் (Chanere) பெண்களின் வெளிப்புற யோனிமடல், உட்புற யோனிமடல் மற்றும் கருப்பைக் கழுத்துப் போன்ற பகுதிகளில் ஏற்படுகின்றது. மற்றைய எல்லா நிலைகளும் ஆண்களில் குறிப்பிட்டது போன்றதாகவே காணப்படும்.

**II.பிறப்பின் போதே வரும் மேகநோய்:-**

மேகநோய் தொற்றுக்குள்ளான ஒரு பெண், இந்நோய் தொற்றி 2 வருட காலப்பகுதிக்குள் கர்ப்பம் தரித்தால் இந்நோய்க்கிருமி சிசுவினையும் தாக்குகின்றது. சில சந்தர்ப்பங்களில் 4 அல்லது 6 வருடங்களுக்குப் பின்பு கருத்தரித்தாலும் கூட இந்நோய் சிசுவிற்கு தொற்ற வாய்ப்புண்டு.

ஆகவே இந்நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு மேகநோயுள்ள ஒரு கர்ப்பவதிப் பெண், தனக்கு குழந்தை உருவாகி 16 வார காலப் பகுதிக்குள் இந்நோய்க்குரிய சிகிச்சையினைப் பெற்றுதல் வேண்டும். இதனால் சிசுவிற்கு நோய்த் தொற்றலை ஓரளவு தடுக்கலாம். இவ்வாறு சிகிச்சையளிக்காத நிலையில் குழந்தை இறந்தே பிறக்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். மேலே குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கு பின்னர் சிகிச்சையளிக்கப்படின் குழந்தை சில வேளைகளில் இறக்காமல் நோய்த் தொற்றுடைய ஒரு சிசுவாகப் பிறக்கின்றது.

மேகநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தை பின்வரும் குணங்குறிகளைக் கொண்டிருக்கும்.

* உடம்பில் முக்கியமாக உள்ளங்கால், உள்ளங்கை என்பவற்றில் கொப்புளங்கள் காணப்படும்.
* வளர்ச்சி குன்றிக்காணப்படும்.
* உடலின் ஈரலிப்பான பகுதிகளான குதவாயிலை அண்மித்த பகுதிகள், வாய், இனப்பெருக்க உறுப்புக்கள் என்பவற்றிலும் கொப்புளங்கள் காணப்படும்.
* ஈரல், மண்ணீரல் பாதிக்கப்படுவதனால் வயிறு வீக்கமடையும்.
* மூளை வளர்ச்சி குன்றிக் காணப்படும்.

### (இ) வாட்ஸ் (Genital warts)

பெண்ணில் இந்நோயின் தாக்கங்கள் (வளர்ச்சிகள்) பின்வரும் பகுதிகளில் ஏற்படுகின்றது.

* வெளிப்புற யோனிப் பகுதி
* உட்புற யோனிச் சுவர்
* கருப்பைக் கழுத்து
* குதவழி
* குதவழியைச் சூழவுள்ள பகுதி.

இது ஆண்களில் குறிப்பிட்டது போன்று அதே இயல்புகளை பெண்களிலும் காட்டும். இருப்பினும் பெண்களில் இந்நோய்க்கு காரணியான Papilloma வைரசின் வளர்ச்சி பின்வரும் காரணிகளால் ஊக்குவிக்கப்படுகின்றது.

(1) வெள்ளைப்படல் (Vaginal discharge)
(2) குதவழியில் திரவம் வெளியேறல் (Rectal discharge)
(3) கர்ப்பம்
(4) சுய சுகாதாரமின்மை.

இங்கு குறிப்பிட்ட இடங்களில் நோய்கள் காணப்படின் வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெறுதல் நன்று.

### ரைக்கோமோனாஸ் தொற்று:-

Tricoomonas Vaginalis எனும் ஒரு கல நுண்ணங்கியினால் (Protozoa) ஏற்படுகின்றது. இத்தொற்று நோயானது மனிதனில் கூடியளவில் பாலியற் செயற்பாடுகள் (Sexual activity) நடைபெறும் காலப்பகுதியிலேயே - அதாவது 18 - 35 வயது எல்லைக்குள் - பொதுவாகத் தொற்றுகின்றது.

இந்நோய் பிரதானமாக பாலியல் தொடர்புகளினால் தொற்றுகின்ற போதிலும் நோயாளியின் உடை, போர்வை என்பன மூலமாகவும் தொற்ற வாய்ப்புள்ளது.

இதன் குணங்குறிகள்:-

* வெள்ளைபடுதல் - இது மெல்லிய மஞ்சள் நிறமுடையதாகவும் துர்நாற்றமுடையதாகவும் காணப்படும்.
* யோனிவழியில் எரிவு, நோ ஏற்படுதல்.
* சிறுநீர் கழிக்கும்போது எரிவு காணப்படல்.
* உடலுறவின் போது யோனிவழியில் நோ ஏற்படல்.

இவ்வாறான குணங்குறிகள் காணப்படின் சிகிச்சை பெறல் நன்று.

**வெள்ளைபடுதல்:-**

வெள்ளைபடுதல்(Whitish Vaginal discharge) என்பது ஒரு நோயின் அறிகுறியா அல்லது சாதாரண



யோனிவழியை சூழவுள்ள பகுதியில் வாட்ஸ்.

உடற்றொழிற் செயற்பாடுகளின் போது ஏற்படும் நிகழ்வா எனும் சந்தேகம் எம்மிடையே அனேகமாகப் பெண்களுக்கு ஏற்படுவதுண்டு. இது உண்மையில் ஒரு நோயின் அறிகுறியாகவும் நிகழலாம்; அல்லது சாதாரண உடற்றொழிற்பாட்டின் போதும் ஏற்படலாம்.

வெள்ளைபடல் ஏற்படும் சாதாரண உடற்றொழில் நிலைகளாவன:-

I. மாதவிடாய் நிகழ்வதற்கு சிறிது நாள்களுக்கு முன்.

II. சூல் இடலின் போது (Ovulation, மாதவிடாய் சக்கரத்தின் 14 நாள்கள்)

III. கர்ப்பத்தடைச் சாதனங்கள் பாவிப்பவர்களில்.

இங்கு காணப்படும் வெள்ளைபடல் ஒருநோய்க்குரியதென கவலை கொள்ளத் தேவையில்லை.

**செ.லோகேந்திரராஜ்**
**லோ.ராஜுகி**
(மருத்துவ மாணவர்கள்)

இருப்பினும் சிலரில் நீண்டகாலமாக வெள்ளைபடல் காணப்படுவதுடன் வித்தியாசமான மணம், நிறம் என்பவற்றையும் கொண்டு அது காணப்படும். அத்துடன் யோனிவாசலில் கடி, எரிவு என்பனவும் காணப்படுமாயின் இது ஒரு தொற்று நோய்க்குரிய அறிகுறியாகும். இந்நிலையில் அப்பெண் வைத்தியரை நாடிச் சிகிச்சை பெறுதல் நன்று. பெண்களில் இன்னுமொரு வகையான தொற்று நோயினால் சிறுநீர் கழித்தலின்போது எரிவு, நோ, வாந்தி, அடிக்கடி சலம் கழித்தல் போன்ற குணங்குறிகள் ஏற்படுகின்றன. இது சனனி உறுப்பில் ஏற்படும் தொற்றினால் உருவாகும் குணங்குறிகளை ஒத்துக் காணப்பட்டாலும் இது ஒரு சிறுநீர்த் தொகுதி அழற்சி(Urinary tract infection) ஆகும். ஆகவே இதற்கும் வைத்தியரிடம் சிகிச்சை பெறல்வேண்டும். (தொடரும்)

# பால் உறுப்பு நோய்கள்

---

# என் பிரிய பூமிக்காக...

19 சியாரா தலைமையகத்தின் அழைப்பின் பேரில் திரும்பிச் சென்று ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டிருந்தது. அவன் பிரிவு ஏற்படுத்திய வெறுமையை மறப்பதற்கு ஒருவாரம் போதாது தான்.

இவானும் நிக்கலசும் சிசிலியாவும் காட்டின் அடர்ந்த பகுதிகளில் நாசகாரிகளின் நிரந்தரத் தொடர்பிடத்தைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தனர். தினமும் அதிகாலையில் ஆரம்பிக்கும் அவர்கள் பயணம் மாலை இருள் கவியும்வரை தொடரும். ஆனாலும் அடர்ந்து இருண்டிருந்த காடு என்னவோ எந்த இரகசியத்தையும் வெளிப்படுத்தத் தயாரில்லாதது போலப் பிரமாண்டமானதாய் விரிந்திருந்தது.

கதிர் அலை வீசும் உலோகத் தட்டில் குறிப்பிட்டிருந்த தகவல்களை அடிப்படையாக வைத்து அவர்கள் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது. பசுமையாய், காய்ந்ததாய் இலைகளும் மரங்களும் தவிரக் கண்ணில் எதுவுமே தென்படாமல் ஏறத்தாழப் பத்து நாள்கள் ஓடிவிட்டிருந்தன. உலோகத்தட்டில் குறிப்பிட்டிருந்த பாதையில் முக்கால் பாகத்திலும் அதிகமாய்க் கடந்தாயிற்று.

அன்று காலையில் புறப்படும் போதே சிசிலியாவின் வார்த்தைகள் அவளது நம்பிக்கையின்மையைச் சொல்லின.

"எத்தனை நாள்கள்...! தாவரங்களைத் தவிர எந்த மாற்றமும் உள்ள சூழலையும் காணாமல் எத்தனை நாள்கள் ஓடிவிட்டன...! தென்பட முடியாத ஒன்றைக் குறித்துத்தான் நாம் தேடிக்கொண்டிருக்கின்றோமோ என்று கூடத் தோன்றுகின்றது எனக்கு..."

"ஆம்! நிக்கலஸ், ஒருவேளை எம் கவனத்தைத் திருப்புவதற்காகத் தான் அவர்கள் அவ்வாறான ஓர் உலோகத் தட்டுச் செய்தியை - தவறான ஒரு செய்தியை - எமக்காய் விட்டுச் சென்றிருப்பார்களோ?"

இவானது குரலில் சந்தேகம் தெளிவாய்த் தெரிந்தது.

"இல்லை. தகவல் உண்மையாயினும், பொய்யாயினும் அதிற் குறிக்கப்பட்டுள்ள பாதை முழுவதிலும் நாம் தேடிப்பார்க்கத்தான் வேண்டும்... இப்போது மனம் தளர்ந்து எங்கள் இலக்கினை மாற்றுவதாக இருந்தால் சிலவேளைகளில் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பினை மிக இலகுவாக இழந்துவிடவும் நேரிடலாம்..." நிக்கலசின்வார்த்தைகள் உறுதியாய் ஒலித்தன.

"அநேகமாய் இப்போது நாங்கள் ஆராய்கின்ற பிரதேசம்தானே ஆரம்பம் முதல் எங்கள் சந்தேகத்துக்கு உரியதாய் இருந்து வருகிறது. பூரண ஆய்வு நிறைவேறிவிட்டால் மாத்திரமே அந்தப் பகுதியை எங்கள் கவனத்தில் இருந்து விலக்கி வைக்க முடியும்."

நிக்கலஸ் சொன்னதை அவர்கள் ஆமோதித்தார்கள். உண்மையோ, பொய்யோ என்று தெரியாத உலோகத் தட்டுத் தகவலை ஒதுக்கித் தள்ளி விடவும் முடியாது. தொடர்ந்து முயற்சிப்பதே நல்லது.

ஊர்தி அடர் மரங்களை விலக்கிக் காட்டின் உள்பகுதியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அவர்கள மௌனமாய் வெளியே தெரிந்த சூழலை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். எந்த மாறுதலும இல்லாமல் காடு நீண்டு கொண்டு சென்றது.

மதியப்பொழுது ஆரம்பிக்கின்ற வேளையில அவர்கள அன்று ஆராய வேண்டியிருந்த பகுதிக்கு வந்துவிட்டிருந்தார்கள். அதற்கு மேலே ஊர்தியில் செல்வது பயன்தராது. அவசரமாக இல்லாமல் நின்று நிதானித்து ஆராய்வதற்குக் கால்நடையில் செல்வதுதான் சிறந்தது. ஊர்தியை விட்டிறங்கி நடக்கத் தொடங்கினார்கள்.

"ஊர்தியிலிருந்து அதிக தூரம் சென்றுவிட வேண்டாம்..." நிக்கலஸ் எச்சரிக்கை செய்தான்.



மூவரும் ஊர்தியைச் சுற்றியுள்ள அந்தப் பிரதேசத்தை அவதானித்தபடி நடந்தார்கள். மதியப் பொழுதில் கூடச் சற்று இருண்டிருந்த அந்த அடர்ந்த காடு தன்னுள் எத்தகைய ஆபத்துக்களைஒளித்து வைத்திருக்கிறதோ!

"சிசிலியா, நிக்கலஸ்... இங்கே... இங்கே... ஓடி வாருங்கள்...." இவானின் பதற்றமான குரல் கேட்டுச் சிசிலியாவும் நிக்கலசும் இவான் இருந்த திசை நோக்கி ஓடிவந்தார்கள்.

"என்ன இவான்...?" நிக்கலசின் கேள்விக்கு இவான் மௌனமாய் அவன் முன்னே விரிந்திருந்த நிலத்தைச் சுட்டிக் காட்டினான். அவன் முகத்தில் பரபரப்புத் தெளிவாய்த் தென்பட்டுக் கொண்டிருந்தது.

இவான் சுட்டிக் காட்டிய பகுதியில் நிலத்தை நோக்கியவாறே நிக்கலஸ் கேட்டான்... "என்ன இவான்... இங்கே என்ன...?"

"உற்றுக் கவனி நிக்கலஸ்...!"

நிக்கலஸ் நிலத்தில் மண்டியிட்டு அமர்ந்தான். வெளிப்பார்வைக்குச் சருகுகளால் போர்க்கப்பட்டிருந்த அம்மண்ணின் தோற்றம் இப்போது மிகத் தெரிவாய்த் தெரிந்தது. அங்கே.....

மண்ணில் அழுத்தமாய்ப் படிந்திருந்த வரிவரியான ஊர்திச் சக்கரத்தின் பதிவுகள் தெளிவாய்த் தெரிந்தன.

நிக்கலஸ் எழும்பிச் சுற்றிலும் பார்த்தான். அவன் சந்தேகம் உறுதியாகிவிட்டது. ஊர்தியின் மற்றச் சக்கரங்களுக்கான அடையாளமும் மண்ணில் பதிந்திருந்தன. சிசிலியாவும் அவற்றை அவதானித்தாள்.

"இவான்... இவை ஊர்தியொன்றின் சக்கரங்களின் பதிவுகள் அல்லவா?" நிக்கலஸ் வியப்பாய்ச் சொன்னான்.

"ஆம்..........!"

"நாங்கள் ஒருபோதும் இந்த இடத்துக்கு ஊர்தியில் வந்ததில்லை...!"

"ஆம்! எங்கள் பயணத்தில் இந்த நிலப்பரப்பை இன்றுதான் முதன் முதல் சந்தித்திருக்கின்றோம்...."


"அப்படியானால்....?" சிசிலியாவின் கேள்விக்கு அவர்கள் திரும்பினார்கள்....

"ஆம்! நாங்கள் எதிர்பார்த்து இருக்காத உண்மை ஒன்றைச் சந்

(XVஆம் பக்கம் பார்க்க)

**ச.குமுதினி**
**(சங்கத்தானை)**

# உங்கள் கவிதைகள்



அகிலத்தையே ஆண்டு கொண்டிருக்கும் - உன்
கண்ணீர்த் துளிகளிற்கு
காரணம் என்ன...?
ஓ! ஈழத்து மைந்தர்கள்
தம்முயிர் ஊசலாடும் நேரத்தில் கூட
என்னை மறக்கவில்லையே
என்ற ஆனந்தமோ...!
அன்றி...
காலத்தால் கட்டுண்டு கிடக்கும்
உன் நிலை கண்டு,
என்னால் பரிதாபப்பட
மட்டும் தான் முடிகிறது
என்பதன் வெளிப்பாடோ...?

- அபிஷேகா -
யாழ்ப்பாணம்.

கறுப்புக்கண்ணாடி பஸ்ஸில்
காவலிடப்பட்டு கைதியாக
மாதோட்டம் போய்
கடவுள் வணக்கம் செய்தவரின்
உணர்வலையிது
விடுதலைக்காய்
விலங்கு தெறிக்க வைக்க
ஆயுதத்தின் அவசியத்தை
அகிலேஸ்வரனே காட்டுகிறாரோ?

- பண்ணாக நாரதன்-

குண்டு வீசித் தாக்கியவர்
கொண்டு வந்து போடும் பூமாரி
தேரெரித்த வம்சத்தின் - திருவிழா
நேரடி வர்ணனைகள்...
இவையும் ஒரு புதுப்பாகம்
இந்து மத வரலாற்றில்...!

- கோபி -
நெல்லியடி.

நாமும் கொண்டாடினோம்
சிவராத்திரி
சிறையின் கைதிகளாய்
ஒரு ராத்திரி.
கேதீஸ்வரநாதா!
இது தமிழ்ப்பூமி
ஸ்வதிகம் ஆனாலும்
துப்பாக்கி
சிவலிங்கமும் உதிர்க்குதே
கண்ணீர்
சிதறிய பூக்களும் நம்
இரத்தக் கண்ணீர்!

- த. சாம்பவன் -

பட்டது போதுமென்று ,
உன்னிடம் தஞ்சமடைய வர
நீயும்
முற்றுகையிடப்பட்டு
கண்ணீருடன்...

- லோ. கமலவதனி -
ஓட்டுமடம்.

மாதா ஆலயங்கள் தோறும்
மர்மமாக நடைபெற்றதை - இனி
சிவாலயங்கள் தோறும்
சிவக்கும் இரத்தத்தை எண்ணி
சிவனே
தமிழனுக்காக
தாரையாக்குகிறார் கண்ணீரை!

- சண்விநோ -
கல்வியங்காடு

முள்ளென்ன செய்யும் பெரு நெருப்பை
முத்தமிழைச் சொன்ன வாய்க்கும்
சறுணட்டேர
கள்ளி வளர் கோவில் கேதீச்
சரத்தானைக்
காலில் தளையிட்டோ நான்
வணங்க
மௌள் வரு பாலாவி மேவி உறை
பிறையீசா
கண்நெருப்பும் கைநெருப்பும்
கறைமிடறும் கற்பனையோ?

- கு. துரைராஜன் -
கல்வியங்காடு

அரசியல் மூடர் அடிமைப் படுத்தி
ஆலயம் என்றும் பாராது இன்று
கேவலம் செய்ய விட்டேன் என்றா
கேட்டு நீயும் பூச்சொரிகின்றாய்
அக்கினி அஸ்திரம் கேள் நான்தருவேன்
அடிமை விலங்கு பொடிப் பொடியாகும்
நிமிர்ந்து நில் உன் தீவினை மாளும்

- ராதிரன் -

கைகளில் கனத்த விலங்குகள்
கால்களில் இரும்புச் சங்கிலி
ஆனாலும்......
நீறாகிப் போகவில்லை
நெஞ்சத்து விடுதலை உணர்வுகள்
எம்பெருமானே
நின்பதம் வணங்கி
எழுந்தேன்
வெற்றி நிச்சயம் – இது
வேத சத்தியம்!

- ப.பிறேமலதா -

கல்லாய் இருப்பதனால் தானோ - நீ
கண்ணீர் சிந்துகிறாய்
தமிழனாய்ப் பிறந்ததால் தான் - இந்த
தாழாத கொடுமைகளோ?
நாளும் இங்கு ஏக்க ராத்திரி - அதனால்
தேவையில்லை இனிச் சிவராத்திரி

- என். அனுஷா -
கொக்குவில்.

'வெய்யவினையாயவடியார்
மேலொளித்தருளி
வையத்துறு மலியுங்கடல்
மாதோட்ட நகருக்க'!
உய்ய வழிதேடிக்
கைதியாகவே வந்தோம்!
புனிதச் 'சுவஸ்த்திகம்' பதிக்க
சுடுகலன் தான் கிடைத்ததா?
கொடும் படைத் தடியன்களை
கொதிக்கும் கொப்பரையிலிடுவாய்யா
வுடையப்பனே!.....

- மாருதி -

இராப்பொழுதில்
கீழே நின்ற புலிக்குப் பயந்து
புஷ்பமிட்ட பக்தனவன்
துயர்துடைத்த லிங்கமே!
கையிலுள்ள விலங்குக்குப் பயந்து
புஷ்பமிடும் பக்தனவன்
துயர்துடைக்க மாட்டாயோ?

- த. பூஜி -
கரவெட்டி.

நாதனே!
கண்ணப்பனுக்காய்
அன்றழுத கண் -
தமிழனுக்காய்
இன்றும் அழுகிறது...

- நிசங்கன் -
சுண்டுக்குளி.

கைகளுக்கு விலங்கிட்டு
கால்களுக்கு சுமை பொருத்தி
மெய்களுள்ளே உணர்வொடுக்கி
செய்யவிட்டார் வழிபாட்டை
கடவுளுக்கும் பாதுகாப்பாய்
A.K - 47
இதுதான்
இலங்கையில் ஓடுகின்ற
ஜனநாயக நீரோட்டம்.

- ஆ.ஜென்சன் றொனால்ட் -
ஈச்சமோட்டை.

என்னப்பனே!! இவன்
கண்ணப்பனல்லன்
கண்ணைத் தருவதற்கு,
கையில் விலங்கிடப்பட்ட
கலிகாலத்தமிழன்!!

- லக்ஷி -

பக்தியை சோதிக்க
ரத்தம் சிந்திய சிவன்
இன்று..
கலியுக கண்ணப்பனின்
கதி கண்டு
கண்ணீர் வடிப்பது
எதைச் சோதிக்க.?

- குகன் -
கச்சாய்.

இந்த நுற்றாண்டின்
யுத்த தர்மத்தின்...
ஒற்றுமைச் சின்னங்கள் இவை?

- சி. இன்பராஜ் -
மீசாலை மேற்கு

சுவஸ்திகா சக்கரம்
ஹிட்லருக்கு மட்டுமல்ல;
ஜனநாயக நாடுகளின்
துப்பாக்கிக் கலாசார சின்னமும் தான்.


- எல். வதனி -
யாழ். பல்கலைக்கழகம்.

கட்டிய காலும்
கையில் துவக்கும்
சுட்டிய துவக்கின்
சுடர் முனையில்
ஒட்டிய லிங்கமும்
ஒரு கண்ணீருடன்
வெட்டியாய் வாழ்வும்
வெறும் வணக்கமும் - கடவுளுக்கே!

- ராஜ்குமார் -

# மௌன மொழி

## மௌன மொழி - 80



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.
இதனை வரைந்தவர் மாணியூர் ரட்ணேஸ்.

நடனசங்கீதமும் - அரிச்சந்திரா
மயான காண்டமும்
ஆறு கோஷ்டி மேளமும் - ஆறு
திருமுருகு பேச்சும் - சிவ
இராத்திரியில் விழித்திருந்து
பிடித்திருந்த விரதமது போச்சு
ஊரடங்கு அமுலாச்சு!

- முத்துமாரி -

பாலாவிக் கரையில்
பட்ட துன்பம் கண்டு
நீயும் தளர்ந்தனையோ?
தமிழுரில் தலங்கொண்டதால்
உண்டான தன்மானத்தால்
கனலேந்தி விரைந்து வா,
இந் நிலையினைத் துடைத்தெறிவோம்!

- ப்ரசன்னன் -

கலங்காதே...
கேதீஸ்வரா - உன்
சுற்றுப்புறத்தை
சுத்தமாக்கும் வரை
அடிக்கின்ற அலைகள்
என்றுமே ஓயாது!

- பிரசன்னா -
கந்தர்மடம்.

செருக்கர் சுடுகலன்கள் உன்
சந்நிதியைச் சூழ்ந்திருக்க
சற்றும் விலகமுடியாக் காற்கட்டும்
சேர்ந்த கைக்கட்டும்
சுந்தரத் தமிழால் ஓரிரவேனுமுன்
சேவடி தொழமுடியா
சுதந்திரம் அறுநிலை கொண்டோரெம்
சிறுமைத் துயர்கண்டு
சிவலிங்க நாதனுன் நெற்றிக்கண்ணும்
சொரிந்ததோ நீர்த்துளிகள்?

- கவரி -

எம்மால் முடியவில்லை
எதுவுமே இயலவில்லை
அராஜகத்தின் பிடிக்குள் - உன்
தலை போகும் நிலையில்
உன்னால் கூட முடியாதா?
உனக்கும் கூட இயலாதா?

- முகுந்தன் -

இனிமேலும் தாங்க முடியாது
இறைவா எனக்கு நீ
இறப்பைத் தந்துவிடு!
இதற்கு மேல் எனக்கு
இவர் செய்யும் சித்திரவதை
இவ்வுடல் தாங்காது!!

- ந. சிறீதரன் -
கிளிநொச்சி.

பாடல் பெற்ற திருத்தலம்
படைத்தளம் ஆனது.
சுபஸ்ரிகாச் சின்னத்துக்கு
சுடுகலன்கள் அலங்காரம்.
மதச் சுதந்திரம்
மாந்தையிலும் சிறைவைக்கப்பட்டது.
சிவனுக்கே இக்கதி என்றால் - மனிதச்
சீவன்களுக்கு எக்கதியோ?
எல்லாம் (சி)வன் செயலே.

- நயினை இராகுலன் -

கேதீஸ்வரத்தில்
சிவராத்திரி...
பத்திரிகையும் வானொலியும்
பரபரப்பாய்ச் சொன்னது.
கண்களைக் கட்ட பஸ்ஸில்
'கவர்' இட்ட கண்ணாடி
பக்தர்கள் யாவரும்
மௌனியாய் வாய்மூடி...
இறைவா உனக்கே
இதுவென்றால் நீதி...
சிந்திக்க முடியுமா
நிஜமான மீதி..?

- த. தர்மதா -

சிவனே!
ஒவ்வொரு
திருவிளையாடலிலும்
ஜெயித்தவன் நீ!
இப்போது - உன்
நாக்கு நங்கூரம்
போட, கண்கள்
கண்ணீரை வடிக்க
நெற்றிக் கண்ணை மூடி - ஏன்
மௌனமாகிக்;
கொண்டிருக்கிறாய்?

- எம். சுயன் -
கோண்டாவில் வடக்கு.

# எல்லாம் விதிதானோ?

முருகேசர் மயங்கிப் போனார். நின்றவர் 'திடீ'ரென 'தடா'லென விழ அவரைத்தூக்கி படுக்க வைத்து தண்ணீர் தெளித்தார்கள் இருவர்.

"இஞ்சை... ஆரெண்டாலும் சூடா ஒரு 'பிளேண்ரீ' கொண்டாங்கோ"

தூக்கிக் கிடத்தி விட்டு அருகில் நின்ற ஆறுமுகம் படபடத்தார். அவரது பேச்சு அங்கே எடுபட்டதாகத் தெரியவில்லை.

"இங்கினேக்கை என்ன பூராயம் பிடுங்கவே வந்திருக்கிறியள். மனுசன் அறிவு நினைவில்லாமல் கிடக்குது. நீங்களெல்லாரும் உங்கட போக்கில..."

பொரிந்து தள்ளினார். எல்லோரும் நகரத் தொடங்கினார்கள்.

பொழுது நிமிடங்களைக் கரைத்தது. தேநீருடன் வந்த மகளை ஆறுமுகம் ஏறிட்டார்.

"பிள்ளை ... முருகேசண்ணையை வைக்குமா சேர்த்துச் சமையுங்கோ. கொம்மா ஆஸ்பத்திரிக்கு காரில போட்டா. எப்ப வாறாவோ தெரியாது. போ... போய்ச் சமை"

ஆறுமுகம் மகளை அனுப்பி விட்டுமுருகேசரை நிமிர்த்தி தேநீரைப் பருக்கினார். முருகேசரும் எழுந்து அமர்ந்தார்.

'கொஞ்ச நேரம் ஆறி இருக்கச் சொன்னாலும் இயங்கிக் கொண்டிருக்கிற மனுசன். ச்சே... பாவம். ஏன் இந்தச் சோதனையை கடவுள் குடுக்கிறாரோ'. தன் மனதினுள் நினைத்துக் கொண்டார் ஆறுமுகம். முருகேசரின் கண்களில் திரண்டு கன்னங்களில் கோடிட்ட கண்ணீரைக்காண ஆறுமுகத்திற்கு நெஞ்சைப் பிசைந்தது.

"அண்ணை... சும்மா யோசிச்சு மனதைக் குழப்பாதைங்கோ. ஒண்டும் நடக்காது."

ஆறுமுகம் முருகேசரின் முதுகை தடவியபடி ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

"ஆறுமுகம்... பிள்ளைக்கு... என்னவாம்?. ஐயோ... என்ர பிள்ளை.."

வார்த்தைகள் தம்மிடையே இடைவெளிகளை உருவாக்கி வெளித் தள்ளப்பட்டது.

"ஒண்டுமில்லையண்ணை. ஒண்டும் நடவாது. நீங்கள் அமைதியா இருங்கோ"

கலங்காத நெஞ்சத்தையே கலங்க வைத்த பாசத்தை எண்ணி நெகிழ்ந்து போனார் ஆறுமுகம். கைகள் பதற, உதட்டைக் கடித்து வெளிவரத் துடிக்கும் விம்மலை அடக்கி மீண்டும் சுருண்டு கொண்டார் முருகேசர்.

ஆறுமுகத்தின் நினைவு பின்னோக்கி ஓடியது.

"...... ஆறுமுகம்.. வாழ்க்கை பொடியளுக்குத்தான். காலம் முன்னேறிக்கொண்டு இருக்கேக்கை நாங்கள் இப்பவும் ஓடியல் புட்டையும் பனாட்டையும்தான் திறமெண்டு தம் பட்டம் அடிக்கேலாது. அந்தக் காலத்தை பிடிச்சுக் கொண்டு நிக்கிற சனம் குறைவு கண்டியோ. இவள் என்ர பெட்டை ஆரையோ விரும்பிறாளாம். அறிஞ்சவுடன் எனக்கும் கோவம்தான் வந்தது. ஆனால் யோசிச்சுப்பார். தரகர்கொண்டு வந்து ஒரு குறிப்பைத் தந்து 'திறமான பொடியன் குடிவெறியில்லை' அப்படி இப்படிச் சொல்லி பச்சைக்குடிகாரனை தலையில கட்ட வரேக்கை அந்தத் தரகர் சொல்லுறதை நாங்கள் நம்பிறம்தானே. தரகரின்ர அளப்புக்களை நம்பிற அளவுக்கு நாங்கள் பொடியளை நம்பிறேல்லை. ஆனால் நான் அப்பிடியில்லை. எனக்கு என்ர பிள்ளையின்ர சந்தோஷம்தானே முக்கியம். எண்டாலும் கவனமா இருக்க வேணுமெல்லோ. பிறகு பாத்தா அவள் விரும்புறது மச்சான் பொடியனைத்தான். சொந்தத்துக்கை தானே. செய்யட்டேன்." என்றோ முருகேசர் கூறியது ஞாபகம் வர சிலிர்த்துப் போனார்.

"உண்மைதான்" ஆறுமுகத்தின் வாயிலிருந்து வார்த்தை வழுக்கியது. அவரையே அறியாமல் வழுக்கிய வார்த்தைக்கு அர்த்தம் கற்பிக்க அவராலும் முடியவில்லை.

வெளி 'கேற்ற'டியில் மூன்று, நான்கு பெண்கள் ஆஸ்பத்திரியிலிருந்து வரும் முடிவை அறிய காத்துக் கொண்டு நின்றனர்.

"உண்ணாணைக் கமலா... பக்கத்து வீட்டில இருக்கிற உனக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கும். என்ன நடந்தது?"

விடுப்புக்கான வினா விதைக்கப்பட்டது.

"பெட்டை பிரச்சினையில்லாதது. தானுண்டு தன்ரை வேலையுண்டு எண்டு இருந்தது. ஒரேயொரு பெட்டை... தாய் தேப்பனுக்கு நல்ல செல்லம்"

"உதை விடு. பெட்டை ஏன் நித்திரைக் குளிசை போட்டவளெண்டு சொல்லன்?"

"பொறு.. அந்தரப்படாதை சொல்லுறன். அப்ப பெட்டை இப்படி இருக்கேக்கை மச்சான் பொடியன் வந்து வந்து பெட்டையை மருட்டிப் போட்டான்."

"எந்த மச்சான் பொடியன்?"

"உவன் கந்தசாமியின்ர ராகுலன் தான். முந்தி பெரிசா தொடர்பிருக்கேல்லை. பிறகு ஏதோ ஒரு மாதிரி வந்து ஒட்டிட்டான்"

"பிறகு.."

"மருமேன்தானே எண்டு அவையும் விட்டுட்டினம். அவன் இவளைக் கூட்டிக்கொண்டும் திரிஞ்சிருக்கிறான்."

"ஆ... பிறகு"

"பொறு... காரொண்டு வருகுது. என்னவெண்டு பாப்பம்"

அவர்கள் எதிர்பார்த்திருந்த கார்தான். கார் சத்தம் கேட்டதும் முருகேசர் எழுந்து ஓடினார்.

"தம்பி... தம்பி... பிள்ளை... பிள்ளை.. என்ர செல்விக்கு என்னவாம்?. என்னெண்டு சொல்லு!" வந்தவர்களின் கையைப்பிடித்து கேவத் தொடங்கினார்.

"முருகேசண்ணை பிரச்சினையொண்டுமில்லை. ரண்டு, மூண்டு குளிசைதான் செல்வி போட்டவள். அதால பிரச்சினையில்லை சுகமா இருக்கிறாள். கமலமக்கா அவளோட தான் நிற்கிறா"

முருகேசருக்கு காரில் வந்த அயல் வீட்டு தாசன் கூறிக்கொண்டிருந்தபோது, உண்மையை அறிய



ஆறுமுகம் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த மனைவியைக் கூப்பிட்டார்.

"மெய்யேப்பா...என்னவாம்?"

"சும்மா பிலத்துக் கதையாதைங்கோ. பெட்டை எக்கச் சக்கமா நித்திரைக் குளிசையைப் போட்டுட்டு. கொஞ்ச நேரம் பிந்தியிருந்தமெண்டால் போய்ச் சேர்ந்திருக்கும். கொஞ்சம் கஷ்டப்படுத்தித்தான் போட்டுது. இனி உயிருக்குப் பயமில்லையாம். கமலம் அக்காவுக்கு தட்டிப் போடும் போலகிடக்கு. பாவம் மனிசி. ம்...."

கூறிக்கொண்டு வெளியே நடந்தாள்.

"ஆறுமுகம் நான் பிள்ளையைப் பார்க்கோணும்.. வா. போட்டு வருவம்"

இருவரும் காரில் ஏறிக்கொண்டார்கள்.

"மனுசன் பொடிச்சியோட போக மாட்டேனெண்டுடுத்து. அதுவும் நல்லது. போயிருந்தா பொடிச்சி தப்பியிருக்கும். முருகேசர் பொறிஞ்சிருப்பர். இப்ப பெட்டையின்ர உயிருக்குப் பிரச்சினையில்லையெண்டாப் பிறகு பாயிறார்"

யாரோ கூறிக் கொண்டிருக்க கார் மறைந்து கொண்டிருந்தது.

"கமலா... வெள்ளன குறையோட விட்டுட்டாய். பிறகு." பழைய விண்ணாணக் கொட்டுதல்களின் இரண்டாம் பாகம் ஆரம்பமானது.

"அப்ப.. பொடியனோட எங்கையெண்டாலும் போய் வாறவள். இவ்வளத்துக்கும் இந்த விசயம் கந்தசாமி எல்லாருக்கும் தெரியும். அவையும் ஓமெண்டு விட்டுட்டினம்."

"பிறகேன் பிரச்சினை?"

"இனித்தானே பிரச்சினையைப் பற்றிச் சொல்லப்போறேன்..." கூறியவள் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு இரகசியமாக....

"பொடிச்சிக்கு வயித்தில ரண்டு மாதம்.." என்றாள்.

"ஆங்.. பிறகு"

"கந்தசாமியவையைப் போய் முருகேசர் கண்டிருக்கிறார்.."

"ரண்டு பக்கத்துக்கும் விசயம் தெரியும்தானே. பேசாமல் கட்டி வைக்கிறதுதானே"

"ச்சி.. பேய்க்கதை பறையிறாய். அதுகள் புத்தியா அதை இதைச் சொல்லி, பிறகு எப்படியும் கட்டுறது தானே எண்டு நம்பிக்கை வரப் பண்ணி கருவை அழிக்கப்பண்ணிப் போட்டுதுகள்"

"........."

"இப்ப பொடியனுக்கு வேறை எங்கையோ கட்டுற மாதிரி கதை வர முருகேசர் போய் கேட்டிருக்கிறார்..."

"என்னெண்டு?"

ஆஸ்பத்திரியில் செல்வியை குளுக்கோஸ் சகிதம் கண்டு துடித்துப்போனார் முருகேசர். மனைவியின் குமுறல்களுக்கு ஆறுதல் கூற மிகவும் வேதனைக்குரியதாக நகர்ந்தது நேரம். வெளியே வந்தார்.

"ஆறுமுகம்... என்ரை பிள்ளை."

விம்மத் தொடங்கினார். ஆறுமுகம் அவரின் கையை பிடித்துக் கொண்டார்.

"ஆறுமுகம் அண்டைக்கு உவன் கந்தசாமி வீட்டை என்ன நடந்ததெண்டு உனக்குத் தெரியாது" நினைவுகளை மீட்டு வாய் வழியே தள்ளத் தொடங்கினார். அந்தச் சம்பவம் மீண்டும் அங்கே சுழன்றது. அன்று...

"கந்தசாமி... எப்பிடி இருக்கிறியள்?" குசலம் விசாரித்தபடி உள்ளே சென்றார் முருகேசர்.

"வாருங்கோ... வாருங்கோ..." விழுந்தடித்து நடந்தேறியது உபசரிப்பு .

"மெய்யே கந்தசாமி ஒரு தரகர் பொடியனட்டை ராகுலன்ர சாதகக் குறிப்பைக் கண்டனான். ஏன்?"

கந்தசாமி குடும்பம் திகைச்சுப் போனது.

"அது.. அது பொடியனுக்கும் வயசு வந்திட்டுதுதானே. ஒரு நல்ல இடமா பாத்து.."

"என்ன கந்தசாமி விளையாடுறியளே? அப்ப என்ர பிள்ளை. முதலெல்லாம் நீங்கள் சொன்ன சொல்லுகள் பிழைச்சுப் போறதே?" கொஞ்சம் நிதானம் தப்பிக் கதைத்தார் முருகேசர். கதைகள் வளர்ந்தன.

"கதை வேண்டாம் பொடியனுக்கு பத்துலட்சம் சீதனமா குடுப்பியளோ? ஏலுமெண்டால் இப்பவும் கட்டித்தர நான் தயார். ஒண்டுமில்லாமல் போக விட நானென்ன..."

கந்தசாமி கதைக்க முருகேசர் நிதானித்துக் கொண்டார். விடயம் தலைக்கு மேல். 'பத்து லட்சம்' என்ற சம்மட்டி வார்த்தைகள் அவரைப் பயமுறுத்தின. வாய்த்தர்க்கம் வழியாக செல்வியின் வாழ்வு வழுக்கிப் போவதைத் தவிர்க்க எழுந்து நடந்தார்.

பின்பு எத்தனையோ தடவைகள் முயன்றும் அதே பத்துலட்சம் கதை தான்.

நினைவை மீட்டிய முருகேசர் அதைத் தட்டுத் தடுமாறிக் கூறி முடித்தார்.

"முருகேசண்ணை கேக்கிறனெண்டு குறை நினையாதைங்கோ. இது பொடியனுக்கு தெரியுமே?"

"ஆறுமகம் உனக்குத் தெரியுமே என்ர பிள்ளையை லண்டனில இருக்கிற ஒரு பொடியனுக்கு பேசி வந்தது. ஒரேயொரு பெட்டை. எங்கட கண்களுக்கு முன்னால இருக்கட்டன், அதோட மச்சான் பொடியனைத்தானே விரும்பியிருக்கிறாள் எண்டு பத்தையும் பலதையும் யோசிச்சு வேண்டாமெண்டிட்டன்"

முருகேசரின் பழைமை நினைவுகள் அவரைச் சோகத்திற்குள் தள்ளுவதை ஆறுமுகத்தால் தடுக்கமுடியவில்லை.

காலம் நகர்ந்தது. செல்வி வீட்டிற்கு வந்து விட்டாள் முன்போல சுறுசுறுப்பில்லை. பேச்சில்லை. ஒரு கைதி போல தன் வட்டத்தை குறுக்கிக் கொண்டாள். மகளைப்பார்த்து, அவளின் செயற்பாடுகளைப் பார்த்து, அதன் முடக்கத்தைப் பார்த்து ஏங்கித் தவிக்கும் முருகேசருக்கும் கமலத்திற்கும் தினந்தினம் உயிர் குறுக காலம் நகர்ந்தது.

அன்று கந்தசாமியின் வீடு ஆரவாரித்துக் கொண்டிருந்தது. ராகுலனின் திருமண ஏற்பாடுகள் மும்முரமாய் நடந்து கொண்டிருந்தன.

"கலியாணத்துக்கு இரண்டு நாள் கிடக்கு. ஆனால் இண்டைக்கு கலியாண வீடு நடக்கப் போறது போல எல்லோரும் பறக்கிறியள்".

ஏதோ பகிடி விட்டதாக நினைத்து, தானே சிரித்து, சுற்றுமுற்றும் பார்த்து அடங்கிக் கொண்டார் கந்தசாமி. ஆங்காங்கே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போதுதான் அந்த உற்சாகங்களுக்கெல்லாம் வேட்டு வைக்கும் நிகழ்வு கடித வடிவில் வந்து சேர்ந்தது. கந்தசாமி ஓடிச் சென்று கடிதத்தை வாங்கிக் கொண்டார்.

"என்ரை பொடிச்சியிட்டையிருந்து.. அவள் ஜேர்மனியில குடும்பமா இருக்கிறாள். அவளிட்டையிருந்து..."

அங்கு நின்றவர்களுக் கெல்லாம் கடிதத்தைக் காட்டி தன்னைக் குஷிப்படுத்திக் கொண்டு 'ஈஸிச் சேரில்' சரிந்தார்.

கடித வரிகளினூடே கண்கள் பாய்ந்தன. வரிகள் மூளையில் பதிந்த போது உலகம் இருண்டது போன்ற உணர்வு. மீண்டும் அதை வாசித்தார்.

*அப்பா,*

*நலம் கேட்டுக் குசலம் விசாரிக்குமளவிற்கு என் வாழ்வு இன்று இல்லை. தொங்கிக் கொண்டிருப்பது போன்ற உணர்வு. இக்கடிதம் எழுதுவதற்கு முதல் நாள் வரை மகிழ்ச்சியின் உச்சத்தில்தான் இருந்தேன். இன்று சோகத்தின் ஆழத்தில் தவிக்கிறேன்.*

*அப்பா, நான் காதலித்து திருமணம் முடிக்கும் வரை எனது கணவர் தன் வீட்டிலே எத்தனை துன்பங்களுக்கு முகங் கொடுத்தார் என்பது சொல்லித்தீராதது. 'தன் மகனை மாட்டிப்போட்டாள்' என்று மாமி சண்டை பிடித்துப் பேசியது எல்லாம் இன்றும் எனக்கு ஞாபகம். எனினும் வேண்டாதவளாகி குறைபிடிக்க வென இருந்த மாமி இன்று மகிழ்வாக ஏற்றுக்கொண்டு விட்டதும் நீங்கள் அறிந்ததே. ஆனாலும் அபூர்வமாய் குறை சுட்டி கடிதம் போடுவது நிற்கவில்லை. அவற்றை என் கணவர் பெரிதுபடுத்துவதும் இல்லை. ஆனால் இறுதியாக வந்த கடிதத்தினால் என் கணவர் வேறுபட்டு நிற்கிறார். அப்பா, ராகுலன் எனக்குச் சகோதரன். அதைக்கூறவே வெட்கப்படுமளவிற்கு என் நிலை. செல்வி என்ன செய்தாள்? ஏன் அவளை ஏமாற்றினான்? உங்களுக்கும் விடயம் தெரிந்து ஏமாற்றியிருக்கிறீர்கள். உவ்விடம் நிகழ்ந்தது முழுவதும் இங்கே அறிந்து விட்டேன்.*

## பிரகாசன்

*அப்பா, நீங்கள் முருகேசு மாமாவிடம் கூறினீர்களாம் "உன்ரை மேள் இல்லையெண்டால் நாட்டில வேற பெட்டையள் இல்லையோ?" என்று. அதையே என் கணவர் கேட்டிருந்தால் என்கதி என்னவாயிருக்கும்? 'மனைவியைத் தவிர்த்து வேறு பெண்களுடன் உறவுவைத்தவனின், வைத்திருக்கிறவனின் வாழ்வு என்றுமே சந்தோஷமாக இருக்காது' என்று அடிக்கடி கூறுவார் என் கணவர். இன்று குடும்பத்தினரின் இழி செயல் போக்கால் அவருக்கும் எனக்கும் இடையிலே வெளி. இது நிரந்தரமானால் கூட வியப்பதற்கில்லை. இதற்கு தூபம் மாமி போடுகிறா. அவாவில் குறை சொல்ல மாட்டேன். அனைத்திற்கும் காரணம் நீங்கள்தானே. அப்பா, ராகுலனை செல்விக்கே கட்டி வையுங்கள். அதனால் என் வாழ்வின் விரிசல் நீங்கிடும். என் நல்வாழ்வைப் பறித்து விடாதீர்கள்........*

வாரத்தைகள் வழியே கண்கள் ஓடி ஓடி மீண்டன. இருக்கையை விட்டு எழுந்தார்.

"போய் பொம்பிளை வீட்டில் இந்த கலியாணம் நடக்காது எண்டு சொல்லிப்போட்டு வாறன்"

கந்தசாமியின் மனைவி விடயமறிந்து பின்பக்கத்திலிருந்து ஓடி வந்து இடைமறித்தாள்.

"உங்களுக்கென்னவிசரே? நல்ல கொழுத்த சீதனத்தை விடப் போறியளே? ஆரோ கோதாரி விழுவார், கட்டையில போனதுகள் மொட்டைக்கடிதம் போட்டுட்டுதுகள் போல..."

'பளார்'. கந்தசாமியின் கை அவளின் கன்னத்தில் பதிந்தது. கடிதத்தை அவளின் முன் எறிந்தார்

"வாசி.. உன்ரை கூத்தால என்ன நடக்கப்போகுதெண்டதை வாசி. உன்ரை..... எனக்குக் கோவத்தைக் கிண்டாதையடி. எனக்கு என்ரை பெட்டையின்ர வாழ்க்கை முக்கியம்"

சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தார்.

"வாசிச்சுப் போட்டு உன்ரை மேனுட்டையும் குடு. உங்கட பேய்க் கூதால......ம் நான் அதால முருகேசத்தான் வீட்டையும் போட்டு வாறேன்"

கூறிக் கொண்டு நகர்ந்தார். மனம் தலையா? பூவா? என அல்லாடிக் கொண்டிருந்தது. எனினும் அதற்கு சமாதானம் கூறுவதும்போல வாய் முணு முணுத்தது.

"எல்லாம் விதிதான்!"

(யாவும் கற்பனை)

## குறள்வெள்ளம்

விரதம் என்றதும் உண்ணாமை மட்டும் ஞாபகத்திற்கு வரக்கூடாது. உண்ணாது விரதம் இருப்பவர் *நோற்பார* பெரியவர்தான். அதை வள்ளுவரும் ஒப்புக்கொள்கிறார்.

ஆனால் அவர்களைப் பின்தள்ளி முன்னே நிற்கும் தவத்தோர் இவ்வுலகில் பலர் என்கிறார் அவர் மேலும். அத்தகையோரின் தவத்தை கண்ணாலோ கோலத்தாலோ வேடத்தாலோ மதித்து விடமுடியாது.

பிறர் சொல்லத் தகாதன சொல்லும்போது பொறுத்துத் தாங்கி நோற்பவரின் அமைதி ஏனைய தவத்தோரைப் பின்தள்ளி முன்னணிக்கு வருகிறது.

**உண்ணாது நோற்பர் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின் - 0160**

- *அம்பிகைபாகன*

# சோம்பேறிக் கணவரை சுறுசுறுப்பேற்ற என்னவழி?

**கோப்பாய். சற்குணம்.**
நான் சிகரெட் குடிக்கிறேன் என்று மனைவி நெருப்பெடுக்கின்றாளே?
☺ஏன் தானும் குடிக்கப் போகின்றாளா?

**ஊரெழு. பரமேஸ்.**
எல்லாச் சுவாமிகளுக்கும் சித்தி கிட்டுமா?
☺சித்தப்பா உள்ள சுவாமிகளுக்கே சித்தி கிட்டும்!.

**விளான். எஸ்தர்.**
எந்த நேரமும் பெண்களைச் சுற்றிச் சுற்றி வரும் ஆண்களை எப்படி அழைக்கலாம்?



☺செக்கு மாடுகள்!

**இளவாலை. கெல்வின்.**
மறக்க முடியாதவர்கள் யார்?
☺நம்மிடம் கடன் வாங்கியவர்கள்.

**உடுவில். சாந்தினி.**
சில கிழவர்களும் சேட்டை விடுகின்றார்களே?
☺உருவத்தால் கிழவர்; உள்ளத்தால் இளவல்.

**சங்கானை. சரசு.**
வாயைக் கட்டி வயிற்றைக் காட்டிச் சேர்த்ததையெல்லாம் மருமகன் அள்ளிக் கொண்டு போய்விட்டானே....!
☺வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிச் சேர்ப்பதெல்லாம் தாலியைக் கட்டுபவனுக்குக் கொடுக்கத்தானே?

**மிருசுவில். ப. முத்து.**
அலையாத மனம் இருக்கின்றதா?
☺அலை இல்லாத கடல் இருக்கின்றதா?

# பெண் பார்க்கப் போனால் நிறை கேட்பது எதற்காக?

காதல், காமம் - என்ன வேறுபாடு?
☺ஒன்று கட்டு மீறாத ஆறு. மற்றையது அணை கடந்த வெள்ளம்.

**நவாலி. ரா**
என்கணவர் சுத்த சோம்பேறியாக இருக்கின்றாரே? சுறுசுறுப்பு ஏற்ற என்ன வழி?
☺சுத்தமாக இருந்தால் சோம்பேறியாகத்தான் இருப்பார். சுத்தமாக இருக்க ஏன் விடுகின்றீர்?

**வேலணை. சூடாமணி.**
பெண் பார்க்கப் போன என்னைச் பெண் வீட்டார் நிறை கேட்கின்றார்களே?



☺தராசில் கவனமாக இருக்கின்றார்கள் போலும்!

**மானிப்பாய். டிலக்ஷி.**
'பெண் புத்தி பின் புத்தி' - என்பது ஏன்?
☺சில பெண்கள் பின் விளைவுகள் புரியாமல் கல்யாணத்துக்கு முன் 'விஸா' கொடுப்பதால்!

**நுணாவில். அ. இந்திரன்.**
கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாதாமே! ஏன்?
☺கல்லடிக்கு மருந்துண்டு; கண்ணடிக்கு மருந்து இல்லை.

**நெடுங்குளம். அ.விந்தன்.**
திருமணமான புதிதில் மணமக்கள் கலகலப்பாக இருக்கின்றார்களே?
☺பல இடங்களில் மூன்று மாதம் போக கலகலப்பு கைகலப்பாகி விடுகின்றதே!

**நெல்லியடி. சுரேன்.**
என் காதலி ஒரு டாக்டரைச் சந்தித்ததும் இப்போது கட்சி மாறப் பார்க்கின்றாள். அவளை எப்படித் திருத்துவது?
☺தின்மும் ஒரு அப்பிள் கொடுத்துப் பாரும். 'Apple a day keeps the doctor away'

**அளவெட்டி. கிருத்திகா.**
கணவனைக் கையில் போட ஒரு மந்திரம் சொல்லுமேன்...?
☺இருக்கவே இருக்கின்றது தலையணை மந்திரம்.

**பளை. எஸ். கங்கை.**
பெண்களின் சிறந்த ஆயுதம் எது? கண்ணீரா? புன்னகையா?



☺அசட்டுப் பெண் - கண்ணீர்;
சாமர்த்தியப் பெண் - புன்னகை;
துணிச்சல் பெண் - கால் செருப்பு!

**நீராவிடி. குமரி.**
காதலனுக்கு முத்தம் கொடுப்பது தவறா?
☺முத்தத்துடன் 'முற்றும்' புள்ளி வைத்தால் தப்பில்லை; முற்றிலும் கொடுத்தால் தப்பு!.

**சாவகச்சேரி. ம. ரமேஷ்.**
முதலிரவில் முற்றும் அனுபவித்தவர்கள் உண்டா?
☺'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்!'

**கந்தர்மடம். ப. வரதன்.**
கணவனின் தலையாய கடமை எது?
☺கைப்பிடித்தவளைத் திருப்திப்படுத்துவது!

**கந்தரோடை. விஜயா.**
பல இடங்களில் மேயும் என் அத்தானுக்கு மூக்கணாங்கயிறு போடுவது எப்படி?
☺யானைக்குக் கோவணம் கட்டும் முயற்சி இது!

**விளான். ந. சங்கரன்.**
'காதல் தெய்வீகமானது' என்கின்றார்களே. உண்மையா?
☺உண்மைதான். இப்போதெல்லாம் இலகுவில் ஏமாற்றுவதற்கு தெய்வமும் தெய்வீகமும்தானே கைகொடுக்கின்றன.

**உடுவில். எ. ஜோன்சன்.**
நடிகைகளை நட்சத்திரம் என அழைப்பதேன்?
☺இரவில் ஜொலிப்பதால்!

# பல இடங்களில் மேய்பவருக்கு மூக்கணாங்கயிறு போடலாமா?

**நவாலி. மதுரன்.**
'பெண் புத்தி பின் புத்தி' என்றால் 'ஆண் புத்தி....'
☺'சாண்' புத்தி!

**குருநகர். ஜி. டினேஷ்.**
ஒரு புத்திசாலி எப்போது முட்டாளாகின்றான்?



☺முட்டாளின் கேள்விக்குப் பதில் சொல்லும் போது!

**தாவடி. கு.விசு.**
மஞ்சள் பத்திரிகையில் செய்தி மஞ்சளாக இருக்குமா? நீலப் படத்தில் எல்லாம் நீலமாகத் தெரியுமா?
☺இல்லை. எல்லாமே 'பச்சை' ஆக இருக்கும்.

**கரவெட்டி. இ. வாசுகி.**
மினி பஸ்ஸில் வலம் வரும் 'இடி' ராஜாக்களைத் திருத்த வழி..?
☺பஸ்ஸில் வரும் நாலு 'தடி' ராஜாக்கள் 'அடி' ராஜாக்களாக மாறவேண்டும்!

**நாவற்குழி. கே. தாசன்.**
மனைவிதான் உலக அழகி, என்கின்றானே எனது நண்பன்...!
☺அது சரி. அது யாருடைய மனைவி என்பதையும் தெளிவாகக் கேட்டுப் பாருங்கள்.

# வித்துவான் பதில்கள்

**அராலி. கே. மகேந்திரன்.**
அடங்கியிருந்த என் மகள் பருவம் வந்ததும் துள்ளிக் குதித்து ஊர்சுற்றத் தொடங்கிவிட்டாளே?
☺நண்டு கொழுத்தால் வளையில் தங்காது!

**அல்வாய். உஷா.**
என்னை ஒருவன் சுற்றிச் சுற்றித் திரிகின்றானே...!



☺காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது. கவனம்!


**ஆவரங்கால். புருஸ்.**
அழகு, அறிவு, திறமை உள்ள ஒருவர் என்னை விரும்புகின்றாரே...!
☺அவர் உம்மை எதிர்பார்ப்பது சின்ன வீட்டுக்கா அல்லது பெரிய வீட்டுக்கா என்பதை முதலில் உறுதி செய்யும்!

**அளவெட்டி. நக்கீரன்.**
கவிஞர்கள் 'பெண்களின் பாதம் மலர் போன்று மிக மென்மையானது' என்கின்றார்களே?
☺ஆனால் அவர்களின் பாதங்களில் உள்ள செருப்பு மிக வன்மையானதாக உள்ளதே!

**மல்லாகம். திருமதி.ஹரி.**
கல்லாதவர்களைக் கண்டு காமுறுபவர்கள் உள்ளனரா?
☺கல்வி விடயத்தில் இல்லை.
கலவி விடயத்தில் உண்டு.

**ஏழாலை. ஈஸ்வரன்.**
ஒரு பெண்ணின் உடைமை எது? கடமை எது?
☺உடைமை - பெண்மை; அதைப் பேணுவது கடமை.

**நவாலி. ரதீபன்**
நீர் ஆலயம் ஒன்றில் பூஜை செய்யக் கனவு கண்டேன். உண்மையா?



☺அது கனவு அல்ல. நனவு. நிஜம். வித்துவாட்டி அம்மையார் ஆலயத்தில்!

**கரையூர். பஞ்சன்.**
தமிழக நடிகை ஒருத்தி 'ஓட்டோகிராபில்' கையொப்பம் இடுவதற்கு மறுக்கின்றாராமே...!



☺பல நடிகைகளுக்கு பெருவிரல் அடையாளம் தான் வைக்கத் தெரியும். அந்த ரகமாக இருக்கும்.

**மல்லாகம். மனோ.**
எல்லாவற்றையும் கலைக் கண்ணுடன் பார்த்தால் என்னாகும்?
☺பல சமயங்களில் கலைபட வேண்டி வரும்.

**சுன்னாகம். ஜெகதீஸ்.**
பொறுத்திருத்தல், பொங்கியெழல் - இந்த இரண்டில் எது அதிகப் பயன் தரும்?
☺பொங்கி எழுந்தால் எப்படியும் அடங்கித்தானே ஆக வேண்டும்? வீட்டில் பொறுத்துப் போதல் நன்மை. நாட்டில் பொங்கியெழுந்தால்தான் நல்லம்.

**மானிப்பாய். க.தீபன்.**
காதலிக்க ஏற்ற வயது எது?
☺நெல்சன் மண்டேலாவிடம் கேட்டால் நல்ல பதில் தருவார்.

**யாழ்.நகர். பி.சிவா.**
ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலைக்கு வரும்படி இளம் பெண்களை தனியார் நிறுவனங்கள் வற்புறுத்துகின்றனவே?
☺தனியார் நிறுவனம் என்றால் தப்பில்லை; தனியாள் நிறுவனம் என்றால்தான் தப்பு!

**நல்லூர். பிரகாஷ்.**
திருமணம் செய்பவருக்கு என்ன கலை தெரிந்திருக்க வேண்டும்?
☺சொல்லித் தெரிவதல்ல அக்கலை!

**விளான். கனகு.**
அழகிலும் செயற்கை உண்டா?
☺பெருத்ததெல்லாம் இளநீர் ஆகுமா?

## இவ்வார ஜோக்

அந்த டாக்டர் வேலை முடிந்து களைப்புடன் வீட்டுக்குத் திரும்பினார். மனைவி வரவேற்றாள். வந்தவர் சொன்னார்:-

"இன்று ஒரு பிரேத பரிசோதனை செய்தேன். கட்டுமஸ்தான ஆண். பாவம் இறந்துவிட்டார். அவரின் இடுப்புக்குக் கொஞ்சம் கீழே மூன்று மச்சங்கள் இருந்தன. ஒவ்வொன்றும் நட்சத்திரம் மாதிரி வெவ்வேறு மாதிரியான மச்சங்கள். பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருந்தது!"

இதனை செவிமடுத்த மனைவி தன்னை மறந்த நிலையில் கேட்டாள்.

"ஐயோ! சுப்பிரமணியத்தார் செத்துப் போட்டாரே?"

# புத்தர்

"நேற்று என்னை ஒருவன் அவமானமாகப் பேசிவிட்டான், சார்.... என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை... இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்று சொல்லி அவர் வருத்தப்பட்டார்.

இது அவருக்கு மட்டும் ஏற்படும் அனுபவம் இல்லை!

எல்லோருக்கும் எப்போதாவது ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் அவமதிப்பு ஏற்படத்தான் செய்கிறது.

அவமதிப்பு ஏற்பட்டால் - உடனே நாம்தான் மனதிற்குள் அதை நினைத்து நினைத்து அவஸ்தைப் படுகிறோம். மகான்களெல்லாம் அப்படி அவஸ்தைப்படுவதில்லை....! அவமதிப்புக்களை அவர்கள் எடுத்துக் கொள்ளும் விதமே தனி!

புத்தர் ஒரு சமயம் ஒரு கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அந்த ஊர் மக்கள் அவரைப்பற்றி ரொம்பவும் கன்னாபின்னா என்று பேசியிருக்கிறார்கள்... திட்டியிருக்கிறார்கள்... அவமதித்திருக்கிறார்கள்.

அவர்கள் சொன்னதையெல்லாம் மிகவும் பொறுமையாக புத்தர் கேட்டுக்கொண்டிருந்தார்.


அதன்பிறகு அவர் அவர்களைப் பார்த்துக் கூறினார்:-

"நீங்கள் இன்னும் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? ஏனென்றால், நான் இப்போது அடுத்த கிராமத்துக்குப் போக வேண்டியிருக்கிறது... குறிப்பிட்ட நேரத்தில் நான் அங்கே போய்ச் சேரவேண்டும். அங்கே எனக்காகப் பலர் காத்துக் கொண்டிருப்பார்கள்... நீங்கள் இன்னும் ஏதாவது என்னிடம் சொல்ல வேண்டும் என்று விரும்பினால், நான் இந்த வழியாக மறுபடியும் வரும் போது அதற்காக நேரம் ஒதுக்குகிறேன்... அந்த சமயத்தில் நீங்கள் வந்து சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லுங்கள்!"

புத்தர் அப்படிச் சொன்னதைக் கேட்டதும்... அந்த ஊர் மக்களுக்கு ஒரே ஆச்சரியம்!

'என்ன இது? நாம் இவரை இவ்வளவு திட்டிக்கொண்டிருக்கிறோம்! ஆனால் இவரோ இப்படிப் பதில் சொல்கிறாரே!' என்று யோசித்தார்கள்.

அதை அவரிடமே கேட்டார்கள்-



"என்னங்க இது...? நாங்கள் ஏதோ ஒன்றை உங்களிடம் சொல்லிக்கொண்டிருக்கவில்லை... உங்களை அவமானப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறோம்?" என்றார்கள்.

புத்தர் புன்சிரிப்புடன், "அது... உங்களுக்குள்ள சுதந்திரம்... ஆனால் அதை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் எனக்குள்ள சுதந்திரம். இப்போது அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை" என்றார்.

கிராமத்து மக்கள் அவரை வியப்போடு பார்த்தார்கள்.

புத்தர் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தார்:-

"இதோ பாருங்கள்... உங்கள் கிராமத்துக்கு வருவதற்கு முன்பு நான் இன்னொரு கிராமம் வழியாக நடந்து வந்துகொண்டிருந்தேன்... அந்த ஊர் ஜனங்கள் எனக்கு இனிப்புகளையெல்லாம் கொண்டு வந்து கொடுத்தார்கள். 'உங்கள் அன்புக்கு நன்றி... நான் இனிப்பு சாப்பிடுவதில்லை. அதனால் எனக்கு இனிப்புகள் வேண்டாம்!' என்று அவர்களிடம் கூறினேன். அதன் பிறகு அவர்கள் அந்த இனிப்புகளை என்ன செய்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று வினவினார்.

அதற்கு அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர், "என்ன செய்திருப்பார்கள்..? அவர்கள் அதைத் திரும்பவும் அவரவர்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போயிருப்பார்கள்!" என்று பதில் கூறினார்.

"அதையேதான் இப்போது நீங்களும் செய்யப் போகிறீர்கள்! எனக்கு நீங்கள் ஏற்படுத்திய அவமானங்களை இப்போது நீங்கள் உங்கள் வீடுகளுக்கு திரும்பவும் எடுத்துக்கொண்டு போகவேண்டியதுதான். ஏனென்றால், நான் உங்களுடைய அவமதிப்புகளை ஏற்றுக் கொள்ளவில்லை! அதனால் வேறு வழியேயில்லை... நீங்கள் எடுத்துக் கொண்டுதான் போக வேண்டும்!" என்றார் புத்தபிரான்.

பிறகுதான் அந்தக் கிராமத்து மக்கள் இதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார்களாம்.

அவமதிப்புகளை பெரியவர்கள் எதிர்கொண்ட முறை இதுதான் என்பதைப் புரிந்து கொள்வோம்!

*- தென்கச்சி சுவாமிநாதன் -*



# அறிவாளியின் செயல்!

ஓர் இளம் பிரமச்சாரி இருந்தான். அதிகப் புத்திசாலி. தான் புத்திசாலி என்பதும் அவனுக்குத் தெரியும். தான் பலப் பல திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். எல்லோரும் தன்னைப் பாராட்ட வேண்டும் என்று அவன் விரும்பினான்.

ஆகவே அவன் நாடு நாடாகச் சுற்றினான்.

அம்பு செய்யும் ஒருவனிடமிருந்து அம்பு செய்யக் கற்றுக்கொண்டான்.

பிறகு கப்பல் கட்டவும், கப்பல் ஓட்டவும் கற்றுக்கொண்டான்.

இன்னோர் இடத்தில் வீடு கட்டக் கற்றுக்கொண்டான். வேறு பல இடங்களில் பல்வேறு கைத்திறன்களைக் கற்றுக்கொண்டான். இப்படியாக அவன் பதினாறு நாடுகளுக்குச் சென்றான். பிறகு ஊர் வந்து சேர்ந்தான். "என் அளவு திறமையுடையவன் உலகத்தில் வேறு எவன் இருக்கிறான்?" என்று கொக்கரித்தான்.

பகவான் புத்தர் அவனைக் கண்டார். இதுவரை அவன் கற்றவற்றையெல்லாம்விடச் சிறந்தகலை ஒன்றை அவனுக்குக் கற்பிக்க நினைத்தார். ஒரு வயதான துறவியின் தோற்றத்தோடு கையில் திருவோட்டுடன் இளைஞனிடம் சென்றார்.

"நீங்கள் யார்?" என்று கேட்டான் பிரம்மச்சாரி.

"தன்னுடைய உடலைக் கட்டுப்படுத்தத் தெரிந்த ஒருவன்"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"வில்லாளியால் அம்பை எய்ய முடியும். மீகாமன் கப்பலை நடத்துகின்றான். கட்டடக் கலைஞன் கட்டடங்கள் கட்டுவதை மேற்கொள்கிறான். அறிவாளியோ தன்னை அடக்கியாள்கிறான்" என்று புத்தர் பதிலளித்தார்.

"எந்த வகையில்?"

"அவனைப் புகழும்போது அவன் மனம் சலனமடைவதில்லை. அது போலவே அவனை இகழும்போதும் அவன் மனம் சலனமடைவதில்லை. தர்மத்தின்படி நடப்பதையே அவன் விரும்புகின்றான். அதனால் அவன் அமைதியோடிருக்கின்றான்" என்றார் புத்தர்.

நல்லெண்ணமுடைய மக்களே, நீங்களும் உங்களைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் சுபாவத்தைக் கட்டுப்படுத்த உறுதியான கடிவாளம் தேவைப்பட்டால் அதற்காகக் குறை சொல்லாதீர்கள்.

படிப்படியாக நல்லபடியாக நடந்து கொள்ளப் பழகிக்கொள்கிற துடிப்பும் வேகமும் கொண்ட இளங்குதிரை இடக்குச் செய்தாலும், எப்பொழுதும் அடங்கியே இருக்கின்ற மரக்குதிரையைவிட அதிகப் பயனுடையதல்லவா? மரக்குதிரைக்கு யாரும் கடிவாளம் போடுவதில்லை. அதற்குக் கடிவாளம் போடுவது விளையாட்டிற்குத்தானே?

# பலம்

புயலாடும் தேசத்தில் புதிராக வந்தோம்
புரியாமல் ஆடுகின்றோம்.
புலர்வென்று ஓடினோம்; பொதியென்று கூடினோம்
புழுதிக்குள் தேடுகின்றோம்.
கயிறாரின் கையிலோ... கலையாரின் பையிலோ
'கரு'சாக வாடுகின்றோம்.
கடியாத நாய்கூட கலைத்துக் கடிக்கவும்
கைகட்டிப் பாடுகின்றோம்.

ஒரு ஜன்னல் மூடவே பலஜன்னல் திறபடும்
ஒரு ஞானி கூறிச்சென்றான்.
ஒரு பாதை திறபட... பிறயாவும் அடைபடும்
ஊர் நிலையை யாரு வைத்தான்?
ஒரு கன்னம் அடிவாங்கி மறுகன்னம் உடைபட்டோம்.
உடைத்தோனே மீண்டும் வென்றான்
தருமத்தைச் சூதுகள் கௌவுகிற காலமோ?
உண்மையன் ஊமையானான்!

சூதினைச் சுட்டென்று தர்மத்தை மீட்பாரோ?
சுட ஆர் துணிந்தெழுவரோ?
சுடுகின்ற நாள்மட்டும் சூரரின் கொட்டங்கள்
தொடர்ந்தென்ன துயர்நல்குமோ?
பாதைகள் போர்வையில் தடுமாறுமோ? ஊரை
வெறும் பாதம் நடந்தடையுமோ?
பசிதீர்க்கும் பேய்கள்முன் பலியாகிடாதெந்தப்
பலமெம்மை நிலைநாட்டுமோ?

- அருணன்

# "நின்மெய் கண் குதிரையோ கவ்வியது?"

இன்று மருதக் கலியில் இருந்து ஒரு பாடலை எடுத்துக் கொள்வோம். மகுட வாசகம், இல்லத்தை விட்டுச் சென்று காலம் தாழ்த்தி வந்த கணவன், குதிரை ஏற்றம் பழகி வந்தேன் என்று பொய் புகன்றான். மனைவி குதிரைக்கும் பரத்தைக்கும் பொருந்தத்தக்க சொற்கள் கொண்டு உரையாடியபோது விடுத்த வினாவாகும் இது. ஊடல் என்பது காதல் காரணமாக நிகழும் பிணக்காகும்.

பொதுவாக குதிரையை நாம் அறிந்திருக்கின்றோம். வண்டி இழுக்கும் தொழிலை அது செய்கின்றது. பண்டை நாளில் நிலவிய நால்வகைப் படைகளுள் ஒன்றாகவும் திகழ்கின்றது. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் என்பன அரசகுமாரருக்கும் இளைஞர்களுக்கும் சிறந்த பொழுது போக்காகவும் அமைந்திருந்தது.

தேன் சொட்டும் திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான் –

*'மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த*
*தேவரும் காணாச் சிவபெருமான் – மாவேறி*
*வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க*
*மெய்யகத்தே இன்பம் மிகும்'* என்று பாடுகின்றார். (மா- குதிரை) திருவிளையாடற் புராணம், சிவபிரான் இடதுசாரி, வலதுசாரியாக மிக்க அருமைப்பாட்டுடன் குதிரையை நடத்திக்காட்டிய காட்சியைக் குறிப்பிடுகின்றது. நிற்க.

தேன்கூடு

இனி மருதக் கலிப்பாடலுக்கு வருவோம். இல்லின் ஒருபுறத்தில் கணவன் வந்து நிற்கின்றான். ஆடையின் மடிப்பு கலைந்து இருக்கின்றது. சந்தனப் பூச்சை வியர்வை சிதைத்திருக்கின்றது. தோள்மாலை குலைந்திருக்கின்றது. மனைவி 'அமையாப் பெருவலி உடையீர்! யாங்குச் சென்று ஈங்கு வந்துற்றீர்?' என்று சற்று உயர்ந்த தொனியில் வினவுகின்றாள்.

தலைவன் அடக்கமாக 'நிலமலர்க் கண்ணாய் குதிரை ஊர்ந்து வந்தேன்! அது தான் சற்று......... தாழ்த்தி வந்தேன்' என்ற மொழிகின்றான்.

தலைவி, குதிரைக்கும் பரத்தைக்கும் பொருந்தும் வகையில் ' ஐயனே நீர் ஊர்ந்த குதிரை எது என்பதை நான் நன்கு அறிவேன்' என்கிறாள். பரத்தையின் அணியலங்காரங்களுடன் குதிரையின் அணியலங்காரங்களையும் இணைத்துப் பேசுகிறாள்.

ஆமாம் குதிரையிடத்தே, பிடரிமயிர், தலையாட்டம், கழுத்துவடம், கன்னச்சாமரை, சாட்டை, கடிவாளம், சதங்கை முதலியனவெல்லாம் இருப்பது சர்வசாதாரணம்தான்.

'நீர் ஊர்ந்த பரத்தைக் குதிரையிடத்தே பின்னிக் கொள்வதற்காக 'வெட்டி விடப்பட்ட கூந்தல், சிவந்த குஞ்சி, கட்டுவடம், காதில் புல்லிகை, தொங்கும் சுட்டி, மேலாடை, மேகலை, சிலம்பு முதலியனவெல்லாம் உண்டுதானே!' (புல்லிகை – ஒருவகை அணி)

'அந்தப் பரத்தைக் குதிரை மிசைத்தான் ஊர்ந்தீர். தளர்ந்து விட்டீர்! பாவம்! நல்ல குதிரைச் சேவகன்!' என்றெல்லாம் பரிகசிக்கிறாள்.

'ஐயனே, அந்தக் குதிரை உன் உடலில் கீறிவிட்டது. கூரிய குளம்பையுடைய அக்குதிரை கொடிது! கொடிது!! அதை ஊர்ந்த வாதுவ! வாழி.' என்றும் கூறுகிறாள்

**சிந்திப்போம் செயற்படுவோம்**

'உடலில் வண்ணம் தீட்டியதுபோலத் தெரிகிறதே! கவ்வியதுஅந்தக் குதிரைதானோ? சீ! அச்சமின்றிக் கடித்த அக்குதிரை கொடிய நஞ்சு அல்லவோ?' என்று தொடர்கிறாள். அதனை மட்டும் சிறிது செய்யுள் வடிவில் காண்போம். முதலில் பொருளை உரைநடையில் பார்ப்போம்.

நீர் ஊர்ந்த குதிரை எது என்பதை அறிந்து கொண்டேன். நன்று. அது முறையாக மணம் செய்து அறவழியில் வந்த குதிரை அல்ல. பாணன் தூது போக ஒரு வகையில் வந்த பரத்தை என்னும் பழியிக்க குதிரை. நிச்சயம் அது உன் உருவை அழிக்கும். அக்குதிரையில் சவாரி செய்யாதே! இல்லை இல்லை அப்படி ஊர்ந்து செல்லவிரும்பினால் இப்பொழுதே செல்! செல்! என்று பிணங்கினாள். இனி பாடலின் ஒரு பகுதியை மட்டும் காண்போம்.

*'ஏந்து எழில் மார்ப எதிர் அல்ல நின்வாய்ச் சொல்*

.............................................................

*மிகநன்று; இனி அறிந்தேன் இன்று நீ ஊர்ந்த குதிரை,*
*பெருமணம் பண்ணி அறத்தினிற் கொண்ட*
*பருமக் குதிரையோ! அன்று பெரும்! நின்*
*ஏதில் பெரும் பாணன் தூது ஆட ஆங்கேயோர்*
*வாதத்தான் வந்த வரிக்குதிரை; ஆதி*
*உரு அழிக்கும்; அக்குதிரை ஊரல்; நீ ஊரின் பரத்தை*
*பரியாக, வாதுவனாய் என்றும் மற்று அச்சார்த்*
*திரிகுதிரை ஏறிய செல்'* (மருதக்கவி 31)

பழந்தமிழர் தமது புதல்வியரைப் பல்வகையான அணிகலங்களைக் கொண்டு அழகுபடுத்தி வாழ்ந்தனர். அகதன்றி வளர்ப்புப் பிராணிகளையும் அழகுபடுத்தி, ஆரா இன்பம் துய்த்தனர்.

திருமணம் இயற்றி வாழ்வதே அறத்தொடு கூடிய வாழ்வென எண்ணினர். ஒழுக்கம் பிறழ்ந்த கணவர்களை தெண்டொடியர் இடித்திடித்துரைத்து அறவழி நிற்க வைத்தனர் என்றெல்லாம் அறிந்து கொள்ள இயல்கிறது.

மருதக்கலி தந்த மருதன் இளநாகனாரை வாழ்த்தி ஏத்துவோம்.

(தொடரும்) *சிகண்டியார்*

## என் பிரிய பூமி........................

(X பக்கத் தொடர்ச்சி)

தித்திருக்கிறோம்... எங்களைத் தவிர வேறும் யாரோ இந்த இடத்துக்கு ஊர்தியில் வந்திருக்கிறார்கள்..."

"அதுவும் நேற்றோ அல்லது சில நாள்களின் முன்னரோதான்..."

"ஆம்! சக்ரங்களின் அழுத்தத்துக்கு உட்பட்ட மண்ணில் ஈரம் இன்னும் இருக்கிறது..."

"சாதாரணமாய் எவரும் மிதித்திராத இந்த நிலப் பகுதியில் மனிதர்கள் வந்திருப்பார்கள் என்று கற்பனை கூடச் செய்யத் தேவையில்லை..."

"அப்படியானால் நாசகாரிகள் தான் ஊர்தியில் வந்திருப்பார்கள் என்கிறாயா?"

"அப்படியும் இருக்க முடியாது. அவர்கள் வசம் இதேபோன்ற பூமிக்குரிய ஊர்திகள் இருப்பதாக எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையே. இந்தச் சக்கர அடையாளம் எங்களது ஊர்தி வகையைச் சேர்ந்த பூமியின் ஊர்தியொன்றினது சில்லு அடையாளத்தை மிகவும் ஒத்திருக்கின்றது..."

"ஆனால், பூமியின் மனிதர்கள் நாசகாரிகளின் வரவு நிகழ்கின்ற இந்த அபாயப் பிரதேசத்துக்கு என்ன காரணத்துக்காக வந்திருக்க முடியும்?"

"ஆம்! தொடர்புசாதனங்கள் மூலம் இயற்கை ஆய்வாளர்கள், வனவிலங்கு பராமரிப்பாளர்கள் ஆகியோருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. 'மேய்கு' பிரதேசத்தில் நாசகாரிகளின் வருகை நிகழ்வதால் இங்கு செல்ல வேண்டாமென இப்பொழுதும் அறிவுறுத்தப்படுகிறது. அப்படியிருக்க மனிதர்கள் யாரேனும் இங்கு வந்திருக்கக்கூடும் என்பதனையும் நம்பமுடியவில்லை."

"அப்படியானால் பூமியின் சாதாரண மனிதர்கள், அந்நிய கிரக நாசகாரிகள் தவிர்ந்த மூன்றாவது வகை நபர்கள் யாரேனும் வருவதாக அல்லவா எடுத்துக் கொள்ளவேண்டும்?"

"ஆம்! எங்களைத் தவிர, விசேட காரணத்தின் நிமித்தம் இன்னும் யாரோ வந்திருக்கிறார்கள்...."

"எதிர்பாராத திருப்பம் இது!"

"ஆம்!"

"இந்தச் சக்கரங்களின் சுவட்டைச் சற்றுத் தூரம் பின்பற்றிச் செல்வோம். இந்த ஊர்தியின் பயணத் திசை பற்றி அறிந்து கொள்வது நல்லது...." நிக்கலஸ் சொல்ல அவர்கள் ஆமோதித்தார்கள். மண்ணின் சுவட்டைத் தொடர்ந்து நடந்தார்கள்.

ஏறத்தாழ ஒரு மணிநேரம் கழிந்திருக்கும். அவர்கள் நிறையத் தூரம் நடந்துவிட்டிருந்தார்கள். களைப்பு மேலிடச் சற்று நேரம் ஓய்வெடுத்தார்கள். இவான் திசைகாட்டியையும் 'மேய்கு'வரைபடத்தையும் எடுத்துத் தங்கள் பாதை தொடரும் திசையை அவதானித்தான்.

"நிக்கலஸ், இந்தச் சுவடு காட்டின் வெளிப்பகுதியை நோக்கி - அதாவது நகரம் நோக்கி நம்மை அழைத்துச்செல்கின்றதென நினைக்கிறேன்."

"அப்படியானால் இந்த மர்ம ஊர்தியில்வந்தவர்கள் நகருக்குள் சென்றிருக்கிறார்களா?"

"அப்படித்தான் தோன்றுகிறது"

"எனின் நாங்கள் இப்போதே வந்த வழியே திரும்புவது நல்லது........"

"ஆம், மீண்டும் எங்கள் ஊர்தி தங்கியுள்ள இடத்திற்குப் போக வேண்டும். இருட்டிவிட்டால் மண்ணில் சுவடு தெரியாது. இப்பொழுதே புறப்பட்டால்தான் நல்லது."

அவர்கள் மீண்டும் வந்தவழியே திரும்பி நடக்கத் தொடங்கினார்கள். மூவரின் எண்ணங்களிலும் விடையற்றுப் பல வினாக்கள் எழுந்தன.

"எனக்கு ஓர் எண்ணம் எழுகிறது..........." இவானின் குரலில் சற்றே அச்சமும் திகிலும் கலந்திருப்பதாய்ப்பட்டது .

"என்ன இவான்?"

"ஒருவேளைநாசகாரிகளின் ஊடுருவல் பூமியின் மனிதர்களிடையே நிகழ்ந்திருக்கலாம்"

"அப்படியானால் ......... ?"

"நாசகாரிகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற மனிதர்கள் யாரேனும் அவர்களது செயலுக்கு உதவி புரிந்து கொண்டு நகருக்குள் மறைந்து வாழ்கின்றார்களோ எனச் சந்தேகிக்கின்றேன் ......"

இவானின் பதிலுக்கு,நிசப்தமான அந்தக் காட்டின் அமைதியில் அவர்கள் உறைந்து நின்றார்கள். சிசிலியாவின் நினைவில் அக்கினிச் சுவாலைகளிடையே மழலைப் புன்னகையுடன் யூலியன் ஒருகணம் தோன்றி மறைந்தான்.

*  *  *

சீலியா ஆழ்ந்த மயக்கத்துள் அமிழ்ந்திருந்தாள். அவளுக்கு நினைவு திரும்ப ஏறத்தாழ இருபத்து நான்கு மணித்தியாலங்கள் செல்லலாம். நினைவு திரும்பும் வேளையில் இன்னுமொரு ஊசியை ஏற்றிவிட்டால் மீண்டும் மயக்கம். அவளின் நினைவுகளுக்குக் கட்டாய ஓய்வு கொடுக்க வேண்டிய பொழுதில் எல்லாம் ஜோர்ஜ் இப்படித்தான் செய்வதுண்டு. ஒரேயொரு செல்வ மைந்தனைப் பிரிந்த துயரம் என்பது தாங்கிக் கொள்வதற்குச் சாதாரணமானதல்ல.

ஜோர்ஜ் ஒருகணம் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். சலனமின்றி வாடிய இதழ்போல அவள் மயக்கத்துள் புதைந்திருந்தாள்.... இன்னும் எத்தனை காலத்துக்கு இந்தத் துன்பத்தை அனுமதிக்க முடியும்?! ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று எழுந்தது அவருள்.

இனிமேலும் அவர் அங்கு தாமதிக்க முடியாது......... அவருக்கு அழைப்பு வந்திருக்கிறது. அந்த அழைப்பின் அருகே எதுவும் இரண்டாம் பட்சம்தான் - சீலியா கூட. அநேக தடவைகளைப் போல, இம்முறையும் அவர் அவளிடம் விடை பெறாமலே புறப்பட்டு விடுவார். முதிய பணியாள் டேவிட் சீலியாவுக்குத் தகவல் சொல்வான். அவள் நினைவு திரும்பும் போது. அவள் விரக்தி நிறைந்த வெறுமையுடன் காத்திருப்பாள் - வழமைபோல.

அறையின் வெளியே வந்து அழைப்புமணியை அழுத்தினார் ஜோர்ஜ். சிலநொடிகளில் டேவிட் அவர் முன் நின்றான்.

"குறிப்பேட்டில் நான் எழுதி வைத்திருக்கிறபடி அவளுக்குரிய உணவுப் பதார்த்தங்களை ஊசி மூலம் செலுத்தவேண்டும். நான் திரும்பி வரும் வரை அவளைச் சுயநினைவுக்குத் திரும்பிவிட அனுமதிக்காதே.....!"

டேவிட் சம்மதமாய்த் தலையசைத்தான். ஜோர்ஜ் அவனருகே வந்தார்.

"டேவிட்... அவள்... அவள்... மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறாள்... அவளை மிகக் கவனமாய்ப் பராமரிக்க வேண்டும்.... ஒரு குழந்தையைப் போல...." அவர் குரல் உணர்ச்சிவசப்பட்டிருந்தது.

"நிச்சயமாக ஐயா. எஜமானியம்மா என் சொந்த மகளுக்குச் சமமானவர்கள் ..."

"ஆம் எனக்கு உன்மேல் நம்பிக்கை இருக்கிறது....."

"ஐயா அவள் மகிழ்வாக இருக்கவேண்டும் என்பதை நான் எவ்வளவு விரும்புகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்... உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா...... தயவுசெய்து....?"

"கேள்......"

"இன்னும் எத்தனை நாள்களுக்கு அவள் இந்தத் துன்பச் சூழலில் அமிழ்ந்திருக்க வேண்டும்? இந்தக் கிழவன் உயிரை விட்டுவிட முன்பு அவளைப் பழைய சீலியாவாக, பதின்மூன்று வருடங்களுக்கு முந்திய, மகிழ்ச்சி நிறைந்த சீலியாவாக இந்த விழிகள் காணும் பாக்கியம் கிடைக்குமா ஐயா....?"

ஜோர்ஜ் ஒருகணம் மௌனமாய் நின்றார்.

"இந்தக் கேள்விக்கான பதில் என்னிடம் இல்லை டேவிட்...."

ஜோர்ஜின் குரலில் துன்பம் வெளிப்படையாய்த் தெரிந்தது. டேவிட் எதுவும் பேசத் தோன்றாமல் சிலையாய் நின்றான். அவன் சுயநினைவுக்கு மீண்டபோது ஜோர்ஜின் ஊர்தி மாளிகை வாயிலை விட்டு விலகிப் பிரதான வீதியில் இறங்குவது தெரிந்தது.

(தொடரும்..)

---

## 'சிறுவர்சுடர்' விடைகள்

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

### வித்தியாசம் தெரிகிறதா?

01) தொப்பியிலுள்ள பூ
02) இமை
03) வயலினின் தந்திக் கம்பி
04) வால்
05) நிழல்
06) புல்
07) காது
08) மூக்கு
09) முகில்
10) சட்டை

### சொற்களை எழுதுங்கள்

1) கலடை
2) அரவை
3) மலழை
4) எனதை
5) பலகை

### அடுத்து வருபவை எவை?

1) 7, 63
2) I, K
3) 14, 17
4) T, S
5) 23, 3

### மரக்கறிகளைக் கண்டுபிடியுங்கள்

தக்காளி, வெண்டி, பீற்றூட், பாகல், முள்ளங்கி, கரட், கத்தரி, அவரை, கருணை.

---

## சண்டித்த.......

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோபமூட்டின.

"அடே சத்தம் போடாம ஓரமா நில்லு. உன்னை இப்ப விடேலாது"

அவன் கண்டிப்பான குரலில் சொன்னான். சங்கர் அவன் சொல்லுக்குக் கட்டுப்படவேண்டியிருந்தது.

அந்த நேரம் காவலரண் நோக்கி மோட்டார் சைக்கிளில் சிவநாதன் வந்து கொண்டிருந்தார். காவலரணை அண்மித்ததும் வேகத்தைக் குறைத்து இறங்கி நடந்தார்.

அப்போது அந்தச் சிப்பாய் சிவநாதனை அழைத்தான்.

"மாஸ்டர்! இவனை ஓங்களுக்குத் தெரியுமா?"

அவன் கை காட்டிய திசையில் கலங்கிய கண்களுடன் கைகளைக் நூறுக்காகக் கட்டிக் கொண்டு சங்கர் நின்றிருப்பதைக் கண்டார்.

"தெரியும் சேர்... நல்லாத் தெரியும்" அவர் பதில் சங்கரை உள்ளம் நெகிழவைத்தது.

"ஏய் பொய் சொல்லக் கூடாது எப்பிடித் தெரியும்?"

"இல்லை சேர். பொய் சொல்லேல்ல. இவன் என்ர ஸ்ருடண்ட்" அவரின் அடுத்த பதில் அவனை இன்னும் நெகிழ வைத்தது.

சிப்பாய் சங்கரை நோக்கித் திரும்பினான். "ஏய் ஐசியும் இல்லாம செக்பொயின்றிலும் இறங்காம சேட்டை விட்டது. அடுத்தமுறை இப்படிச் செய்தா பிடிச்சு கே. கே. எஸ். அனுப்பிறது. மாஸ்டர் சொன்னதால இப்ப விடுறது" என்று அவன் சொ[illegible]னதும் சங்கரின் போன உயிர் திரும[illegible] வந்தது.

கு[illegible]ிந்த தலை நிமிராமல் சைக்கிளை [illegible]டு நோக்கித் திரும்பியவன் ஒரு கணம் சிவநாதனை நிமிர்ந்து பார்த்தான். அவரும் அதே நேரம் அவனைப் பார்த்தார். 'இனியாவது திருந்தி நல்லபிள்ளையாக நட' என்று சொல்வது போல் அவர் பார்வையிருந்தது.

'இனி ஒரு போதும் இப்படியான தவறுகளைச் [illegible]சய்யமாட்டேன்' என வாக்குறுதியள[illegible]பது' போல் சங்கரின் பார்வை பதில் தந்தது.

(யாவும் கற்பனை)

---

## ஐந்தடக்கி இல........

(IX பக்கத் தொடர்ச்சி)

களும் இருக்கும். நிறைவுடலியில் கோடுகள் பெரும்பாலும் மறைந்து விடும். இது முக்கியமாக ஓர் ஊனுண்ணி. தவளைகள், மீன்கள், கிறஸ்ரேசியன்கள் (இறால், நண்டு போன்றவை), நத்தைகள், மண்புழுக்கள் போன்றவற்றை உணவாகக் கொள்ளும். இரவு நேரத்தில் வேறு உணவு தேடி வெளியே வருவதுண்டு. பிணமாகவோ, பிரிந்தழியும் சேதனவுறுப்பிற்குரிய பொருட்களாகவோ, எதுவாக இருந்தாலும் இதனால் உட்கொள்ளப்படும். நீருக்கு வெளியே நெடுநேரம் வெயில் காய்வதுமுண்டு. இந்த உப இனம் இலங்கைக்கு மாத்திரம் உரியது. மனிதன் உட்பட பல விலங்குகள் இதை உணவாகக் கொள்ள விரும்பும். *

---

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.148

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | | ■ | 10 | | | |
| 11 | | ■ | 12 | | | | ■ |
| | ■ | 13 | | | | ■ | 14 |
| 15 | | | | | ■ | 16 | |
| | ■ | 17 | | ■ | 18 | | |
| ■ | 19 | | ■ | 20 | | | |

### சொற்சிலம்பம் இல. 148

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................................

விலாசம்: ......................................................................

...........................................................................

.............................இங்கே வெட்டுக..................................

முடிவுத் திகதி:- 07 - 04 - 2000

### இடமிருந்து வலம்

1. நித்தியம். 5. அப்பாவி அல்லன். 7. அபராதம். 8. ஒரு மீன் வகை. 9. வாத்தியக் கருவி. 10. சாத்தனாருக்கு இந்த அடைமொழி உண்டு. 11. தாய் ஊட்டுவது. 12. வளர்ச்சிக்கு அவசியம் இது. 13. சங்கீதத்துடன் தொடர்புடையது. 15. கூட்டுத்தொகை. 16. புரவி. 17. காற்றடிப்பது. ஆங்கிலத்தில் உள்ளது. 18. அரசாங்கத்தின் கைவசம் இருப்பது. 19.ஓங்காரம். 20. பொதி சுமக்கும் வாகனம்.

### மேலிருந்து கீழ்

1. ஆதரவான - எதிரான தன்மைகள். 2. கடவுளுக்குப் படைக்கும் நைவேத்தியத்தில் ஒன்று. 3. கயிறு. 4. தமது. 5. அயல்நாடு. 6. குளிசை 8. வாஞ்சையுடன் கொடுப்பது. 10. ஓர் உப உணவுப் பொருள். 12.பழங்கதை. 13. ஓர் இராசி. 14. பெருமைக்குரியவர். 16. மந்தை. 18.பெண் அல்ல.

### சொற்சிலம்பம் 146 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. மாநகரசபை 7. தகர். 8. பாரதம். 10. வருமதி. 12. வண்மை. 13. பக்தன். 15. விலகும். 16. பேய். 17. அவம். 18. புதன். 20. கர. 21.முராரி. 23. ரம்பம். 24. சுடலை.

### மேலிருந்து கீழ்

1. மாதவன். 2. நகரு. 3. கர்மபலம். 4. சபா. 5. பைரவன். 6.அம்மைநோய். 9. தண். 11. திக்கு. 14. தம்புரா. 15. விவரம். 16. பேன். 17. அசுர. 19.தரிசு. 21. மும். 22. தலை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** செல்வி ச. சிவபாதசேகரம்,
115, ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு,

**இரண்டாம் பரிசு:-** ஜெ. கறோலின் றெனோ,
36/5, புனித ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு:-** க. நவரூபகாந்த்,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 147 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

# சொற்களை எழுதுங்கள்

கீறிட்ட இடங்களில் வரவேண்டிய சொற்களை எழுதுங்கள்.

(பகடை) என்பது (படகை) ஆகுமாயின்,

(கடலை) என்பது (..................) ஆகும்.

(அவரை) என்பது (..................) ஆகும்.

(மழலை) என்பது (..................) ஆகும்.

(எதனை) என்பது (..................) ஆகும்.

(பகலை) என்பது (..................) ஆகும்.

- வரன்.

# அடுத்து வருபவை எவை?

1) 1, 3, 3, 15, 5, 35, ....., .....

2) A, C, E, G, ......., ......

3) 2; 5, 8, 11, ......, .....


4) X, W, V, U, ......., ......

5) 3, 23, 11, 7, 1, 7, 11, ....., ......

மேலே சில ஆங்கில எழுத்துக்களும் சில இலக்கங்களும் ஐந்து தொகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலுள்ள எழுத்துக்களும், இலக்கங்களும் ஒவ்வொரு வித ஒழுங்கில் உள்ளன.


அவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதத்தை நன்கு அவதானித்து ஒவ்வொரு தொகுதியிலும் அடுத்து வரவேண்டிய எழுத்துக்கள் அல்லது இலக்கங்களை அவற்றுக்குரிய கீறிட்ட இடங்களில் எழுதுங்கள் பார்க்கலாம்.

# உயரப்பறப்பது எது?




இங்குள்ள ஐந்து பட்டங்களில் ஏனையவற்றை விட உயரமாகப் பறக்கும் பட்டம் எது என்று உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

# வித்தியாசம் தெரிகிறதா?



மேலுள்ள இரு படங்களுக்கும் இடையில் குறைந்தபட்சம் பத்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.




தொகுப்பு: நம்பி

# மொழிபெயர்க்கும் கணனிகள்!

**அங்கம் 1**

தனிச் சொற்களையும், குறுகிய சொற்றொடர்களையும் மொழிபெயர்ப்பது கணனி ஒன்றிற்குச் சுலபமான விடயமாகும். ஆனால், முழு ஆவணங்களையும் மொழிபெயர்ப்பது என்பது அவ்வளவு இலகுவானதல்ல.



பு. சஞ்சீவ்
தரம் 7 'D'
யாழ். இந்துக் கல்லூரி.

மொழி பெயர்ப்பென்பது ஒரு சொல்லுக்குப் பதிலாக வேறு சொல்லைப் புகுத்துவது மட்டும் அல்ல.

அநேகமான மொழிகளில் பல அர்த்தம் கொண்ட வார்த்தைகள் நிறைந்துள்ளன. அத்துடன் அவை பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தைப் பொறுத்தே அவற்றின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ளவும் முடியும்.

உதாரணமாக 'பயணிகளைக் கொண்டு செல்லும் மின்சார வண்டிகள் இந்த இடத்துக்கு அப்பால் செல்லலாகாது' (No Electric Passenger Carring Vehicles Beyond This Point) என்ற அறிவுத்தல் வாக்கியம் ஒரு கணனியை இலகுவாகக் குழப்பமடையச் செய்யும்.

வண்டி மின்சாரத்தில் இயங்குகிறதா? அல்லது பயணி மின்சாரத்தில் இயங்குகின்றாரா? என்று கணனியால் கூற முடியாது. அத்துடன் வண்டி பயணியைக் கொண்டு செல்கின்றதா? அல்லது பயணி வண்டியைக் கொண்டு செல்கின்றாரா? என்றும் கணனியால் கூற முடியாது.

கொச்சையான அல்லது தொழில்நுட்பச் சொற்கள் கணனியின் பணியைக் கடினமாக்குகின்றன. தொழில்நுட்பச் சொற்களை ஆரம்பத்தில் மொழி பெயர்ப்பதற்குக் கையாளப்பட்ட மொழி பெயர்ப்புத் திட்டமொன்று பொறியியலாளர்களைத் திகைப்பில் ஆழ்த்தியது. உதாரணத்துக்குத் தொழில்நுட்ப விடயங்களை மொழி பெயர்ப்புச் செய்யும்போது 'நீர் - ஆடு' (Water Sheep) என்ற பதம் கணனியில் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், உண்மையில் அங்கு குறிப்பிட வேண்டியது நீரின் விசையால் இயங்கும் பொறிகளையே ஆகும்.

(தொடரும்)

# மரக்கறிகளைக் கண்டுபிடியுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | அ | வ | பா | த | ரி | க | த் |
| ச | சி | க | த | க் | கா | ளி | டீ |
| ர | ல் | ர | அ | அ | வ | ரை | க |
| ணை | றா | ட் | றா | ற் | பீ | க | த் |
| ரு | பி | ண் | வெ | ண் | டி | கீ | த |
| க | ங் | கி | ங் | ள | ள் | மு | ரி |

மேலே கட்டங்களினுள் சில எழுத்துக்கள் தரப்பட்டுள்ள. இவற்றுள் ஒன்பது மரக்கறிகள் ஒளிந்துள்ளன. அவை இடமிருந்து வலமாகவோ - வலமிருந்து இடமாகவோ - மேலிருந்து கீழாகவோ - கீழிருந்து மேலாகவோ அல்லது குறுக்காகவோ அமைந்துள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

சிறுவர்சுடருக்கான உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன!
உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-
'சிறுவர்சுடர்',
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*சிறுவர்சுடரில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் XV ஆம் பக்கத்தில் உள்ளன.*

# தீர்ப்பு

ராஜபுரி என்ற நாட்டை சந்திரகாந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். வீரத்திலும், தீரத்திலும் சிறந்து விழங்கிய மன்னன் வீர விளையாட்டுக்களை மிகவும் ரசித்துவந்தான். ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றிபெற்றவர்களுக்குப் பொன்னும், பொருளும் அள்ளிக் கொடுத்துவந்தான்.

வழக்கம்போல அந்த ஆண்டும் சித்திரை மாதம் வந்தது. ராஜபுரியும் விளையாட்டுப் போட்டியைச் சந்திக்க விழாக்கோலம் கொண்



டது. பல நாட்டு விளையாட்டுவீரர்களும் ராஜபுரியில் வந்து குவிந்தனர்.

சித்திராபுரியைச் சேர்ந்த குமாரவர்மனும் அழகாபுரியைச் சேர்ந்த நாகதேவனும் மல்யுத்தப் போட்டியில் மற்ற மல்லர்கள் அனைவரையும் வென்று வெற்றி வாகை சூடினர். அடுத்துக் குமாரவர்மனும் நாகதேவனும் முதல் இடத்தை அடையப் போட்டியிட்டனர். மக்கள் வியக்கும் வண்ணம் கடுமையான போட்டி நடந்தது. இரு பெரும் மலைகள் மோதியது போல இருவரும் சண்டையிட்டார்கள். வெற்றி பெற்றவர் யார் என்பதை அறிந்து கொள்வது கூடக் கடினமாக இருந்தது. அந்த அளவுக்கு இருவரும் சமபலத்துடன் இருப்பதாகவே தோன்றியது. எனவே போட்டியின் முடிவை மறு நாள் அறிவிப்பதாகக் கூறி மன்னன் அரண்மனைக்குச் சென்றார்.

அரண்மனையை அடைந்த மன்னன் மல்யுத்தப் போட்டியைப் பற்றியே மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தான். கடைசியில் முடிவு காணாமல் அலுத்து தனது மந்திரி மதிவர்மனே இதற்குச் சரியான தீர்ப்பு அளிக்கக் கூடியவர் என்ற முடிவுக்கு வந்தார். மந்திரியின் உதவியையும் நாடினார்.

*(மந்திரி அளித்த தீர்ப்பு அடுத்த வாரம்)*

# உருளைக்கிழங்கு

கொழும்பில் இருந்து கப்பலில் உருளைக் கிழங்கு வந்தால் கிலோ ஐம்பது, அறுபது ரூபாவாகவும் கப்பல் வராவிட்டால் இருநூறு ரூபாவாகவும் யாழ்ப்பாணத்தில் விற்கப்படுகிறது.

ஒரு மனிதன் தினமும் பாலும் உருளைக் கிழங்கும் சாப்பிட்டால் போதும் - அவனது உடலுக்குத் தேவையான அனைத்துச் சக்திகளும் கிடைத்துவிடும். எல்லா நாட்டு மக்களின் உணவுத் தட்டிலும் இதனைப் பார்க்கலாம். அரிசி, கோதுமைக்குப் பின்பு எல்லோராலும் அதிகமாக சாப்பிடப்படுவது உருளைக்கிழங்குதான். எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் விளையக் கூடியது என்பதால் உலகின் முக்கிய வியாபாரப் பொருள்களில் ஒன்றாக இது இருக்கிறது.

சொந்தமாக தனிப்பட்ட எந்தச் சுவையையும் பெற்றிராத இந்தக்கிழங்கு இயற்கையிலேயே முறைப்படியாக உணவு ஊட்டத்துடன் வளர்ச்சி பெற்று நமக்குக் கிடைக்கிறது.

உருளைக்கிழங்கில் மாப்பொருளுடன் விற்றமின்C, விற்றமின்B போன்ற சத்துக்கள் உள்ளன. பாலை விடப் புரதச்சத்து இதில் அதிமாக உள்ளது.

சாப்பிட்டதும் உடனடியாக உடலுக்குச் சக்தி தரக்கூடிய முக்கியமான உணவுப் பொருள் உருளைக்கிழங்கு ஆகும். எளிதில் சமிபாடு அடையக்கூடிய தன்மையையும் உருளைக்கிழங்கு பெற்றுள்ளது. வயதானவர்களுக்குத் தேவையான புரதம், மாப்பொருள், சக்கரை என அனைத்துச் சத்துனவும் இதிலேயே கிடைத்து விடுகிறது.

மேலும் எளிதாகப் பல்வேறு வழிகளிலே சமைத்து உண்ணத்தக்க உணவாக அமைந்துள்ளதும் உருளைக்கிழங்கின் சிறப்பாகும்.

★